பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆவணி 14 வெள்ளிக்கிழமை (30-08-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:276

# எதிர்க்கட்சித் தலைவருடன் ஜே.வி.பி. கருத்து மோதல்

## அவர் மீது நம்பிக்கை இல்லை என்று நாடாளுமன்றில் அறிவிப்பு

கொழும்பு,ஓக.30

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பியும் நேற்று நாடாளுமன்றத்தில் மோதிக்கொண்டன. அரசின் மீது நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதம் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக சபாநாயகர் அறிவித்ததை அடுத்தே இருதரப்பினரும் கருத்துமோதல்களில் ஈடுபட்டனர். ஜே.வி.பி. உறுப்பினர் விமல் வீரவன்ச, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ மீது தங்களுக்கு நம்பிக்கையில்லை என்று குற்றஞ் சுமத்தினார். மஹிந்த ராஜபக்ஷவும் பதிலுக்கு ஜே.வி.பி. மீது குற்றம் சுமத்தினார்.

நேற்றுக்காலை 10 மணிக்கு சபை கூடி வழமையான அலுவல்கள் நடைபெற்ற பின்னர், நம்பிக்கை பிரேரணை மீதான விவாதம் ஒத்திவைக்கப்பட்டிருப்பதை அறிவித்த சபாநாயகர் ஜோசப மைக்கல் பெரேரா, எதிர்க்கட்சித் தலைவரின் கோரிக்கையின்பேரில், விவாதம் பின்போடப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்தார்.

இவ்வேளையில் எழுந்த ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச,

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு நாளை விடுவிக்கும்

# கைதிகளில் ஒன்பது பேர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தோர்

யாழ்ப்பாணம்,ஓக.30


ஓமந்தையில் நாளை இடம்பெறவுள்ள கைதிகள் பரிமாற்றத்தின்போது யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஒன்பது பேரும் அரசினால் விடுவிக்கப்படவிருக்கின்றனர்.

கடந்த காலங்களில் கைதுசெய்யப்பட்டு பல்வேறு சிறைகளில் தடுதது வைக்கப்பட்டிருந்த 23 கைதிகள் அரசினால் நாளை விடுவிக்கப்படவிருக்கின்றனர் என்பது தெரிந்ததே. அவர்களிலேயே இந்த 9 பேரும் அடங்கியுள்ளனர்.

நாளை காலை 9.30 மணியளவில் ஓமந்தையில் இந்தக் கைதிகள் பரிமாற்றத்தில் இடம்பெறும் விடுவிக்கப்படவிருக்கும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 9 பேரின் விவரங்கள் வருமாறு:-

(14 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ உதவி குறித்து ஆராய அமெரிக்க அதிகாரிகள் வருகை!



யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் நேற்று திடீரென்று 1 மணிநேர 'பிக்கெட்டிங்'கில் ஈடுபட்டனர். அப்போது எடுக்கப்பட்ட படம் இது.

பல்கலைக்கழக பாதுகாப்பு ஊழியர்களுக்கு வழங்குவதற்கான காலணிகள் கொள்வனவில் முறைகேடுகள் நடந்திருப்பதாகவும் -

அது குறித்து விசாரிப்பதில் நிர்வாகம் அசமந்தப் போக்கை கடைப்பிடிப்பதாகவும் ஊழியர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். அதனைக் குறியீடு மூலம் காட்டும் செயலே இது.

## நாளைமறுதினம்முதல் நான்கு நாள்கள் இங்கு தங்கியிருந்து விவரம் சேகரிப்பர்

கொழும்பு,ஓகஸ்ட்30

**இராணுவ மற்றும் பாதுகாப்பு உதவிகளை இலங்கைக்கு வழங்குவது குறித்து ஆராய்வதற்காக அமெரிக்காவின் உயர்மட்ட அதிகாரிகள் குழு ஒன்று கொழும்பு வருகின்றது.**

**நாளை மறுதினம் இங்குவரும் இக்குழுவினர் எதிர்வரும் நான்காம் திகதி வரை நான்கு நாள்கள் இங்கு தங்கியிருந்து தாங்கள் உதவி வழங்க வேண்டிய விடயங்கள் குறித்து விவரங்களைத் திரட்டி நிலைமைகளைப் பரிசீலிப்பர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.**

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சின் அலுவலகம் மற்றும் அமெரிக்கத் தேசியப் பாதுகாப்புப் பல்கலைக்கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் குழுவே இலங்கை வருகின்றது.

இராஜதந்திரத் தூதுவரும், அமெரிக்க தேசியப் பாதுகாப்புப் பல்கலைக்

(14 ஆம் பக்கம் பார்க்க)

# காரைநகரில் பொதுமக்கள்மீது கடற்படையினர் தாக்குதல்!

## 3 மாணவர்கள் உட்பட 8 பேர் காயம்

காரைநகர்ஓக.30

காரைநகர் பிட்டியெல்லைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் கடற்படையினர் பொதுமக்கள் மீது மேற்கொண்ட தாக்குதலில் பாடசாலை மாணவர்கள் மூவர் உட்பட எட்டுப்பேர் காயமடைந்தனர்.

அந்தப் பகுதியில் இரவு நேரம் நடமாடிய கடற்படையினர் வீதியால் வந்த பொதுமக்களை மறித்துத் தாக்கியதாகவும் -

அவர்களின் சைக்கிள்களின் வால்க்கட்டைகளைக் கழற்றி எறிந்ததாகவும் - பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

அப்பகுதியால் வந்த பெண்கள் சிலரை கெட்ட வார்த்தைகளால் கடற்படையினர் ஏசினர் என்றும் -

அப்பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் புகுந்து அவ்வீட்டில் இருந்தவர்களை மிரட்டி வெளியேற்றினர் என்றும் - மேலும் கூறப்பட்டது.

பாடசாலை மாணவர்களான த. காண்டீபன் (வயது 16), த.குகதாசன் (வயது 13), சி.தயாபரதனன் (வயது 16) ஆகியோரும் அபிரபாகரன்(வயது 22),

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மறியல் போராட்டம் நடத்த முஸ்தீபு!

காரைநகர்,ஓக.30

காரைநகரில் நேற்றுமுன்தினம் இரவு பொதுமக்கள் மீது கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்து கண்டனப்பேரணி, வீதி மறிப்புப் போராட்டங்களை நடத்தப் பொதுஅமைப்புகள் முடிவு செய்துள்ளன.

கடற்படையினரின் தாக்குதல் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறையிடுவதென்றும் -

தமக்கு உரிய பதிலை அந்த அதிகாரிகள் வழங்காவிட்டால் அடுத்த வாரம் போராட்டங்களை முன்னெடுப்பது என்றும் -

(14 ஆம் பக்கம் பார்க்க)

# நம்பிக்கைப் பிரேரணை: விவாதம் ஒத்திவைப்பு!

கொழும்பு,ஓக.30

அரசு மீது நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதம் பின்போடப்பட்டிருக்கிறது. அந்த விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெறவிருந்தது.

கட்சித் தலைவர்களின் இணக்கத்தின்படி நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதம் பின்போடப்பட்டிருப்பதாக சபாநாயகர் ஜோசப் மைக்கேல் பெரேரா நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

காலையில் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது என்றும் சபாநாயகர் தெரிவித்தார். (ம)

## முன்னரங்க நிலைகளை 400 மீற்றர் பின் நகர்த்தி

# வலி.வடக்கில் பலாலிக்குத் தெற்கே மீளக் குடியமர விரைவில் அனுமதி!

யாழ்ப்பாணம்,ஓக.30

வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்டுள்ள பகுதியில் தற்போது உள்ள முன்னரங்க நிலைகளில் இருந்து 400 மீற்றர் தூரம் உள்நோக்கி மக்களை மீளக் குடியமர அனுமதிப்பதற்கு இராணுவம் முடிவு செய்துள்ளது. இதன்படி பலாலி இராணுவ முகாமுக்குத் தெற்காக முகாமிலிருந்து 600 மீற்றர் தூரத்தில் 20 கிலோமீற்றர் நீளத்துக்கு புதிய முன்னரங்க நிலைகள் அமைக்கப்படும். இது தவிர்ந்த ஏனைய பகுதிகளில மக்கள் குடியமர அனுமதிக்கப்படுவர்.

இதற்காக அப்பகுதியில் உள்ள கண்ணிவெடிகளை அகற்றும் பணி விரைவில் ஆரம்பிக்கப்படும்.

யாழ்.சுபாஸ் ஹோட்டலில் நேற்று நடந்த உயர்மட்ட மாநாட்டில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டது.

யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா தலைமையில் இந்த மாநாடு இடம்பெற்றது.

பதில் அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் மற்றும் யாழ்ப்பாணம், சாவகச்சேரி பிரதேச செயலர்கள் இந்த மாநாட்டில் பங்குபற்றினர்.

பாதுகாப்பு அமைச்சுச் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தலைமையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட சமயம் எடுக்கப்பட்ட முடிவுகளின் நடைமுறை முன்னேற்றம் குறித்து ஆராய இந்த மாநாடு கூட்டப்

(14 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# விளையாட்டு

## 2003 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தென்னாபிரிக்க அதிபர் ஆரம்பித்து வைப்பார்

2003ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளை தென்னாபிரிக்க ஜனாதிபதி தாபோ எம்பேக்கி அங்குரார்ப்பணம் செய்துவைப்பார்.

- இவ்வாறு உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான நிறைவேற்று இயக்குநர் டாக்டர் அலி பக்கர் திங்கன்று அறிவித்தார்.

அடுத்த வருடம் பெப்ரவரி 8 ஆம் திகதி உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான ஆரம்ப விழா நடைபெறவுள்ளது.

மிகுந்த வேலைப்பளுவுக்கு மத்தியில் ஜனாதிபதி எம்பேக்கி இவ் விழாவில் பங்குபற்ற இணக்கம் தெரிவித்தமையையிட்டு அலிபக்கர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

பெப்ரவரி 7 ஆம் திகதி மாலை தென்னாபிரிக்க நாடாளுமன்ற அங்குரார்ப்பண வைபவத்தில் எம்பேக்கி உரையாற்றவுள்ளார். மறுநாள் காலை உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளின் ஆரம்ப விழாவில் அவர் கௌரவ அதிதியாகக் கலந்துகொள்வார்.

நியூலேண்ட்ஸ் கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்ப விழா நடைபெறவுள்ளது. சுமார் 2 மணித்தியாலங்களாக வைபவம் நடைபெறும்

ஆரம்பவிழா கண்காட்சிகள் ஆபிரிக்கக் கண்டத்தில் இதுவரை நடைபெறாத அளவுக்குச் சிறப்பாக இருக்குமென ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். ஆரம்ப வைபவத்துக்கு 2.3 கோடி 'ராண்ட்' செலவிடப்படவுள்ளது. 4000 கலைஞர்கள் நிகழ்ச்சிகளில் பங்குபற்றவுள்ளனர்.

உலகக் கிண்ணப்போட்டிகள் பெப்ரவரி 9 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

### ஐ.சி.சியின் விளம்பர ஒப்பந்த விவகாரம்:

## இலங்கை வீரர்களின் நிபந்தனைக்கு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை மறுப்பு

ஐ.சி.சி. சம்பியன் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்காக இலங்கை அணிவீரர்கள் விதித்த நிபந்தனைக்கு இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை மறுப்புத்தெரிவித்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டுமானால் ஐ.சி.சி. கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைக்கு வழங்கும் உத்தரவாதப்பணத்தில் 30 சதவீதத்தை தமக்கு வழங்கவேண்டும்.

- இவ்வாறு இலங்கை கிரிக்கெட் வீரர்களின் சங்கத்தின் மூலம் கடந்தவாரம் இலங்கை அணியினர் தெரிவித்திருந்தனர். தமக்கு வழங்கப்படும் மாதாந்த ஊதியத்திற்கு மேலதிகமாகவே இப்பணத்தை வீரர்கள் கோரினர்.

இந்நிபந்தனையை நிறைவேற்ற முடியாதுள்ளது என கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை நேற்று அறிவித்துவிட்டது.

"இவ்வருடத்தில் கிரிக்கெட்சபையின் நிதிநிலைமை சிறப்பாக இல்லை. இதனால், கிரிக்கெட் வீரர்களின் சங்கத்தினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை நிறைவேற்றமுடியாதுள்ளது."

- இவ்வாறு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் பேச்சாளர் ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

"கிரிக்கெட் வீரர்கள் இத்தகைய நிபந்தனை விதிப்பது உகந்ததல்ல. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவர்கள் இலாபமீட்டமுற்படுகின்றனர்.

"ஐ.சி.சி.விதித்துள்ள நிபந்தனைகளால் இவ்வீரர்களுக்கு தீவிரமான பாதிப்பு ஏற்பட்டுள்ளதென நான் கருதவில்லை."

- இவ்வாறு அப்பேச்சாளர் மேலும் கூறினார்.

ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது தொடர்பான பேச்சுக்கள் இன்று வெள்ளிக்கிழமைக்கு முன் பூர்த்தியாக வேண்டுமென ஐசிசி காலக்கெடு விதித்துள்ளது.

இக்காலக்கெடு முடிவடைவதற்கு 24மணித்தியாலங்களுக்குமுன்னர் வீரர்களின் கோரிக்கையை இலங்கைக் கிரிக்கெட்சபை நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அண்மையில் பலம் குன்றிய பங்களாதேஷ் அணியுடன் இலங்கை அணி 2டெஸ்ட் போட்டிகளிலும், 3 ஒருநாள் போட்டிகளிலும் மோதியது

இது தவிர இவ்வருட இறுதிவரை வேறு சர்வதேசப் போட்டிகள் இலங்கையில் நடத்தத் திட்டமிடப்படவில்லை. இதனால், இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைக்கு இவ் வருட வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது.

ஐ.சி.சி.சம்பியன்ஷிப் போட்டிகள் மூலம் பெறும் இலாபங்கள் ஐ.சி.சி. இற்கே உரியவை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## எந்த அணியையும் பாகிஸ்தான் வெல்லும்!

### ஆஸி. பயிற்றுநர் போர்டர் கூறுகிறார்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி எந்தவோர் அணியையும் வெல்லும் ஆற்றல் மிக்கது.

- இவ்வாறு ஆஸ்திரேலிய அணியின் தற்காலிகப் பயிற்றுநர் அலன் போர்டர் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், கென்யா அணிகளுக்கிடையிலான முக்கோணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி கென்யாவில் நேற்று ஆரம்பமானது.

இப்போட்டிகளுக்கு முன்பாக புதனன்று நடைபெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றிலேயே அலன் போர்டர் மேற்கண்டவாறு கூறினார்.

'மொராக்கோ கிண்ணப்போட்டிகளில் பாகிஸ்தான் அணி சிறப்பாக விளையாடவில்லை எனினும், தற்போதும் எந்தவொரு முன்னணி அணியையும் வெல்லக் கூடிய அணியாக பாகிஸ்தான் விளங்குகிறது.

ஆனால், ஒருநாள் போட்டிகளில் உலக சம்பியன்கள் என்ற வகையில நாம் எமது சகல திறமைகளையும் வெளிப்படுத்துவோம்.

- இவ்வாறு போர்டர் கூறினார்.

ஆஸ்திரேலிய அணியின் பயிற்றுநர் ஜோன் புச்சான் முதுகுவலியினால் பாதிக்கப்பட்டுள்ளார். இதனால் முன்னாள் அணித் தலைவரான அலன் போர்டர் இறுதி நிமிடத்தில் ஆஸி. அணியின் பயிற்றுநராகப் பொறுப்பேற்றார்.

கென்ய முக்கோணத் தொடரில் நேற்று பாகிஸ்தான், கென்ய அணிகள் மோதின. இன்று ஆஸ்திரேலியா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டி நடைபெறவுள்ளது.

இறுதியாக 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஆஸ்திரேலிய அணி கென்யாவுக்கு விஜயம் செய்தது. அப்போது ஐ.சி.சி. கிண்ணத்திற்கான முதலாவது போட்டியிலேயே ஆஸ்திரேலியா தோல்வியுற்றமை குறிப்பிடத்தக்கது."

பாகிஸ்தான் அணித் தலைவர் வக்கார் யூனுஸ் இந்தச் செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையில் -

"மொரோக்கோவில் பாகிஸ்தான் அணி திறமையை வெளிப்படுத்தத் தவறிவிட்டது" என்றார்.

"மொரோக்கோவில் பாகிஸ்தான் அணி துரதிஷ்டவசமாக சோபிக்கவில்லை. ஆனால், எந்தவொரு சிறந்த அணியையும் தோற்கடிக்கத்தக்க அணியாக நாம் இன்னும் திகழ்கிறோம்.

"வேகப் பந்து வீச்சாளர் சொஹைப் அக்தாரின் மீள்வருகை அணிக்கு உற்சாகமளித்துள்ளது." - இவ்வாறு வக்கார் யூனுஸ் கூறினார்.

கென்ய அணியின் பயிற்றுநர் கருத்துத் தெரிவிக்கையில், "உலக சம்பியன்களிடம் தோற்பது வெட்கக்கேடானது அல்ல. ஆனால், அவ்வணிகளை வெல்வது மிகப்பெரிய விடயம்" என்றார்.

"நாம் மிகவும் பின்னடைவில் உள்ள அணிதான். எனினும் கிரிக்கெட்டில் என்ன நடக்கும் என்று கூறமுடியாது. நாமும் வெல்லமுடியும்."

- இவ்வாறு கென்ய அணித்தலைவர் ஸ்ரீவ் ரிக்கினோ கூறினார்.

# பல்கலை. ஊழியர்கள் நேற்று ஒரு மணி நேரம் 'பிக்கெட்டிங்'

யாழ்ப்பாணம்,ஓக.30

யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு எதிராக பல்கலைக்கழக ஊழியர் சங்கம் பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டம் ஒன்றை நேற்று நண்பகல் நடத்தியது.

முற்பகல் 11 மணிக்கு தமது பணிகளைப் பகிஷ்கரித்த பல்கலைக்கழக ஊழியர்கள் இராமநாதன் மண்டபம் முன் கூடி ஒரு மணி நேரம் 'பிக்கெட்டிங்' செய்தனர்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற இரும்புச்சலாகை மற்றும் பாதுகாப்பு ஊழியர் காலணி கொள்வனவு தொடர்பான விசாரணைகளை யாழ்பல்கலைக்கழக நிர்வாகம் கையாளும் விதம் தொடர்பான தமக்குள்ள அதிருப்தியையும் -

பல்கலைக்கழக நிர்வாகத்தின் அசமந்தமான போக்கினாலும் தவறான சுற்றுநிருப வியாக்கியானங்களாலும் பல்கலைக்கழக ஊழியர்கள் பாதிப்படைவதையும் -

அரசியல் ரீதியான மற்றும் சுயலாபம் கருதிய போக்குகளாலும், நியமனங்களாலும் பல்கலைக்கழக நலன் பாதிப்படைவதையும் -

வெளிக்கொணரும் வகையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது என்று பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள பல்கலைக்கழக பேரவைக் கூடடத்தில் தமது கோரிக்கைகளுக்கு ஒரு சாதகமான பதில் தரப்படாவிட்டால் தமது போராட்டங்களை மேலும் விஸ்திரிக்கவுள்ளதாகவும் ஊழியர்கள் தெரிவித்தனர்.

பல்கலைக்கழக நிர்வாகத்தின் சீர்கேடுகளைச் சுட்டிக்காட்டும் சுலோகங்கள் கொண்ட அட்டைகள் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள மரங்களிலும் பிரதான வாயிலிலும் கட்டப்பட்டிருந்தன. (ம-8)



யாழ்.பல்கலைக்கழக ஊழியர்கள் நேற்று இராமநாதன் மண்டபம் முன்பாக கூடி நின்று 'பிக்கெட்டிங்'கில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட படம். *(படம்:தேவராஜன்)*

### நாரந்தனை தாக்குதல் சம்பவம்

## விசாரணைக்கு உடன் வருமாறு கடற்படை அதிகாரிக்கு அழைப்பு

### மனித உரிமைகள் ஆணைக்குழு விடுத்தது

யாழ்ப்பாணம்,ஓக.30

நாரந்தனையில் உள்ள கள்ளுத் தவறணை ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைக்காக தீவக கடற்படைக் கட்டளை அதிகாரியை உடன் தமது அலுவலகத்தில் சமுகமளிக்கும்படி மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலக இணைப்பாளர் கோரியுள்ளார்.

கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ள முறைப்பாடு குறித்து விசாரணை செய்ய தமது அலுவலகத்துக்கு கடந்த 27 ஆம் திக்தி சமுகமளிக்கும்படி தீவக கடற்படைக் கட்டளைஅதிகாரிக்கு இணைப்பாளர் அழைப்பு விடுத்திருந்தார்.

ஆனால் குறிப்பிட்ட திகதியில் அவர் சமுகமளிக்கவில்லை. இதனை அடுத்து அவரை நேற்று சமுகமளிக்கும்படி இணைப்பாளர் மீண்டும் அழைப்பு' விடுத்திருந்தார்.

இந்த அழைப்பை ஏற்று லெப்டினன்ட் தரத்தில் உள்ள கடற்படை அதிகாரி ஒருவரை கட்டளை அதிகாரி மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்துக்கு அனுப்பி வைத்திருந்தார்.

சம்பந்தப்பட்ட விசாரணைக்கு தீவக கட்டளை அதிகாரியே நேரில் சமுகளிக்க வேண்டும் என்றும் - உடனடியாக அவரைத் தமது அலுவலகத்துக்குச் சமுகமளிக்கும்படி கூறுமாறும் - வந்த அதிகாரியிடம் தெரிவித்த இணைப்பாளர் அவரைத் திருப்பி அனுப்பினார். (ம-3-12)

### நல்லூர் ஆலயச் சூழலில்

## பொதுமக்களுக்கு இடையூறாக வாகனங்களை செலுத்த வேண்டாம்

### யாழ்.மேயர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.30

நல்லூர் ஆலய உற்சவத்தை ஒட்டி அமைக்கப்பட்டுள்ள வீதித்தடை முகாம்கள் ஊடாக அனுமதி அட்டையுடன் செல்பவர்கள் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கக் கூடாது என்று யாழ்மேயர் செல்லன் கந்தையன் கோரியுள்ளார்.

உற்சவம் சிறப்பாக நடக்க அனைவரது ஒத்துழைப்பையும் கோரி அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு-

- தினமும் ஆலயத்திற்கு வருகை தரும் பக்தர்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக சைவசமய முறைப்படி வருகை தருதல் விரும்பத்தக்கது.
- வீதித் டைகளூடாக வாகனங்களைக் கொண்டு செல்லுவதற்கு மாநகரசபையினால் வழங்கப்பட்ட அனுமதி அட்டைகளை துஷ்பிரயோகம் செய்யாது அனுமதி அட்டையில் குறிப்பிடப்பட்ட வீதித் தடையூடாக போக்குவரத்து செய்வதற்கு மட்டுமே அவற்றைப் பயன்படுத்துதல் வேண்டும்.
- தடைமுகாம்களில் கடமைபுரியும் மாநகரசபைப் பணியாளர்கள், தொண்டர்கள் ஆகியோர் தமது கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதற்கு அனைத்து அடியார்களும் ஒத்துழைப்பு வழங்குதல் அவசியமாகும்.
- வீதித்தடை முகாம்களுக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் விற்பனை நிலையங்களுக்குத் தேவையான பொருள்களை தினமும் பிற்பகல் 1.00 மணிமுதல் 2.00 மணிவரையும், இரவு நேரங்களில் 8.00 மணிக்குப் பின்னரும் வாகனங்களில் எடுத்துச் செல்வதற்கான அனுமதிகளைக் காண்பிக்குமிடத்து குறிப்பிட்ட வாகனங்கள் உட்செல்ல அனுமதிக்கப்படும்.
- வீதித் தடைமுகாம்களூடாக வாகனங்கள் உட்செல்லுவதற்கான அனுமதி தம்மிடம் உண்டு என்ற ஒரே காரணத்திற்காக வீதிகளில் செல்லும் பொதுமக்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தாது வாகனங்களை உருட்டியோ அல்லது மெதுவாகச் செலுத்தியோ செல்லுவதன் மூலம் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன். (ம-3)

## தமிழக அமைச்சர் திடீர் பதவிநீக்கம்

சென்னை,ஓக.30

தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் விஸ்வநாதனை தமிழக முதல்வர் ஜெயலலிதா நேற்று திடீரெனப் பதவிநீக்கம் செய்தார்.

ஆனால், அவர் எதற்காகப் பதவி நீக்கம் செய்யப்பட்டார் என்பது அறிவிக்கப்படவில்லை.

இதற்கிடையே, மதுரை அருகே குழந்தைகளை மண்ணில் ஒரு நிமிடம் புதைத்து மீட்கும் திருவிழாவில் கலந்துகொண்ட வீட்டு வசதித்துறை அமைச்சரான துரைராஜ் பதவியை ராஜினாமாச் செய்தார். அவரது ராஜினாமாவை முதலமைச்சர் ஏற்றுக் கொண்டார். (ம)

## பதில் பொலீஸ்மா அதிபராக ஆனந்தராஜா பொறுப்பேற்பு!

பொலீஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு காலமானதை அடுத்து அவரது கடமைகளை சிரேஷ்ட பிரதிப் பொலீஸ்மா அதிபரான ரி.ஆனந்தராஜா பொறுப்பேற்றிருக்கிறார்.

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவினால் ரி.ஆனந்தராஜா பதில் பொலீஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

லக்கி கொடித்துவக்கு கடந்த சில மாதங்களாக உடல் நலம் குன்றியிருந்த பொழுது ஆனந்தராஜா பதில் பொலீஸ்மா அதிபராகக் கடமையாற்றினார்.

பொலீஸ்மா அதிபர் பதவிக்கு விரைவில் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்திருக்கிறார். (ம)

### கொடித்துவக்குவின் இறுதிக்கிரியைகள் நேற்று நடந்தன

கொழும்பு,ஓக.30

கடந்த செவ்வாய்க்கிழமை காலமான பொலீஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்குவின் இறுதிக்கிரியைகள் நேற்றுமாலை கொழும்பில் நடைபெற்றன.

கொழும்பு, பொரளையில் உள்ள கனத்தை மயானத்தில் பூரண பொலீஸ மரியாதையுடன் இறுதிக்கிரியைகள் இடம்பெற்றன. (ம-10)

# இந்தியாவின் பிரதமராக சோனியாவா? வெட்கக்கேடு என்கிறார் ஜெயலலிதா!



புதுடில்லி,ஓக.30

"வெளிநாட்டைச் சேர்ந்த சோனியா காந்தியைப் பிரதமராக்க முயல்வது இந்தியாவுக்கே பெரும் வெட்கக்கேடு" என்று காங்கிரஸ் மீது கடும் தாக்குதல் தொடுத்தார் தமிழக முதல்வர் ஜெயலலிதா.

அடுத்த தேர்தலில் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி வைத்துக் கொள்ளமாட்டோம் என்றும் திட்டவட்டமாக அவர் அறிவித்தார்.

காவிரி ஆணையக் கூட்டத்தில் பங்கேற்க டில்லி வந்த ஜெயலலிதா செய்தியாளர்களைச் சந்தித்தார்.

காங்கிரஸுடன் அ.தி.மு.க. கூட்டணி வைத்துக் கொள்ளுமா? என்று கேட்டபோது, சோனியா காந்தியையும், காங்கிரஸ் கட்சியையும் கடுமையாக விமர்சித்து, பெரும் பரபரப்பை அவர் ஏற்படுத்தினார்.

ஜெயலலிதா அங்கு கூறியதாவது -

அடுத்த தேர்தலில் நிச்சயம் காங்கிரஸ் கட்சியுடன் அ.தி.மு.க. கூட்டணி வைத்துக் கொள்ளாது, ஏன் தெரியுமா? இந்தியர் ஒருவர்தான் இந்த நாட்டின் பிரதமராக வேண்டும் என்பதில் அ.தி.மு.க. உறுதியாக இருக்கிறது. பிரிட்டிஷாரை இந்த நாட்டை விட்டு விரட்டி, இந்தியாவுக்கு சுதந்திரம் பெற்றுத் தந்த காங்கிரஸ்கட்சி, ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு, மீண்டும் தனது நிலையிலிருந்து இறங்கி, அந்நிய நாட்டில் பிறந்த ஒருவரைப் பிரதமர் நாற்காலியில் அமர வைக்க முயற்சிக்கிறது.



கொள்கை, கோட்பாடு இல்லாமல், சுயசிந்தனை, செயற்பாடுகளை இழந்த காங்கிரஸ் கட்சிக்கும், இந்த நாட்டுக்கும் இது மிகப் பெரிய வெட்கக்கேடு.

நூறு கோடி மக்கள் தொகையைக் கொண்ட இந்நாட்டில், இந்தியர் ஒருவர்தான் பிரதமராக வேண்டும். சோனியா பிரதமராவதற்கு நான் ஒருபோதும் ஆதரவளித்ததில்லை. 1999இல் கூட, ஜோதிபாசுவைத்தான் பிரதமராக்க முயற்சி எடுத்தேன். எல்லா எதிர்க்கட்சிகளும் அதற்குச் சம்மதித்த நிலையில், சோனியா காந்திதான் அதற்கு முட்டுக்கட்டை போட்டார்.

காங்கிரஸ் கட்சி 14 மாநிலங்களில் ஆட்சியமைத்துள்ளபோதிலும்,இந்தியர் ஒருவர் தங்கள் மாநில முதல்வராக வருவதற்காகத்தான் மக்கள் அக்கட்சிக்கு வாக்களித்திருக்கிறார்கள் என்றார் ஜெயலலிதா. (ஒ)

# இஸ்ரேலின் ஷெல் தாக்குதலில் பெண் உட்பட 4 பலஸ்தீனர் பலி!

லண்டன்,ஓக.30

காஸாவின் கரையோரக் கிராமம் ஒன்றின்மீது இஸ்ரேலிய இராணுவம் மேற்கொண்ட ஷெல்தாக்குதலில் 4 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

பலஸ்தீனப் பெண்மணியொருவரும், அவரது இருமகன்களும், உறவினர் ஒருவருமே இத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களாவர்.

ஷேக்அஜிலி என்ற கிராமத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மேலும் 4பேர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினமிரவு மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தவேளை 11டாங்கிகளுடன் கிராமத்துக்குள் நுழைந்த இஸ்ரேலிய இராணுவத்தினர் கடற்பகுதியை நோக்கி சரமாரியாக ஷெல தாக்குதல் நடத்தியதாகவும் -

அப்போது சில ஷெல்கள் குடியிருப்புப் பகுதியில் விழுந்து வெடித்ததாகவும் -

கூறப்படுகிறது.

தாக்குதலில் காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல சம்பவ இடத்துக்கு செல்ல முயன்ற அம்புலன்ஸ் வாகனங்கள் இஸ்ரேலிய படையினரால் தடுக்கப்பட்டதாக பலஸ்தீன வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்கிராமத்தின் அருகே உள்ள கடற்பரப்பில் சில பரல்கள் மிதந்து வந்ததாகவும் - அவற்றில் பலஸ்தீனத தீவிரவாதிகளுக்கு ஆயுதங்கள் வந்ததாகவும் -

அதனாலேயே அவற்றை தாம் தாக்கி அளித்ததாகவும் -

இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்தது.

புலனாய்வுத் தகவல்களின்படி, கடல்வழியாக பலஸ்தீனத் தீவிரவாதிகள் ஆயுதங்களையும், வெடி பொருளகளையும் கடத்தி வருவதாக தெரிய வந்ததாலேயே தாம் இந்த இராணுவ நடவடிக்கையை மேற்கொ ண்டதாக இஸ்ரேலிய இராணுவம் மேலும் கூறியுள்ளது. (ஒ)



காஸா பகுதியில் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள இஸ்ரேலிய இராணுவ டாங்கியை இஸ்ரேலியர்கள் மீதான வெறுப்பினால் பலஸ்தீன இளைஞர் ஒருவர் கல் கொண்டுதாக்குவதை படத்தில் காணலாம்.

# வீரப்பன் இருக்கும் காடு சுற்றிவளைப்பு; ஓரிரு நாள்களில் நாகப்பா மீட்பு!

## இப்படிக் கூறுகிறார் கர்நாடக அதிகாரி

பெங்களூர்,ஓக.30

'சந்தனமரக்கடத்தல் வீரப்பன் பதுங்கியுள்ள வனப் பகுதியை ஆயிரம் அதிரடிப்படை வீரர்கள் சுற்றிவளைத்துள்ளனர். ஓரிரு நாள்களில் நாகப்பாவை மீட்டுவிடுவோம்' என்று கர்நாடக அரசுக்கு அந்த மாநில அதிரடிப்படைத் தலைவர் ரஜ்வீர் பிரதாப் சர்மா உறுதியளித்துள்ளார்.

கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் ஹனூர் தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் ராஜ கௌட. இப்போது கிருஷ்ணா அமைச்சரவையில் அமைச்சராக உள்ளார். இவரை எதிர்த்து ஜனதாதளம் சார்பில் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தவர்தான் வீரப்பனால் கடத்தப்பட்ட எச்.நாகப்பா. இவரைக் கடத்தியதில் ராஜ கௌடவுக்கும் தொடர்பு இருக்கலாம் என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ் சாட்டி வந்தன.

மேலும் அமைச்சர் ராஜ கௌட, வீரப்பனை நன்கு அறிந்துள்ளார் என்றும், ஏற்கனவே வீரப்பனால் கடத்தப்பட்ட ஒருவரை வீரப்பனுடன் பேசி மீட்டுக் கொண்டு வந்துள்ளார் என்றும் ஐக்கிய ஜனதாதளம் கூறியிருந்தது.



இது குறித்து அமைச்சர் ராஜ கௌடவிடம் செய்தியாளர்கள் கேட்ட போது, அவர் கூறியதாவது:-

'வீரப்பனுக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ஆனால், வீரப்பனின் அண்ணன் மாதையனை இளம் வயதில் பார்த்திருக்கிறேன். இவர்கள் எல்லாம் எனது தொகுதி வாக்காளர்களாக இருந்தவர்கள். இந்த வகையில் மாதையனைச் சந்தித்திருக்கிறேன். மற்றபடி வேறு யாரையும் எனக்குத் தெரியாது' - என்றார் அவர்.

'வீரப்பன் பிடியில் சிக்கியுள்ள நாகப்பாவை மீட்க அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. நாகப்பாவை அழைத்துக்கொண்டு வீரப்பனால் அதிக தூரம் சென்றிருக்க முடியாது.

'வீரப்பன் எந்த இடத்தில் பதுங்கியுள்ளார் என்ற விவரம் அதிரப்படைக்குத் தெரியும் எனவே இதற்கு மேல் விவரம் கூற விரும்பவில்லை.

'வீரப்பன் பதுங்கியுள்ள குண்டல் வனப் பகுதியைச் சுற்றி 10 கிலோ மீற்றர் தூரப் பகுதி அதிரடிப்படை வீரர்களால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளது. எனவே வீரப்பனுக்கு இனித் தப்பிக்க வழியில்லை.

'வீரப்பனைச் சுற்றி வளைத்துள்ள அதிரடிப்படை வீரர்கள் நவீன ஆயுதங்களும் தொலைநோக்கிக் கருவிகளும் வைத்துள்ளனர். எந்த புதர் வழியாக வீரப்பன் தப்பிக்க நினைத்தாலும் அது முடியாது.

'அரசின் உத்தரவுக்காக அதிரடிப்படை காத்திருக்கிறது. எந்த சமயத்திலும் அதிரடிப்படை காட்டிற்குள் நுழைந்து வீரப்பனை பிடிக்க நடவடிக்கை எடுக்கும்' - என்று அதிரடிப் படைத் தலைவர் ஆர்.பி.சர்மா தெரிவித்தார். (ஒ)



இந்தியாவில் சந்தனமரக் கடத்தல் வீரப்பனால் கடத்தப்பட்ட கர்நாடக முன்னாள் அமைச்சர் நாகப்பாவின் குடும்பத்தினர் சோகத்துடன் அமர்ந்திருக்கும் காட்சி.



இந்தியாவில் வீரப்பன் விவகாரம் தொடர்பாக தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் கர்நாடக முதல்வர் கிருஷ்ணாவும் புதுடில்லியில் சந்தித்து பேச்சு நடத்தினர். அந்த சமயத்தில் எடுக்கப்பட்ட படம் இது.

# சுயாதீன வானொலி நிலையம் குண்டு வெடிப்பில் தகர்ப்பு!

## சிம்பாப்வேயில் சம்பவம்

ஹராரே,ஓக.30

சிம்பாப்வேயில் சுயாதீன வானொலிச் சேவை ஒன்றின் ஒலிபரப்பு நிலையம் குண்டுவெடிப்பில் தகர்ந்தது.

தலைநகர் ஹராரேயில் நேற்று அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றது.

ஆயுதம் தாங்கிய இருவர் வந்து தன்னை மிரட்டித் துரத்தியதாகவும் -

அச்சம் காரணமாக தான் அங்கிருந்து நகர்ந்து விட்டதாகவும் -

அதன் பின்னர் உள்ளே சென்ற அந்த ஆயுததாரிகள் சக்தி வாய்ந்த வெடிகுண்டுகளைப் பயன்படுத்தி வானொலி நிலையத்தைத் தகர்த்ததாகவும் -

அந்த தனியார் வானொலி நிலைய இரவுப் பாதுகாவலர் தெரிவித்துள்ளார்.

'மக்கள் குரல்' என்ற பெயருடைய அந்த வானொலி சேவை சிம்பாப்வே அரசை குறிப்பாக அமைச்சர்களை கடுமையாக விமர்சித்து வந்தது. அத்துடன் அதிபர் றொபேட் முகாபேயின நடவடிக்கைகள் பிற்போக்கானவை என்றும் அவ்வானொலி கூறி வந்தது.

இந்த நிலையில் வெடிகுண்டுகளைப் பயன்படுத்தி வானொலி நிலையம் தகர்க்கப்பட்டதன் பின்னணியில் முகாபே அரசு இருப்பதாக வானொலி சேவையின் பணியாளர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

கடந்த சில ஆண்டுகளாக சிம்பாப்வேயில் சுயாதீனச் செய்தியாளர்கள் தாக்கப்பட்ட சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன. இரு செய்திப் பத்திரிகை அலுவலகங்கள் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகின.

ஆனால், இந்தச் சம்பவங்களுக்குக் காரணமானவர்கள் அடையாளம் காணப்படவோ, கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்படவோ இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# மரபணுச் செல்வங்களுக்கு உரிமத்தொகை; உலக மாநாட்டில் இந்தியா வலியுறுத்தல்

ஜோஹன்ஸ்பர்க்,ஓக.30

ஒரு குறிப்பிட்ட நாட்டின் மரபணுச செல்வாதாரங்களை வேறெவரும் வர்த்தக நோக்கில் பயன்படுத்தினால், அந்த மரபணுச்செல்வாதாரங்களுக்கு உரிமையுடைய நாட்டுக்கு உரிமத் தொகை அளிக்கப்படவேண்டும்; அதை பயன்படுத்துவதற்கு நஷ்டஈடும் வழங்க வேண்டும் என்று தென்னாபிரிக்காவில் இடம்பெறும் உலக மாநாட்டில் இந்தியா வலியுறுத்தியது.

ஒரு நாட்டின் மரபணுச் செல்வங்களையும் அவற்றின் நீடித்த பயன்பாட்டையும் உறுதிசெய்ய தேவையான ஏற்பாடுகளை சர்வதேச நாடுகள் உடனடியாகச் செய்ய வேண்டும் என்றும் இந்தியா வலியுறுத்தியது.

நீடித்த வளர்ச்சிக்கான உலக மாநாடு தென்னாபிரிக்காவின் ஜோஹன்ஸ்பர்க் நகரில் நடந்து வருகிறது. அதில், 'பல்லுயிர்ப் பெருக்கமும் சுற்றுச் சூழல் காப்பும்' என்ற தலைப்பில் இந்திய வனங்கள் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர் டி.ஆர்.பாலு உரையாற்றினார். அப்போது மேற்கண்ட கோரிக்கையை அவர் விடுத்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

'ஒவ்வொரு நாட்டிலும் அவற்றுக்கென பிரத்தியேகமான மரபணுச் செல்வங்கள் உள்ளன. அவை தொடர்பான அறிவுசார் சொத்துரிமை மற்றும் பொருள் காப்புறுதி ஆகியவற்றை சர்வதேசஅளவில் அங்கீகரிக்கும் வகையில் காப்புரிமை விதிகளை வகுக்கவேண்டும். புதிய சுற்றுச் சூழல் ஒத்துழைப்பு என்பது, இன்னொரு வகையான சுரண்டலாக மாறிவிடக்கூடாது.

'மரபணுச் செல்வங்களால் விளையக்கூடிய பயன்கள் அவற்றுக்கு உரிமையுடைய நாடுகளுக்கு கிடைக்க வேண்டும். அதைப் பணக்கார நாடுகள உறுதி செய்யவேண்டும். அச்செல்வங்களுக்கு உரிய நாடுகளிலேயே அது தொடர்பான தொழில்நுட்ப நிறுவனங்களை அமைக்கவேண்டும்.

'ஒருநாட்டின் மரபணுச்செல்வங்களைப் பயன்படுத்தி பொருள்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள், அவற்றுக்கான காப்புரிமை விண்ணப்பத்தில், அவை எந்த நாடுகளுக்குச் சொந்தமானவை என்பதை தெரிவிக்க வேண்டும். அதைப் பயன்படுத்தி வரும உள்ளூர் மக்களின் செயல்முறை, அறிவு ஆகியவை குறித்தும் தெரிவிக்க வேண்டும்' என்றார் டி.ஆர்.பாலு.

# நேபாளத்தில் குண்டுவெடிப்பு!

காத்மண்டு,ஓக.30

நேபாள நாட்டின் தலைநகர் காத்மண்டுவில் கடந்த புதன்கிழமை பயங்கர குண்டு வெடித்தது.

இதில் ஏற்பட்ட உயிர்ச்சேதம் அல்லது பொருள்சேதம் பற்றிய விபரம் உடனடியாகத் தெரியவில்லை.

காத்மண்டு நகரின் மையப்பகுதியிலுள்ள பல்பொருள் விற்பனை நிலையத்தின் மூன்றாவது தளத்தில் இந்தக் குண்டு வெடித்தது. உடனே பொலீஸார் அந்த இடத்தைச் சுற்றி வளைத்தனர். ஆயினும் இது தொடர்பாக எவரும் கைதுசெய்யப்படவில்லை.

காத்மண்டு நகரில் அண்மைக் காலமாக மாவோயிஸ தீவிரவாதிகள் குண்டுவெடிப்புச் சம்பவங்களை நிகழ்த்தி வருகின்றனர். மாவோயிஸ் தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காக அவசரநிலைப் பிரகடனம் கடந்த நவம்பர் மாதம் பிறப்பிக்கப்பட்டது. (ஒ)

## சமாதானச் சூழல் நெருங்குகிறது

# பலத்துடன் இருக்க வேண்டியது தமிழர் தரப்பின் முக்கிய கடமை!

## புலிகள் பிரமுகர் தமிழ்விழி தெரிவிப்பு

சண்டிலிப்பாய்,ஓக.30

பல்லாயிரக்கணக்கான போராளிகள் சிந்திய குருதியாலும், அளப்பரிய தியாகத்தினாலுமே தற்போது புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு சமாதானச்சூழல் ஏற்பட்டுள்ளது.

அடுத்தகட்டமாக எமது உரிமைகள் கிடைக்கவேண்டும் என்றால், பேச்சுக்களின்போது தமிழர் தரப்பு மிகவும் பலமானதாக - போராட்ட உணர்வோடு இருக்க வேண்டியது அவசியம். இளம் சந்ததியினர் எமது போராட்ட வரலாறு பற்றியும், போராளிகளின் வீரத் தியாகம் பற்றியும் நன்கு அறிந்து மாவீரர்களின் கனவை நனவாக்க முன்வரவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்றுறையைச் சேர்ந்த தமிழ்விழி.

முன்னாள் யாழ்.மாவட்டத் தளபதியும், சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதியும், அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரிப் பொறுப்பாளருமான லெப்.கேணல் இராஜனின் (சோமசுந்தரம் சற்குணம் - மாதகல்) பத்தாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கடந்த செவ்வாய்க்கிழமை மாதகல் இளைஞர் சங்கத் திறந்த வெளியரங்கில் நினைவுக்கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நிலையத்தலைவர் மு.ஸ்ரீமோகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழ்விழி தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

'தமிழ்மக்களின் பாதுகாப்பு, சுதந்திரம், சுயநிர்ணயம் ஆகிய அம்சங்களைக் கொண்ட விடுதலைப் போராட்டமாகப் பரிணமித்து நிற்கும் எமது போராட்டம் மாவீரர்களின் வீரத் தியாகத்தினால் பல வெற்றிகளைப் பெற்றுத்தந்துள்ளது.

உலக விடுதலைப் போராட்ட வரலாற்றில் எமது போராட்டம் தனி இடம்பெற்றது. அஹிம்சை வழியில் பல போராட்டங்களை நடத்திய பின்னர் தந்தை செல்வா நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோது 'நீங்கள் எமது உரிமைகளை சமாதான வழியில் தராதுவிட்டால் எமது பிள்ளைகள் - இளைஞர்கள் உங்களுடன் பேசுவார்கள்' என்று குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகள் தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக நின்று, இன்று பேச்சு நடத்தவுள்ளனர். இது காலத்தின் நியதி. நாம் அடுத்தகட்டத்திற்குப் போவதற்கு தமிழர் தரப்பு பலமான நிலையில் இருக்க வேண்டும். போராட்டம் வளர்ச்சி காணும்போது எமது இலட்சியம் படிப்படியாக நிறைவேறும்.

இன்னும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு பலமாதங்கள் கடந்த நிலையிலும், எமது மக்கள் இன்னும் இராணுவ அச்சுறுத்தல்களை எதிர்நோக்கிய வண்ணமே உள்ளனர். பொது இடங்களில் - வழிபாட்டு இடங்களில் நிலைகொண்டிருக்கும் படையினர் அங்கிருந்து முற்றாக வெளியேறவில்லை. தமது முகாம்களை பலப்படுத்தும் செயற்பாடுகளிலும் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

நாம் எமது போராட்டத்தை வலுப்படுத்துவதன் மூலம் எமது மாவீரர்களின் இலட்சியக் கனவை வென்றெடுக்க முடியும் - என்றார்.

யாழ்.மாவட்ட அரசியற்றுறையைச் சேர்ந்த நகுலன் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப்.கேணல் ராஜன், யாழ்.மாவட்ட தளபதியாக இருந்து இராணுவத்துடனான பல்வேறு மோதல்களிலும் பங்குபற்றி இராணுவத்தினருக்குப் பேரிழப்புக்களை ஏற்படுத்தியவர். இந்திய இராணுவம் இங்கு நிலைகொண்டிருந்த காலகட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளை ஒன்றுதிரட்டி பல வெற்றிகரத் தாக்குதல்களை நடத்தியவர் அவர்.

கடந்த 1992ஆம் ஆண்டில் தமது சொந்த மண்ணான மாதகலில் இராணுவத்தினர் ஆக்கிரமிப்புக்காக வருவதாக அறிந்து அங்கு விரைந்தோடி இராணுவத்தினருடன் களத்தில் நின்று போராடிய வேளையில் அவர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

அவரின் வீரத்தியாகத்தையும் போராட்ட வாழ்வையும் இங்குள்ள எமது இளம் சந்ததியினர் அறிந்துகொள்ள வேண்டும் - என்றார்.

இறுதியில் அருணா இசைக்குழுவினரின் எழுச்சிப் பாடல் நிகழ்ச்சி இடம்பெற்றது.

(எ-135)

# உள்ளூர் மீன்களைப் பயன்படுத்தி உணவு உற்பத்தித் திட்டம்

## திருகோணமலையில் அடுத்த மாதம் ஆரம்பம்

கொழும்பு,ஓக.30

உள்ளூரில் மீன்களைப் பயன்படுத்தி உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் திட்டங்கள் பன்முகப்படுத்தப்படும் என்று கைத்தொழில் அபிவிருத்திசபை தெரிவித்துள்ளது.

கைத்தொழில் அபிவிருத்திசபையின் தலைவர் கலாநிதி பந்துல பெரேரா இது தொடர்பாகக் கூறுகையில், "அபிவிருத்திசபையைச் சேர்ந்த நிபுணர்கள் மீனைப் பயன்படுத்தி பல தரப்பட்ட புதுவித உணவு வகைகளைத் தயாரிக்கும் முறைகளை உருவாக்கியுள்ளதாகவும் - பாரம்பரியமாகத் தயாரிக்கப்படும் கருவாடு, பதப்படுத்தப்பட்ட மீன் என்பவற்றைத் தவிர வேறு புதிய உணவு வகைகளை இதனால் தயாரிக்க முடியும் என்றும் - தெரிவித்தார்.

இத்தகைய பன்முகப்படுத்தப்பட்ட திட்டம் திருகோணமலையில் அடுத்தமாதம் ஆரம்பித்து வைக்கப்படும். இதன்மூலம் அந்தப் பகுதியைச் சேர்ந்த 2 ஆயிரம் மீனவக் குடும்பங்கள் நன்மையடைய இருக்கின்றன - என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஒ-9-12)

**சகல சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்குமான கூட்டம்**

இடம் : யா/வேம்படி மகளிர் கல்லூரி
காலம் : 01-09-2002 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணி

☆ இக்கூட்டத்திற்கு கொழும்பில் இருந்து தாய்ச்சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொள்வதால், அனைத்து பிரதேச செயலகங்களிலும் கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம்
யாழ்.மாவட்டம்.
(7671)

**விநியோகஸ்தர் தேவை**

பாலிலிருந்து உற்பத்தி செய்யும் பொருள்களை மோட்டார் சைக்கிள்மூலம் விநியோகிப்பதற்கு விநியோகஸ்தர்கள் தேவை. சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவரும், சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றவருமாக இருத்தல்வேண்டும்.

விண்ணப்பிப்போர் 31. 08. 2002ஆம் திகதி மு. ப. 10. 00 மணிக்கு முன்னர், கீழ்க்காணும் முகவரிக்கு சமுகம் தரவும்.

கொடுப்பனவுகள் பேசித்தீர்மானிக்கப்படும்.

பொது முகாமையாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.
திருநெல்வேலி கிழக்கு.
கோப்பாய். (C/23365)

**நன்றி நவில்கின்றோம்**

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆனந்தசாமி மடத்தில் நயினாதீவைச் சேர்ந்த அடியார்கள் தந்துதவிய நிதியில் இருந்து இம்முறை தேர், தீர்த்தம் முதலிய திருவிழா நாள்களில் அன்னதானம், தேநீர், குளிர்பானம் முதலியன வழங்கப்பட்டது. மனமுவந்து நிதியுதவி செய்த அனைத்து அடியார்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகின்றன. அத்துடன், மேலும் மடத்திற்கு பல வேலைகள் செய்து பணியை விஸ்தரிக்க வேண்டியிருப்பதால் தம்மாலான நிதியுதவி, பொருளுதவி புரிந்து எம்திருப்பணிக்கு உதவும்வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

நிதியுதவி பெற்றுத்தந்த அன்பர்கள்:
திரு.சோ.சின்னத்துரை - முதலாம் வட்டாரம், நயினாதீவு
திரு.செ.கந்தசாமி மூன்றாம் வட்டாரம், நயினாதீவு
திரு.சோ.கணநாதன் (கண்ணன்) ஐந்தாம் வட்டாரம், நயினாதீவு

| | |
|---|---|
| மொத்தமாகச் சேர்ந்த பணத்தொகை | ரூ.23,570.00 |
| மொத்தச் செலவு | ரூ.22,480.00 |
| கையிருப்பு மிகுதி | ரூ. 1,090.00 |

அத்துடன் கட்டடத் திருத்தவேலைக்கும் தளபாடங்களுக்கும் என நிதியுதவி செய்த நல்லன்பர்கள்:
திரு.நடராசன் - திருவேணிவேணி குடும்பம்
மூன்றாம் வட்டாரம், நயினாதீவு ரூ.21,000.00
திரு.நாகலிங்கம் - மகேஸ்வரி குடும்பம்
முதலாம் வட்டாரம், நயினாதீவு ரூ.10,000.00

இவர்களின் அன்பளிப்பான நிதியானது ஆனந்தசாமி மட பொருளாளர் ஆகிய சோ.சின்னத்துரை என்பவரிடம் கொடுக்கப்பட்டிருந்தது. அப்பணத்தை தலைவர் சி.வல்லிபுரம் ஆகிய நான் பெற்றுக்கொண்டேன்.

ஆனந்தசாமிமடம்,
தொண்டைமானாறு, செல்வச்சந்நிதி.
திரு.சி.வல்லிபுரம்,
தலைவர்.
(7673)

**தேவை**

தொலைத்தொடர்பு நிலையத்தில் பணிபுரிய ஆள்தேவை. 31.08.2002, 10 மணிக்குப் பின் நேரில் வரவும்.

தொடர்பு: ஞானம்ஸ்
இல.162, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு. (7678)

**இலங்கை மின்சார சபை - யாழ்ப்பாணம்**

**வீடு வாடகைக்குத் தேவை**

இலங்கை மின்சார சபையின் பாவனைக்கு யாழ்.மாநகர சபை எல்லைக்குள், நகரை அண்டிய பகுதியில் கீழ்வரும் வசதிகளுடன் வீடொன்று உடனடியாக வாடகைக்குத் தேவைப்படுகின்றது.

வீடு 4(நான்கு) அறைகளுக்குக் குறையாமலும், குளியலறையுடன் இணைந்த வசதிகொண்டதாகவும், தடையற்ற நீர்விநியோகம், மின்சார வசதி, பாதுகாப்புச் சுவர்கள், வாகனத் தரிப்பிடம் என்பனவற்றைக் கொண்டுள்ளதாகவும் அமைந்திருத்தல் அவசியமானதாகும். தொலைபேசி வசதி இருப்பின் அதனையும் குறிப்பிடவும்.

1. வீடு சம்பந்தமான சகல விவரங்கள்
2. மாதாந்த வாடகை
3. வீடு அமைந்துள்ள இடம்
4. வீட்டின் மொத்தப் பரப்பளவு

போன்ற விவரங்களை 15.09.2002 மு.ப. 10.00 மணிக்கு முன்னர் பதிவுத்தபால்மூலம்

மின்பொறியியலாளர்,
யாழ்.பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
சுன்னாகம்

என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'வீடு வாடகை' எனக் குறிப்பிடவும்.

*சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்குக் கைகொடுக்கும்*
இலங்கை மின்சார சபை. (C/23349)

**நீங்காத நினைவலைகள்**

14 ஆவது ஆண்டு | இரண்டாம் ஆண்டு





அமரர் கணபதி தியாகேசு
(காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபன மின்பகுதி உயர் உத்தியோகத்தர்)
மலர்வு:- 07-01-1931
உதிர்வு:- 31-08-1988

திருமதி
அன்னம்மா தியாகேசு
பிறப்பு:- 05-11-1935
இறப்பு:- 21-08-2000

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம.

*ஆதியாமலை,*
*இமையாணன்,உடுப்பிட்டி.*
(7633)
பிரிவால் துயருறும்:
பிள்ளைகள்.

**நெஞ்சகலா இரண்டாம் ஆண்டு நினைவலைகள்**

மனம் களிக்க
02 - 09 - 1978



மனம் துடிக்க
30 - 08 - 2000

**அமரர் கார்த்திகேசு சிவகுமார்**

திதி: பூர்வபக்க பிரதமை

மற்றவர்கள் மனம் நோக நீ நடந்தது இல்லைத் தம்பி
சிரித்த உன் முகத்தினிலே என்றும் சினந்தனைக் கண்டதில்லை
உற்றார் உறவினரை உளங்குளிர வைத்தாய் நீ
உற்ற உன் நண்பர்கள் உன் பிரிவால் வாடுகின்றார்
கற்றவரும் மற்றவரும் உன் புகழைப் பாடுகின்றார்
ஆண்டுகள் இரண்டு சென்றாலும் ஆறாது எங்கள் துயர்
இப்புவிதனில் எமை இன்புற வாழவைத்தீர்
அருகிருந்து எமை அரவணைக்க - இனி
ஆரிருப்பார் இவ்வுலகில்!

*உன் பிரிவால் வாடும்:*
அன்பின் அப்பா, அம்மா, அக்கா,
தங்கை, மைத்துனர், மருமகன்,
மருமகள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

*ஈவினை கிழக்கு,*
*புத்தூர் - சுன்னாகம் வீதி,*
*சுன்னாகம்.* (7579)

உதயன்

## ஜனாதிபதியின் அதிகாரத்தை வெட்ட அவரது இணக்கம் தேவை

நாடாளுமன்றத்தைக் கலைப்பது தொடர்பான ஜனாதிபதியின் அதிகாரத்தை வெட்டுவதற்கு வழி செய்யும் அரசமைப்புத் திருத்தத்திற்கு சட்ட வலுக் கொடுக்கும் தனது முயற்சியை ஆளும் ஐ.தே.க. தாமதப்படுத்தியுள்ளது. கடந்த புதனன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த அரசமைப்புத் திருத்தத்திற்கு அங்கீகாரம் வழங்கப்படவிருந்தது. அது பற்றிய அறிவிப்புகள், செய்திகளை அரசுத்தரப்பு வெளியிட்டும் வந்தது.

ஆனால், கடைசி நேரத்தில் அது அடுத்தவாரத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த புதனன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திற்கு ஜனாதிபதி வந்தாலும் வராவிட்டாலும் திட்டமிட்டபடி உத்தேச அரசமைப்புத் திருத்தம் அந்தக் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படும் என்று அறிவித்து வந்த அரசுத்தரப்பு, திடீரென தனது முடிவை மாற்றிக்கொண்டது.

உத்தேச அரசமைப்புத் திருத்தத்தை தனது பிரசன்னம் இன்றி அமைச்சரவை அங்கீகரிக்கக் கூடாது என்றும், அந்தத் திருத்தத்தைப் பரிசீலிக்கத் தமக்கு இரண்டுவார கால அவகாசம் தேவை என்றும் ஜனாதிபதி தமக்குக் கடிதம் எழுதியிருந்தார் என்று தெரிவித்து, அந்தக் கடிதத்தை அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பித்தார் பிரதமர் ரணில்.

அந்தக் கடிதத்தின் அடிப்படையில் உத்தேச அரசமைப்புத் திருத்தம் குறித்து முடிவெடுக்கும் விடயத்தை ஒருவாரகாலத்திற்குத் தள்ளிவைப்பதெனவும், அடுத்த செவ்வாயன்று நடக்கும் விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி பிரசன்னமாகி இந்த விவகாரம் பற்றிய தனது கருத்தைச் சொல்லலாமெனவும், ஆளுங்கட்சி உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவை நேற்றுமுன்தினம் முடிவுசெய்துள்ளது.

ஜனாதிபதியின் பிரசன்னம் இன்றியே இந்த விடயத்தை முன்னெடுப்பதில் விடாப்பிடியாக நின்ற ஆளுந்தரப்பு, கடைசிநேரத்தில் தனது முடிவைமாற்றிக் கொண்டது ஏன்? ஜனாதிபதி எழுதிய கடிதத்திற்குப் பயந்தா? அல்லது நாட்டின் தலைவர் என்ற முறையிலும் அமைச்சரவையின் தலைவர் என்ற முறையிலும் ஜனாதிபதிக்குக் கொடுக்கவேண்டிய கௌரவத்தை கவனத்தில் எடுத்து அதற்காக அவர் கடிதத்தில் கோரிய விடயத்திற்கு உரிய மதிப்பளித்து அதன் அடிப்படையில் இந்த விடயம் ஒத்திவைக்கப்பட்டதா? இரண்டுக்குமாக அல்ல என்பதுதான் நிஜம்.

இந்த அரசமைப்புத் திருத்தத்தை அமைச்சரவை அங்கீகரித்தாலும் -

இந்த அரசமைப்புத் திருத்தம் நாட்டின் அத்தியாவசியப் பிரச்சினை சம்பந்தமானது என அமைச்சரவை முடிவுசெய்திருப்பதாக அமைச்சரவைச் செயலாளர் அதற்குச் சான்று வழங்கினாலும் -

இது குறித்து அவசரமாக விவாதித்து, அதனை சட்டவலுவாக்குவதற்கு எத்தகைய அடிப்படையில் நாடாளுமன்றத்தில் அதனை நிறைவேற்ற வேண்டும்? சர்வஜனவாக்கெடுப்பு நடத்தி, மக்கள் அனுமதி பெற வேண்டுமா? - என்பது குறித்தெல்லாம் மூன்று நாள்களுக்குள் விசாரித்து முடிவை அறிவியுங்கள் என்று ஜனாதிபதி எழுத்துமூலம் உயர் நீதிமன்றத்தைக் கோரினால்தான் அந்தப் பணியை உயர்நீதிமன்றம் செய்யமுடியும்.

அமைச்சரவை உத்தேசச் சட்டத் திருத்தத்தை அங்கீகரித்த பின்னரும் அந்த வேலையை ஜனாதிபதி மேற்கொள்ளாவிட்டால் உத்தேச அரசமைப்புத் திட்டத்தைச் சட்டவலுவாக்கும் முயற்சி நகராமல் அப்படியே நின்றுவிடும். அதற்குமேல் ஒன்றும் செய்யமுடியாத நிலைமையில் அரசுத்தரப்பு சிக்கிவிடும்.

தேவையானால் அரசமைப்புத் தொடர்பான தனது பணிகளை நிறைவேற்ற ஜனாதிபதி தவறிவிட்டார் எனத் தெரிவித்து அவருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் குற்றவிசாரணைப் பிரேரணை கொண்டுவந்து அவரைப் பதவி இழக்கச் செய்ய முயலலாம். அதற்கு நீண்டகாலம் பிடிக்கும். நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்கள் அதற்கு ஆதரவு வழங்கினால்தான் அதுகூடச் சாத்தியமாகும்.

எனவே, ஜனாதிபதியின் அதிகாரத்தை வெட்டும் அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றுவதற்கும் ஜனாதிபதியின் ஆதரவு - இணக்கம் - தேவைப்படுகின்றது.

எனவே, ஜனாதிபதியுடன் முட்டிமோதாமல் அவரைத் தாஜா பண்ணியே அவருக்குக் கால்தடம் போட முயல்கிறது அரசுத்தரப்பு. அதன் ஒருகட்டம்தான் இத் திருத்தத்தை அங்கீகரிப்பது ஒருவாரகாலம் ஒத்திவைக்கப்பட்டதன் பின்னணி.

# கிளிநொச்சி வைத்தியசாலையை புனரமைக்க ரூ.60 கோடி தேவை!

## மருத்துவ அதிகாரி தெரிவிப்பு

கிளிநொச்சி,ஓக.30

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக் கட்டடங்கள் "சத்ஜய" ராணுவ நடவடிக்கையால் முற்றாக அழிந்துள்ளன எனவும் அவற்றை மீண்டும் கட்டியெழுப்ப குறைந்தது 60கோடி ரூபா தேவைப்படுமெனவும் அந்த மருத்துவமனை மருத்துவர் எஸ். விக்னேஸ்வரமூர்த்தி தெரிவித்தார்.

கிளிநொச்சி நகரத்திலிருந்து 15 மீற்றர் தூரத்தில் இருக்கும் அக்கராயனில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை தற்போது தற்காலிகமாக இயங்குகிறது.

மாவட்ட வைத்தியசாலை ஆகக் குறைந்த வசதிகளுடன் இயங்குவதாகவும் -

மருந்துகள் தட்டுப்பாடு நிலவுவதாகவும் ஒருசில ஊசி மருந்துகள் மற்றும் மருந்துவகைகள் கொழும்பிலிருந்து தருவிப்பதில் சிரமத்தை எதிர்நோக்குவதாகவும் -

குறிப்பாக இருதயநோய், சலரோகம் போன்ற நோய்களுக்கு மருந்துகள் வைத்தியசாலையில் இல்லை என்றும் - அவர் கூறியுள்ளார்.

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பிரதேசத்துக்கான 'எக்ஸ்ரே' கருவி அமைந்திப்பது இவ்வைத்தியசாலையிலேயாகும். கடந்த பல மாதங்களாக 'எக்ஸ்ரே பிலிம்கள்' இருக்கவில்லை. அண்மையில் மிகவும் குறைந்த அளவு 'எக்ஸ்ரே பிலிம்களே' கிடைத்தன.

"சத்ஜய" ராணுவ நடவடிக்கை காரணமாக கிளிநொச்சியிலிருந்து வெளியேறியவர்கள் மீண்டும் குடியிருக்க வந்தும் வைத்திய வசதிகளில் அபிவிருத்தி ஏற்படவில்லை.

வைத்தியசாலையை நடத்துவதற்குப் பொருத்தமான கட்டடங்கள் ஏதும் கிளிநொச்சியில் இல்லை எனவும் -

மிகவும் சிறிய அளவிலான தற்காலிகக் கட்டடங்களை அமைக்கவே ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன எனவும் - அவர் தெரிவித்தார்.

சகல வசதிகளையும்கொண்ட மருத்துவமனையை அமைக்க 6 கோடி ரூபா தேவைப்படும்போது அரசு மருத்துவமனைக் கட்டடப் பணிக்கு ஒரு லட்சம் ரூபாவை மட்டுமே ஒதுக்கியுள்ளதாகவும் - அவர் குறிப்பிட்டார்.

### குடாநாட்டு வீதிகளில்

## விதிகளை மீறும் சாரதிகளுக்கு கைகொடுக்கும் 'சமரச' முயற்சி

யாழ்ப்பாணம்,ஓக.30

குடாநாட்டு வீதிகள் சிலவற்றில் போக்குவரத்து விதிகளை மீறியதற்காக பொலீஸாரல் தடுத்துநிறுத்தப்படும் வாகனச் சாரதிகள், அப்பகுதிகளில் நிற்கும் சிலரது 'சமரச' முயற்சியைத் அடுத்து தண்டப்பணம் செலுத்தாது செல்வதை அவதானிக்கமுடிகிறது.

வீதிகளில் வாகனங்களை மறித்து சோதனைசெய்யும் போக்குவரத்துப் பொலீஸார் 'ஹெல்மெட்' இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்துவோர் மற்றும் வாகன அனுமதிப்பத்திரம் அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியன இல்லாது வாகனத்தைச் செலுத்துவோர் ஆகியோரிடமிருந்து தண்டப்பணம் அறவிட்டு வருகின்றனர்.

இதேசமயம் சில இடங்களில் -

இவ்வாறு வீதிச் சோதனைகளின்போது தடுத்துநிறுத்தப்படுபவர்களில் விதிமுறைகளை மீறியவர்கள் வீதியோரமான நிறுத்தபபடுகின்றனர். அந்தவேளையில் அங்கு நிற்கும் உள்ளூர் வாசியொருவர் வாகன சாரதியுடன் பேசி 'சமரச' முயற்சியில் ஈடுபடுகின்றார். அதனைத்தொடர்ந்து விதிமுறைகளை மீறியதாகக் கூறி தடுத்து நிறுத்தப்பட்ட வாகன சாரதி தண்டப் பணம் எதுவும் செலுத்தாமலேயே அங்கிருந்து கிளம்பிச்செல்வதை அவதானிக்கமுடிகிறது. (ஒ-8)

### தென்பகுதியைப் போன்று

## வடக்கு - கிழக்குப் பாடசாலைகளுக்கு அனைத்து உதவிகளும் கிட்டவேண்டும்

### கல்லூரி அதிபர் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஓக.30

உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றவற்றால் தென்பகுதி பாடசாலைகளுக்கு வழங்கப்படும் உதவிகள் அனைத்தும் வடக்கு - கிழக்குப் பாடசாலைகளுக்கும் வழங்கப்பட வேண்டும்.

- இவ்வாறு வலியுறுத்தினார் முன்னாள் வடமாகாண அதிபர்கள் சங்கத் தலைவரும், யாழ்.மத்திய கல்லூரி அதிபருமான கே.இராசதுரை.

உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகள், மத்திய, மாகாண கல்வியமைச்சு அதிகாரிகள் ஆகியோருடனான கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. அக் கலந்துரையாடலிலேயே கே.இராசதுரை இதனை வலியுறுத்தினார்.

"தென்பகுதி பாடசாலைகளின் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேம்படுத்துவதில் உலக வங்கி பெருமளவு பங்களிப்பினை வழங்கியுள்ளது.

ஆனால், வடக்கு - கிழக்குப் பாடசாலைகளில் செயற்பாட்டு அறைகளை அமைத்துக்கொடுப்பது போன்ற திட்டங்கள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை என்று அவர் சுட்டிக்காட்டினார்.

வடமாகாண அதிபர்கள் சங்கத் தலைவர் எஸ்.சேதுபதி தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்டமிடல் ஆலோசகர் எம்.திருச்செல்வம், உலக வங்கியின் சிரேஷ்ட பொருளியலாளர் கலாநிதி எச்.அத்துருபான, ஜி.ரி.சற் நிறுவனத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் ஏ.டி.லோக்கர், கல்விச் சீர்திருத்தப் பணிப்பாளர் நாயகம் ஆர்.எஸ்.மெடகெம, உலக வங்கியின் ஆலோசகர் பீற்றர் கொலன் சேர் ஆகியோருடன் கல்வியமைச்சு அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ஒ-9)

**நாளை**

ஆவணி 15
சனிக்கிழமை
(31.08.2002)
திதி : அட்டமி
பிற்பகல் 4.49 வரை.
நட்சத்திரம்: ரோகிணி
நள்ளிரவு 11.54 வரை.
ஸ்ரீ கிருஷ்ணா ஜெயந்தி தினம்
ஜன்மாஷ்டமி
சுபநேரம் : 3.05 - 4.35
ராகுகாலம்: 9.05 - 10.35
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

ஓராண்டில் பணக்காரனாக விரும்புபவர், ஆறுமாதங்களில் சிறைச்சாலையை அடைந்து விடுவார்.

## கசிப்பு வைத்திருந்த நபரிடம் ரூ.31ஆயிரம் தண்டம் அறவீடு

### மல்லாகம் நீதிவான் பிறப்பித்தார்

வலி.வடக்கு,ஓக.30

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டமை மற்றும் 6போத்தல் கசிப்பு, 90 போத்தல் சோடா, கசிப்புக் காச்சும் உபகரணங்கள் வைத்திருந்தமையை ஒப்புக்கொண்ட நபரொருவருக்கு மல்லாகம் மாவட்ட நிதிபதி பா.சுப்பிரமணியம் 31.ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன், 2 ஆயிரம் ரூபா தர்மப்பணத்தை ஊரெழு சிவபூரணி அறநெறிப் பாடசாலைக்குச் செலுத்தும்படியும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சுன்னாகம் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்ட புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த மாரிமுத்து நாகநாதன் அல்லது நாகராசா என்பவருக்கே இத்தண்டனை விதிக்கப்பட்டது.

குற்றப்பணத்தில் அரைப்பங்கை பொலீஸ் வெகுமதி நிதியத்தில் சேர்க்கப்படவேண்டும் என்றும் தெரிவித்த நீதிவான், குறிப்பிட்ட நபரை 15ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் 15ஆயிரம் ரூபா ஆட்பிணையிலும் செல்ல அனுமதிவழங்கினார்.

எனினும், பிணை செலுத்த எவரும் முன்வராததை அடுத்து குறித்த நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (எ-86)

### பஸ்களில் பயணிப்போரே கவனம்!

## 'பிற்பொக்கற்' அடிக்கும் சம்பவங்கள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.30

வடபகுதியிலும் பயணிகளிடம் 'பிற்பொக்கற்' அடிக்கும் குழுவின் நடமாட்டம் ஆரம்பித்துள்ளது.

நேற்றுமுன்தினம் வட்டுக்கோட்டையூடாக யாழ்ப்பாணம் வந்த ஒருவரின் 'மணிப்பேர்ஸ்' பஸ்ஸினுள் வைத்து 'பிற்பொக்கற்' அடிக்கப்பட்டது.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த மகேஸ்வரன் என்பவருடைய மணிப்பேர்சே இவ்வாறு சுமார் ஆயிரத்து 500 ரூபா பணத்துடன் திருட்டுப் போயுள்ளது.

காற்சட்டையின் சைட்பையில் பேர்ஸைத் தான் வைத்திருந்ததாகவும், இடைவழியில் பயணிகள் நெரிசலில் உராய்வது போன்ற ஓர் உணர்வு ஒன்று ஏற்பட்டதாகவும், அதைப் பொருட்படுத்தாது இருந்துவிட்டு யாழ்.பஸ்நிலையத்தில் இறங்கிப் பார்த்தபோது பேர்ஸ் காணாமற்போயிருந்தது தெரியவந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்தவாரமும் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பஸ்ஸில் இதுபோன்ற சம்பவம் இடம்பெற்றதாகவும் பஸ்ஸை நிறுத்தி திடீர்ப் பரிசோதனை ஒன்றை மேற்கொண்டவேளை பணம் பஸ்ஸினுள் கிடந்து மீட்கப்பட்டதாகவும் இதனால் திருடியவர் பிடிபடாது தப்பிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பஸ் பயணிகள் மிகுந்த கவனத்துடன் பயணம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகப் பயணிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-15)

## பிரதேச செயலர் பிரிவுரீதியாக முதியோர் பராமரிப்பு நிலையங்கள்

வலி.மேற்கு,ஓக.30

முதியோர்களுக்கான பகல் பராமரிப்பு நிலையங்களை நிறுவுவதற்கான முன் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சகல பிரதேச செயலர்களுக்கும் வடக்கு - கிழக்கு மாகாண சமூகநலத்துறைத் திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.ஆர். ரஞ்சினி சுற்றறிக்கைமூலம் அறிவித்துள்ளார்.

முதியோர்கள் தமது இறுதிக்காலத்தில் குடும்பச் சூழலில் இருந்து தனிமைப்படாதவகையில் பிரதேச செயலர் பிரிவில் பகல் பராமரிப்பு நிலையங்களை சனசமூக நிலையம், கிராம முன்னேற்றச் சங்கங்கள் போன்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நிறுவி நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் -

இதற்கான கொடுப்பனவுகள் யாவும் திணைக்களத்தினால் வழங்கப்படும் என்றும் -

அந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-175)

## எதிர்க்கட்சிக் கொறடாவின் கைப்பையை காணவில்லையாம்

### பொலீஸார் விசாரணை

கொழும்பு,ஓக.30

எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவும் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மங்கள சமரவீரவின் கைப்பை எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் காணாமற்போன சம்பவம் குறித்து கறுவாக்காடு பொலீஸார் ஆங்கில பத்திரிகையாளர் மற்றும் இலத்திரனியல் ஊடக நிறுவனத்தினரிடம் விசாரணை நடத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த 16ஆம் திகதி மங்கள சமரவீர செய்த முறைப்பாட்டை அடுத்து கறுவாக்காடு பொலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

அந்தப் பையில் 99ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் இருந்ததாக அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

20ஆயிரம் ரூபா பெறுமதியான பேனாவும் 8ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்கக் கணனி ஒன்றும் காசோலை புத்தகம் மற்றும் சில ஆவணங்களும் அதில் இருந்ததாக தெரிவித்துள்ளார்.

மங்கள சமரவீர பைக்குள் இருந்த ஆவணங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் காட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அந்த ஆவணங்கள் எவ்வாறு கிடைத்தன என்பது குறித்து ஆங்கிலப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியரிடமிருந்து இலத்திரனியல் ஊடக நிறுவனத்திடமிருந்தும் விளக்கங்கள் கோரப்பட்டுள்ளதாக கறுவாக்காட்டுப் பொலீஸ் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ)

## கொழும்புத்துறையில் குடிதண்ணீர் இன்றி மக்கள் அவதி

கொழும்புத்துறை,ஒக.30

கொழும்புத்துறைப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்து வருவதை அடுத்து அங்கு குடிதண்ணீர்ப் பிரச்சினை உருவாகியுள்ளது.

இப்பகுதிக் கிணறுகள் உவர் நீராக உள்ளதாலும், நன்னீர்க் கிணறுகள் உள்ள பகுதிகளுக்கு மக்கள் செல்ல அனுமதிக்கப்படாததாலுமே மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகக் கூறப்பட்டது.

இதுவரை காலமும் பாவனையில இருந்த யாழ்மாநகர சபையின் குழாய் நீர் விநியோகப் பாதைகள் தாக்குதல் காரணமாக பலத்த சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(எ-ரி)

## குடத்தனை விபத்தில் இருவர் படுகாயம்!

தென்மராட்சி,ஒக.30

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மதகுடன் மோதியதில் அதில் பயணம் செய்த இருவரும் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்த சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை குடத்தனையில் இடம்பெற்றுள்ளது.

கரவெட்டியைச் சேர்ந்த, கு.இராமலிங்கம் (வயது 54), இ.குகனேஸ்வரன் (வயது 22) ஆகியோரே இவ்வாறு காயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ-117)

## விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

குருநகர்,ஒக.30

தேசிய பாடசாலைகளில் கடமை புரியும் ஆசிரியர்கள் 2003ஆம் ஆண்டிற்கான இடமாற்ற விண்ணப்பங்களை அனுப்புவதற்கான முடிவு திகதி அடுத்தமாதம் 15ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப்பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார்.

தேசிய பாடசாலைகளில் சேவை புரியும் ஆசிரியர்கள் தாம் சேவை புரியும் பாடசாலை அடக்கிய மாவட்டத்துக்கும், மாவட்டத்துக்கு வெளியே உள்ள பாடசாலைக்கும் இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்கலாம் என்றும் - அவர் தெரிவித்துள்ளார். (எ-51)

## இன்றுமுதல் 'ஸ்பார்ட்டக்கஸ்'

யாழ்ப்பாணம்,ஒக.30

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின ஏற்பாட்டில் இன்று முதல் அடுத்து வரும் மூன்று நாள்களுக்கு தினமும் மாலை 6.45 மணிக்கு மன்றக் கலாமண்டபத்தில் 'ஸ்பார்ட்டக்கஸ்' என்ற நாடகம் மேடையேற்றப்படவுள்ளது.

கி.மு.17ஆம் நூற்றாண்டில் ரோம சாம்ராஜ்ஜியத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த ஒரு வீரனின் கதையை மையமாகக் கொண்டதே இந்த நாடகம்.

உலகப் புகழ்பெற்ற அறிஞர்கள் பலரால் நாவலாகவும் திரைப்படமாகவும் தயாரிக்கப்பட்ட இந்த வீரனின் கதையை யாழ்.திருமறைக் கலாமன்றத்தினர் மிகவும் பிரமாண்டமான நாடகமாகத தயாரித்துள்ளனர்.

(ஒ-4)

## நுணாவிலில் நூல்நிலையம்

தென்மராட்சி,ஒக.30

சாவகச்சேரி நகரசபை பொது நூல்நிலையத்தின் நுணாவில் கிளை இன்றுமுதல் மீண்டும் இயக்கவுள்ளது.

யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த இக்கட்டடம் மூன்று லட்சத்து 70 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

யுத்த அனர்த்தங்கள் காரணமாக மேற்படி நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான புத்தகங்கள் முற்றாக அழிவடைந்துள்ளதுடன் காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

மக்கள் மீளக்குடியமர்ந்ததைத் தொடர்ந்து மீசாலை கிளை நிலையம் கடந்த ஜனவரி தொடக்கம் இயங்கி வருவதாகவும்-

சாவகச்சேரி பொதுநூல் நிலையக் கட்டடம் பன்னிரண்டரை லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(எ-117)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| கைதடியில் தோற்றம் | | ஜேர்மனியில் மறைவு |
|---|---|---|
| 13 - 06 - 1956 | | 30 - 08 - 1999 |



அமரர்

### கணபதிப்பிள்ளை செல்வரத்தினம்

*குடும்பத்தின் ஒளிவிளக்காய் விளங்கிய அன்புத் தெய்வமே!*
*நீங்கள் மறைந்து வருடம் மூன்று சென்றபோதும்*
*உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு என்றென்றும் நீங்காது.*

*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*கைதடி தெற்கு.* (7649) பிரிவால் துயருறும்: **குடும்பத்தினர்.**

## நீங்கா நினைவுகளுடன் 31ஆம் நாள் நினைவஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 1985 ✦ 02 ✦ 17 | | 2002 ✦ 07 ✦ 31 |



### அமரர் குணலிங்கம் சுயந்தன் (சுதன்)

(கம்பர்மலை, அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவன்)

உன் பகிடி கேட்டுச் சிரிக்கவென்று
கூடுமே ஒரு குழாம்!
சிரிப்புக்கு இனி விடுமுறையோ?
உன்முகம் காணாததோ
அதன் காரணமோ?
பள்ளி முடியுமுன் பாடை அணைத்தவனே!
அள்ளி எடுக்க உன் அன்னை இருக்க
காதல் கொண்டு உனை அணைத்த ஆண்டவன்
மோதல் கொண்டு எமைக் கண்ணீராக்கினானோ?
துடுக்குடன் மிடுக்காக வரும் எம் சுதனே!
நீ சென்றவிடம் கல்லறையென்றால்
கல்லறையாக நாம் மாற மாட்டோமோ?

*பாரதி வீதி,*
*கம்பர் மலை,*
*வல்வெட்டித்துறை.* (7634)

காசிநாதர் குடும்பம்,
தாய்: **புஸ்பராணி,**
மாமா: **ஆனந்தன்.**


## நிப்பொன் (NIPPON)

குளிர் / சூடான நீர் வழங்கி

**Hot & Cold Water Dispenser**

*சூடான தேநீர், கோப்பி மற்றும் குளிர்பானங்களை இலகுவில் தயாரிக்கலாம்*

Heavy Duty வகை
- ஜப்பானிய Compressor
- பொது இடங்கள் அலுவலகம் மற்றும் வீடுகளில் பாவிக்கக் கூடியது.

Light Duty வகை
- இலகுவானதும் கவர்ச்சிகரமானதும்
- 3 கலன் நீர் கொள்கலனுடன் கூடியது.
- அலுவலகம், வீடுகளில் பாவிக்கக் கூடியது
- எவ்வேளையிலும் குளிர் / சூடான நீரை பெறமுடியும்
- வெப்பநிலை மாற்றிக் கொள்ள கூடியது



**LANKA NIPPON**

No.18, Keyzer St, Colombo-11.Tel:437735.
No.10, Trelawny Place, (Behind Milk Bar),
BambalapitiyaJunc,Colombo-04.Tel:589992.

AVAILABLE ISLAND WIDE

நிப்பொன் உத்தரவாதமுள்ள தயாரிப்புக்கள்


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 29 - 04 - 1943 | | 22 - 08 - 2000 |



### அமரர் காசிநாதன் ஜோதிநாதன்

**திதி: ஸப்தமி 30-08-2002**

எமது இல்லத்தின் அழகு உருவம் ஜோதி மறைந்து
ஆண்டு இரண்டு சென்று விட்டதுவே
உடலால் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உணர்வுகளால்
எங்களுடன் ஒன்றாகி நிற்கும் ஜோதியே
உங்களுடன் நடந்து வந்த பாதைதனை நினைக்கையில்
நெஞ்சம் எல்லாம் விம்மி வெடிக்கிறதே
தாங்கமுடியாத தங்கள் பிரிவை சுமக்கையில்
உடலெல்லாம் நெருப்பாய் வேகிறதே
என்செய்வோம் இதுதான் வாழ்க்கை என்ற
தத்துவத்தை உணர வைத்து விட்டீரே
வாழ்கிறோம் நெஞ்சிருக்கும் வரை தங்கள்
நீங்காத நினைவுகளுடன்.

*தங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டிநிற்கும்:*

*திருமதி ம.ஜோதிநாதன்,*
*54,சீனியர் லேன்.*
*கலட்டி அம்மன் கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.*

அன்பு மனைவியும் மற்றும்
பாசமுள்ள குடும்பத்தினர்
அனைவரும்.

(7626)


உயர்தர பாடங்கள் இரண்டு → இந்தியாவில் பெங்களூர் பல்கலைக்கழகத்துடன் இணைந்த நெஷனல் பஸ்ட்கிரேட் கொலேஜ் → மூன்று ஆண்டுகள் → பெங்களூர் பல்கலைக்கழகப் பட்டம்

பட்டப்படிப்புகள்

| | | |
|---|---|---|
| B.B.M. | - | Business Management |
| B.C.A. | - | Computer Application |
| B.Sc. | - | Computer Science |
| B.Sc. | - | Microbiology |
| B.Sc. | - | Genetics |
| B.Sc. | - | Biotechnology |

- ★ கருத்தரங்கிற்கு கட்டண அறவீடு இல்லை.
- ★ மாணவ, மாணவிகள் குறைந்தது க.பொ.த. உயர்தரத்தில் சம்பந்தப்பட்ட இரு பாடங்களில் சித்தி.
- ★ இலங்கையின் 200இற்கும் கூடுதலான மாணவர்கள் 35 நாடுகளின் மாணவர்களுடன் கல்வி பயிலுகின்றனர்.
- ★ தற்பொழுது 95இற்கு மேற்பட்ட இலங்கை மாணவர்கள் பெங்களூர் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருக்கின்றனர்.
- ★ அனுபவமிக்க விரிவுரையாளர்கள், பூரணமான ஆய்வுகூட, நூலக வசதிகள்.
- ★ ஆண்களுக்கு, பெண்களுக்கு தனித்தனி தங்குமிட வசதி.
- ★ மாணவர்கள் பெற்றோருடன் அல்லது பாதுகாவலருடன் பாஸ்போர்ட் அளவு புகைப்படம், சான்றிதழ் ஆகியவற்றுடன் வந்து 400 அமெரிக்க டொலர்கள் செலுத்தி இடம் ஒதுக்கமுடியும்.

கருத்தரங்கு: மு.ப. 9.30
சேர்த்துக்கொள்ளல்: 10.30 தொடக்கம் 5.00 மணிவரை.
2002 செப். 1 ஞாயிறு
கொழும்பு ஹில்டன் ஹோட்டல்

மேலதிக விவரம்: திரு.குணவர்த்தன 01 - 811524
திரு.குணசேகர 038 - 32657, 038 - 34154, 078 - 697512.

**கம்பனி செக்ரட்டேரியல் சர்விசஸ் பிரைவேட் லிமிட்டட்,**
285C - 1/1 ஸ்டான்லி திலகரத்ன மாவத்தை, நுகேகொடை.
தொலைபேசி: 01 - 854438
ஈமெயில்: yapadd@sol.lk

(C/23323)

# திருகோணமலை அடிதடி; பின்னணியில் ஜே.வி.பி.

## அம்பலமாகும் ரகசியங்கள்

நாட்டில் யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானத்திற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கான நாள் குறிக்கப்பட்டுவிட்டது.

யுத்தத்திற்கென செலவிடப்பட்ட பெருந்தொகைப் பணம் மீதமானால் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு எனப் பெருந்தொகைப் பணத்தைச் செலவிடலாம். அதன்மூலம் நாட்டின கைத்தொழில் துறைகளில் பெரும் அபிவிருத்தி காணமுடியும். வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கலாம் என்றெல்லாம் அரசு திட்டமிட்டுள்ளது.

கைத்தொழில் துறையை ஊக்குவிக்கும் விதத்தில் கடந்தவாரம் திருகோணமலையில் 'யுக தரிசனம் - 2002' கண்காட்சி நடத்தப்பட்டது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே இந்தக் கண்காட்சியைத் திறந்துவைத்தார்.

ஐந்து தினங்களாக நடைபெற்ற கண்காட்சி மிகவும் கோலாகலமாக நிகழ்ந்து, நாட்டு மக்களை குறிப்பாக தமிழ்மக்களைப் பெரிதும் கவர்ந்துவிட்டது. ஆனால், யார் கண்பட்டதோ கண்காட்சியின் இறுதிநாளன்று பெரும கொந்தளிப்பே நிகழ்ந்திருக்கிறது.

திருமலை அடிதடிகளின் பின்னணி இப்போது அம்பலத்திற்கு வந்திருக்கிறது. கைதான சிங்களவர்களில் ஜே.வி.பி. ஆதரவாளர்கள் இருந்தார்கள் என்பது தெரியவந்திருக்கிறது.

ஐ.தே.முன்னணியின் சமாதான முயற்சிகளை ஸ்ரீலங்கா சுதந்திக் கட்சியினருடன் சேர்ந்து குழப்பியடிக்க ஜே.வி.பியினர் கங்கணங்கட்டியிருக்கிறார்கள் என்று ரகசியத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. அந்த வரிசையில் திருமலை அடிதடி சம்பவம் முதன்மையானது என்று அரச தரப்பினர் கருதுகின்றனர்.

### கலவரத்துக்குத் தூபம்

தமிழீழ வரலாற்றில் முக்கிய சர்ச்சைகளின் அத்திபாரமாக அன்றிலிருந்து இன்றுவரை கருதப்படுவது திருகோணமலையே ஆகும்.

அந்த வரிசையில் "யுகதர்ம - 2002" இறுதிநாள் நிகழ்வில் இடம்பெற்ற கலவரம் சிறியதோர் இனக் கலவரத்துக்கு தூபமிட்டு ஆரம்பிக்கப்பட்டது என்றே உணரமுடிகின்றது.

சம்பவம் இப்போது கட்டுப்படுத்தப்பட்டாலும், அது நீறுபூத்த நெருப்பாக அமுங்கிக்கிடப்பதை அவதானிக்கமுடிகின்றது.

இதற்கு கடந்த சனிக்கிழமை சிங்களவர்களால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் சான்றாக அமைகின்றது.

கண்காட்சியின் இறுதியில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சி பெரும் அடிதடி ரகளையில் கலவரமாக முடிவுற்றது. அடிதடி, மோதல், வெட்டுக்குத்து ஆகியவற்றில் 27 பேர் காயமடைந்தனர். பல பஸ்கள், மினிபஸ்கள், வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டன.

திருகோணமலை விளையாட்டு அரங்கில் இசைநிகழ்ச்சி இடம்பெற்றது. அங்கு தொடர்ந்து இரு மணிநேரமாக சிங்களப் பாடல்களே இசைக்கப்பட்டதால் தமிழ்ப் பாடல் பாடும்படி இசைக்குழுவினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதை அடுத்து இரண்டு தமிழ்ப் பாடல்கள் இசைக்கப்பட்டன.

உடனே 'தொடர்ந்தும் தமிழ்ப் பாடல்கள் பாடவேண்டாம்' என்று கூக்குரல் கிளம்பியது. அப்படிக் கூக்குரலிட்ட கோஷ்டி அரங்கிற்குள் கற்களை வீசி எறிந்தது.

அதேசமயம், இளைஞர்கள் சிலர் அந்தக் கோஷ்டியினரால் தாக்கப்பட்டனர். தாக்குதலுக்கு இலக்கான இளைஞர்கள் ஏனையோரையும் அரங்கிலிருந்து வெளியேறுமாறு சத்தமிட்டனர். அவர்களை அங்கு கடமையிலிருந்த பொலீஸார் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

இதேசமயம், அரங்கினுள் நடமாடிக்கொண்டிருந்த பெரும்பான்மை இனக் கோஷ்டிகள் இரண்டுக்குமிடையிலும் மோதல் வெடித்தது.



திருகோணமலையில் கடந்தவாரம் இடம்பெற்ற வர்த்தகக் கண்காட்சியின் இறுதிநாள் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியின்போது இடம்பெற்ற தாக்குதல்களில் சேதமாக்கப்பட்ட இராமகிருஷ்ணர் சிலையையும், தாக்கப்பட்ட ஓட்டோக்களில் ஒன்றையும் படங்களில் காணலாம்.

அரங்கத்தின் முன்னால் வெடித்த மோதல் மேலும் வலுத்து நகரின் பல பகுதிகளுக்கும் பரவியது. கலைத்துக் கலைத்து அடிபட்டு கொண்ட கோஷ்டிகள் அநுராதபுரம் சந்தி வரை சென்று சண்டையிட்டன. நடுநிசி கடந்து மறுநாள் அதிகாலை வரை இடம்பெற்ற மோதல்களில் - சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி - சம்பவம் நடந்த இடத்துக்கு அருகிலிருந்த சில கடைகளும் சூறையாடப்பட்டன.

### எஸ்.எஸ்.ஆர்.

தனியார் பஸ்கள், வான்கள், தனியார் நிறுவனங்கள், கடைகள், என்பவற்றின்மீது கல்வீச்சு இடம்பெற்றது. இதனால் அவை பலத்த சேதமடைந்தன.

ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்கு அருகில் உள்ள வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிலை அடித்து உடைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கு சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் பயிற்சிப் படையணியை ஏற்றிவந்த தனியார் பஸ்ஸும் தாக்குதலுக்குத் தப்பவில்லை. அதன் கண்ணாடிகள் அடித்து நொறுக்கப்பட்டன.

காயமடைந்தவர்களில் 16 பேர் முஸ்லிம்கள், அறுவர் சிங்களவர்கள், ஐவர் தமிழர்கள்.

காயமடைந்த முஸ்லிம் இளைஞர் ஒருவர் மறுநாள் காலை கடற்கரை யோரத்திலிருந்து மயக்கமான நிலையில் மீட்கப்பட்டார்.

போக்குவரத்துச்சபை பஸ்கள் - ஏழு, தனியார் பஸ்கள் - ஆறு மற்றும் ஓட்டோக்கள், கார்கள் எனப் பல வாகனங்கள் சேதமடைந்தன. நகரில் பல கடைகள் நொறுக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடல் படிக்கக்கூடாது என்பதற்காக மட்டும் ரகளை இடம்பெற்றதாகச் சொல்லமுடியாது. சமாதானம், இடைக்கால நிர்வாகம் பற்றிய அமைச்சர்களது கூற்றுக்களைப் பொறுக்கமுடியாத இனவாதிகள் நன்கு திட்டமிட்டே காரியத்தைச் சாதித்துள்ளனர்.

பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டிருந்தநிலையிலும் தாக்குதல் தொடர்ந்திருப்பதைக் கூர்ந்து கவனிக்க வேண்டியிருக்கிறது.

சிறுபான்மையினர் மேலும் தாக்கப்படவேண்டும் என்பதற்காக ஒரு சிங்களப் பிரிவு திட்டமிட்டுக் காரியமாற்றியிருக்கிறது. பொலீஸாரை சிங்களவர்களே தாக்கியது அதற்காகத்தான் என்பது ஊர் அறிந்த விடயம்.

சிதறியோடிய மக்களில் முந்நூறுக்கும் மேற்பட்ட தமிழ், முஸ்லிம் இருபாலாரும் திருமலைக் கோட்டை இராணுவ முகாமில் தஞ்சம் புகுந்துள்ளனர். ஆனால், அவர்களைத் தேடி தாக்கச் சென்றவர்களை இராணுவத்தினர் தடுத்து, அவர்களை அடித்துக் கலைத்தும் இருக்கின்றனர். தஞ்சம்புகுந்த பொதுமக்களைப் பாதுகாத்து மறுநாள் காலையில் வீடு செல்வதற்கு அனுமதித்துள்ளனர். இது நம்பமுடியாத தெய்வச் செயலாகவே இருக்கிறது.

ஆனால், சம்பவங்கள் இத்தனை நடந்து பரபரப்பாகப் பேசப்படும்போது இந்தவிடயம் பற்றித் திருமலையில் உள்ள ஏழு எம்.பிக்களில் ஒருவர் கூட வாய்திறக்கவில்லை.

அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள் கிண்ணியா வாசிகள். அதுக்கு மட்டும் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர். அவர்களும் கண்டனம் தெரிவித்ததாகத் தெரியவில்லை.

ஒரு விசாரணைக்குழுகூட அமைக்கப்படவில்லை. சிங்களத் தரப்பினர் குற்றம் செய்ததும் இல்லாமல் தமது தரப்பினரை விடுவிக்கக்கோரி ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்; கடை அடைப்புச் செய்தார்கள்.

"கல்லும் பொல்லுமாகப் பிடிபட்டவர்களை எப்படி விடுவிப்பது?" என்று பொலீஸ் தரப்பினர் முணுமுணுத்துக் கொண்டிருந்தனர்.

அதேவேளை, ஒரு பொலீஸ் அதிகாரி ரகளை நடைபெற்ற தினத்தன்று ஒரு புலி உறுப்பினர் கைக்குண்டைக காட்டி மிரட்டினார் என்று கூறினார்.

சம்பவங்களைத் திசைதிருப்பி புலிகளின் தலையில் பழியைப் போடும் முயற்சி சிலர் மத்தியில் காணப்பட்டது என்பதற்கு இது ஓர் உதாரணம்.

அத்துடன் கைதுசெய்யப்பட்ட சிங்களவர்கள் ஜே.வி.பியின் தீவிர ஆதரவாளர்கள் என்ற விடயமும் தெரிய வந்துள்ளது. இதிலிருந்தே பிரச்சினையின் தோற்றுவாய் எங்கிருந்து வந்துள்ளது என்பது "வெள்ளிடைமலை."

### அடையாள அணிவகுப்பு

கைதுசெய்யப்பட்டவர்களைப் பாதிக்கப்பட்டவர்கள் முன்னிலையில் நிறுத்தி அடையாள அணிவகுப்பு கூட நடத்தப்படவில்லை.

இந்தவேளையில் ஒரு கேள்வி எழவே செய்கிறது. சாதாரண தமிழ்ப் பாடல் பாடுவதையே கேட்க முடியாதவர்கள் - சகிக்க முடியாதவர்கள் - எப்படி இடைக்கால நிர்வாகத்தை ஏற்றுக்கொள்ளப்போகிறார்கள்?

கண்டி வல்போதி விகாரையில் சர்வோதய இயக்கத் தலைவர் ஏ.ரி.ஆரியரத்ன தலைமையில் நடைபெற்ற சமாதானத் தியானத்தைக் கூட சிங்களவர்களால் அங்கீகரிக்க முடியவில்லையே?

கண்டி வல்போதி விகாரை வளவில் சர்வோதய இயக்கத் தலைவர் ஏ.ரி.ஆரியரத்ன தலைமையில் நடைபெற்ற சமாதானத் தியானம் ஒரு கூட்டத்தினரால் குழப்பப்பட்டது. இதனால் 45 நிமிடங்களுக்குப்பின் அந்தத் தியானத்தை நிறுத்தவேண்டியதாயிற்று.

சமாதானத் தியானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்த கூட்டத்தினரில் பல பௌத்தபிக்குகளும், பல்கலைக்கழக மாணவர்களும் அடங்கியிருந்தனர். எதிர்ப்பில் ஈடுபட்டோர் ஆரியரத்ன மீது வசைபாடி கூச்சலிட்டபோது அவரும் அவரது தொண்டர்களும் மௌனமாகத் தியானத்தில் ஈடுபட்டிருந்தனர்.

கூட்டத்தினர் ஆரியரத்னவை நெருங்கியபோது கண்டி உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம்பொல உட்பட பொலீஸார் ஆரியரத்னவை அந்த இடத்திலிருநது அகற்றமுயன்றனர். இறுதியில், கூட்டத்தினரின் கூச்சலுக்கு மத்தியில் பொலீஸார் சர்வோதயத் தலைவர் ஆரியரத்னவை அங்கிருந்து கூட்டிச் சென்றனர்.

### சர்வோதயத் தலைவர் கருத்து

பின்னர் இதுகுறித்து கருத்துத் தெரிவித்த ஆரியரத்ன, "இலங்கையின் பல பகுதிகளிலும் தியான நிகழ்ச்சிகளைத் தான் நடத்தியபோதிலும் இதுபோன்ற ஓர் அநாகரிகச் செயலுக்கு முகங்கொடுத்தது இதுவே முதல் தடவையாகும்" - என்றார்.

அமைதியின் வடிவமாகத் திகழ வேண்டிய பௌத்தபிக்குகளும், பல்கலை அறிவும் பெற்ற பல்கலைக்கழக மாணவர்களும் சமாதானத் தியானத்தைக் குழப்புவதற்கு முன்னின்றிருக்கிறார்கள் என்பதை அறியும்போது எவ்வளவு வேதனையாக இருக்கிறது.

இடைக்கால நிர்வாகமோ அன்றி மாற்றுத்திட்டமோ முன்வைக்கப்படும் பொழுது, வெறும் ஆவணத் தயாரிப்புகள் மட்டும் வெற்றியைத் தந்துவிடப்போவதில்லை. நடைமுறைக்குச் சாத்தியமாகும்வகையில் யதார்த்த நிலையை உணர்த்தவேண்டியது சிங்களத் தலைமைகளின் கடமையாகிவிட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றிப் பீதியுடன் இருந்த சிங்களவர்களுக்கு இடைக்கால நிர்வாகம் பற்றிய தெளிவை ஏற்படுத்துவது இமயச் சாதனைதான்.

தமிழர்களின் போராட்டம் நியாயமானது என்று சிங்களத் தலைமைகள் 20 வருடங்கள் கடந்த பின்பு தான் புரிந்துகொண்டன. இந்நிலையில் அடிமட்டங்கள் இதனைப் புரிந்துகொள்ளாதது வேடிக்கை என்பதற்கல்ல.

சுமுகமான பேச்சுகள் இடம்பெறுவதும் இடைக்கால நிர்வாகம் வழங்கப்படும்போது பௌத்த பேரினவாதம் கைதட்டி வரவேற்காவிட்டாலும் கைகட்டிக் கொண்டு நிற்கப்போவதில்லை. அதற்கு ஆதாரமான செயல்களே புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிறபாடு இடம்பெற்றுவருகின்றன.

### சிறுபான்மையினர் பாதுகாப்பு

தமிழ்ப்போராளிகளின் ஆயுதங்களைக் களைந்ததோடு மட்டுமல்லாது புலிகளின் கரங்களும் கட்டப்பட்ட நிலையில் சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது அரசின் கடமை ஆகும். அத்துடன், வேலியே பயிரை மேயாதவகையில் பாதுகாத்துக் கொள்ளவேண்டியதும் அவசியமாகின்றது.

சிறுபான்மை மக்களுக்கு வழங்கும் இடைக்கால நிர்வாகமோ அல்லது வேறேதும் மாற்றீடோ எதுவாக இருந்தாலும் அதில் முக்கியத்துவம் பெறுவது இறைமையாகும். இறைமையும் தன்னாதிக்கமும் உடைய ஜனநாயக சோஷலிச குடியரசில் இருந்து பராதீனப்படுத்தப்பட முடியாத இறைமை அதிகாரத்தைத் தமிழர்களுக்கான சுயநிர்ணய உரிமை வழங்கும்போது எவ்வாறு செயற்படுவார்கள் என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

அடுத்து, வடக்கு-கிழக்கின் பிரதான பிரதேசமாகவும் தமிழர் தாயகத்தின் தலைநகராகவும் விளங்கும் திருகோணமலை பற்றியும் குறிப்பிடப்பட வேண்டும்.

திருகோணமலை இன்றி ஒரு வடக்கு - கிழக்கை முன்னர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசு தருவதற்குத் தலைப்பட்டபோது அமரர் அமிர்தலிங்கம் ஆவேசத்துடன் மறுப்புத் தெரிவித்தது நினைவிற்கொள்ளவேண்டிய விடயம்.

திருகோணமலை தவிர்ந்த வடக்கு-கிழக்குத்தான் கிடைக்கும் என்றால் அதற்கு இத்தனை கால இழப்புகள் தேவைப்பட்டிருக்காது.

எனவே, இத்தகைய தூரதிர்ஷ்டியான சிந்தனைகளும் அதற்கான விடைகளும் கண்டறியப்படவேண்டிய அவசியத்தை சிங்களப் பேரினவாதிகளின் நடவடிக்கைகளே ஏற்படுத்திவிட்டன.

ஆகவே, தமிழ்ப் பாடலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் மத்தியிலிருந்து இடைக்கால நிர்வாகத்தையோ, நியாயமான எதனையோ பெறும்போது விழிப்புடன் செயற்படுவது வெற்றியைத் தரும். (நன்றி:சுடர் ஒளி)

# நம்பிக்கைப் பிரேரணை வாக்கெடுப்பில் நடுவுநிலைமை வகிப்பதில் காங்கிரஸ் உறுதி

அரசின்மீது நம்பிக்கை கோரும் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் அரசை ஆதரித்தோ, எதிர்த்தோ வாக்களிக்காமல் நடுவுநிலை பேணுவது என்ற தனது முடிவில் தமிழ்க் காங்கிரஸ் உறுதியாக உள்ளது.

இது தொடர்பாக அக்கட்சி நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

அரசின்மீது நம்பிக்கையைப் பிரகடனப் படுத்தும் வகையில் கொண்டு வரப்படவிருக்கும் பிரேரணை தொடர்பாக தமிழ்க் காங்கிரஸ் ஏற்கனவே எடுத்த தீர்மானத்தை மறுபரிசீலனை செய்து அரசுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பின் ஏனைய மூன்று கட்சிகளும் கடந்த செவ்வாய் மாலை கூடித் தீர்மானித்திருந்தன.

அதற்கேற்ப அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் செயற்குழு கடந்த புதன் மாலை கொழும்பில் கூடி தனது நிலைப்பாட்டை ஆராய்ந்தது. இந்தப் பிரேரணை தொடர்பாக ஏற்கனவே தான் எடுத்த நிலைப்பாட்டை மேலும் வலியுறுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகத்தில் இயல்புவாழ்க்கை முறை உருவாக்கப்படவில்லை. அதிஉயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன. இன்னமும் அவை அகற்றப்படவில்லை. வலி.வடக்கு, தென்மராட்சி மற்றும் திரியாய் உட்பட கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் லட்சக் கணக்கான தமிழர்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்படாது தடுக்கப்பட்டுள்ளனர். தமிழர் தாயகத்தின் கரையோரம் வாழ் மக்களும் மீனவர்களும் தங்களது ஜீவனோபாயத்தை மேற்கொள்ள முடியாது தடுக்கப்பட்டுள்ளனர். அப்பிரதேசத்தில் மக்கள் நடமாடவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மக்களின் இந்தப் பிரச்சினைகளுக்கு பரிகாரம் காண அரசு அக்கறை ஏதும் எடுக்கவில்லை. வடக்கு - கிழக்கில் முழுமையான இயல்பு வாழ்க்கை ஏற்படவில்லை. ஆனால் இத்தீவின் ஏனைய பகுதிகளில் சகஜநிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழர் விவகாரத்தில் ஒவ்வொரு விடயத்திலும் அரசு மனமுவந்து தானாக நடவடிக்கை எடுக்கப் பின்னிற்கிறது. நாம் அழுத்தத்தைக் கொடுத்து எமது உரிமைகளை பெற முயன்று வருவதுதான் யதார்த்தத்தில் நடக்கிறது.

நாம் மேலே குறிப்பிட்ட ஒவ்வொரு விடயமும் மனித இனத்தின் அடிப்படை உரிமைகள் மட்டுமல்ல. போர்க்காலத்திலும்கூட பறிக்கப்பட முடியாத அடிப்படை ஜீவாதார உரிமைகள்.

இந்தக் காரணங்களால் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்படி அரசு மீதான நம்பிக்கைப் பிரகடனப் பிரேரணைமீதான வாக்கெடுப்பில் சாதகமாக வாக்களிக்க முடியாத நிலை உள்ளது. என செயற்குழு ஏகமனதாக முடிவு செய்கின்றது.

அதேவேளை, அரசு - தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கும் இச்சந்தர்ப்பத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், அரசுக்கு எதிராக வாக்களிக்கமாட்டாது என்பதையும் வலியுறுத்த விரும்புகின்றது. - என்று உள்ளது. (ம)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

விடத்தற்பளை, மிருசுவில் என்னும் முகவரியைச் சேர்ந்த கந்தசாமி கனகாம்பிகை என்பவரது தேசிய அ.அ. (526015010V), விசேட அ.அ. (091032634), தொழில் அடையாள அட்டை என்பன 26.08.2002 அன்று நெல்லியடியிலிருந்து யாழ்ப்பாணம் வரும்போது பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் K.கந்தவேள், மாவடி, கரவெட்டி கிழக்கு என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (7631)

ஓட்டுவெளி, மிருசுவிலைச் சேர்ந்த கனகசபை ஜெகதீஸ்வரி என்பவரின் தேசிய அடையாள அட்டை (இல. 638231999V), விசேட அடையாள அட்டை (இல.091032888) என்பன திருநெல்வேலிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வராகி கூல்பார், இல.15, பஸ்நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (7670)

லோட்டன் வீதி, மானிப்பாயைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை டயானா என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.826240814V), விசேட அ. அட்டை (இல.0905020578) என்பன நாவாந்துறைக்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (7679)

28.08.2002 புதனன்று புளியங்குளம் சோதனைச் சாவடியில் பாடசாலைப் பை ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பையினுள் இருக்கும் கடிதத்தில் உள்ள முகவரியில் அல்லது ஆவரங்கால் கிருஷ்ணா கடையில் ஒப்படைத்து உதவவும். (7680)

## செங்கரும்பு விற்பனைக்கு

நல்லூர்த் திருவிழாவில் விற்பனை செய்வதற்குத் தேவையான செங்கரும்புகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவான விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: வை.பேரம்பலம், தலையாழி, கொக்குவில். (7668)

## விற்பனைக்கு

பல நிறங்களில் லவ்பேட்ஸ், ஜவாபரட், விஞ்சோஸ், ஆபிரிக்க லவபேட்ஸ் குருவிகள், புதிய இன வர்ண மீன்கள், மீன் தொட்டிகள், தொட்டிக்குரிய அனைத்துப் பொருள்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 40/17, சீனியர் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (7548)

நல்லூர் கோயில் வீதியில் மூன்று பரப்புக் காணியில் அமைந்த இரண்டு மாடி வீடுகள் உடனடியாக விற்பனைக்கு உண்டு. (கந்தன் கருணைக்கு அண்மையில்) தொடர்பு: திருமதி குமாரசாமி, 427, கோயில் வீதி, நல்லூர். (7577)

சிங்கப்பூரில் இருந்து புதிதாக தருவிக்கப்பட்ட Daba Video SE - 200 Pro என்ற Video Audio Mixture விற்பனைக்கு உண்டு. அதுடன் 30mm என்லாஜர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 42/9, இராஜேந்திரா வீதி, குருநகர். (7615)

## வேலையாள்கள் தேவை

சமையல் வேலைக்கு ஒரு பெண்ணும் மற்றும் வேலைகளுக்கு ஓர் ஆணும் தேவை. தங்கியிருக்க வேணடும். சாப்பாடும் நல்ல சம்பளமும் தரப்படும். நேரில் வரவும். தொடர்பு: தளபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர் (7596)

## தேவை

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் தேவை. தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி (வட்டக்குளம் முன்பாக), கட்டப்பிராய் (7674)

சிறிய ரக லொறி (மரபொடி) விற்பனைக்கு உள்ளவர்கள் உடன் தொடர்புகொள்ளவும். தொடர்பு: சி.சண்முகலிங்கம் (சிறி), பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி, இணுவில் தெற்கு. T.P.: 070-212390 (7676)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

**இலங்கை**

**பொதுப்பட்டமளிப்பு**

**2002.10.12**

**கலாநிதி/ முதுமாணி/ பட்டங்கள்/ டிப்ளோமா ஆகிய பட்டங்களை அளிப்பதற்காக 2002.10.12 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொதுப்பட்டமளிப்பு நடைபெறும். பின்வரும் தேர்வுகளில் பட்டங்கள் பெறத் தகுதியுடையவாகள் 2002.09.19ஆம் திகதிக்கு முன்னர் தமது வேண்டுகோளை விடுத்தல் வேண்டும்.**

1. கலாநிதித் தேர்வு.
2. முதுதத்துவமாணித் தேர்வு.
3. கல்வி முதுமாணித் தேர்வு.
4. பட்டப்பின் கல்வி டிப்ளோமாத் தேர்வு.
5. வைத்தியமாணி, சத்திரசிகிச்சை மாணித் தேர்வு.
6. சித்தவைத்தியமாணி, சத்திர சிகிச்சைமாணித் தேர்வு.
7. வணிகமாணித் தேர்வு.
8. தொழில் நிர்வாகமாணித் தேர்வு.
9. விஞ்ஞானமாணித் தேர்வு (பொது/சிறப்பு).
10. கலைமாணித் தேர்வு (பொது/சிறப்பு).
11. இசை, நாட்டிய கலைமணித் தேர்வு.
12. நுண்கலைமாணித் (இசை/நடனம) தேர்வு.
13. விவசாய விஞ்ஞானமாணித் தேர்வு.

**வேண்டுகோள்களை மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாக அனுப்பி வைத்தல்வேண்டும். வேண்டுகோள படிவங்களையும் மற்றும விவரங்களையும் முத்திரை ஒட்டிய 23x10செ.மீ. அளவுடைய சுய விலாசமிடப்பட்ட கடித உறையை "உதவிப் பதிவாளர், தேர்வுகளும் அனுமதிகளும் கிளை, யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்." எனும் முகவரிக்கு அனுப்பியோ அல்லது வழமையான வேலை நேரங்களில் தேர்வுகளும் அனுமதிகளும் கிளையில் நேரடியாக வந்தோ பெற்றுக் கொள்ளலாம். குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் கிடைக்கப் பெறாத வேண்டுகோள்கள் நிராகரிக்கப்படும்.**

**வேண்டுகோள் படிவங்களை பின்வரும் இடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.**

**01. வவுனியா வளாகம், புகையிரத நிலைய வீதி, வவுனியா.**

**02. கொழும்பு களஞ்சியம்/ காரியாலயம், EG4, மத்திய வீதி, கொழும்பு - 12.**

(C/23368) **பதிவாளர்.**




## நல்லையில் இன்று பீடாரோஹணவிழா

யாழ்ப்பாணம்,ஓக.30

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் 36 ஆவது பீடாரோஹண விழா இன்று அதிகாலை 5 மணியுடன ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

வீதிபஜனை, அபிஷேகம், பீடாபிஷேகம், திருமுறைப்பாராயணம், ஆத்மார்த்த பூசை, கொலுபூசை மற்றும் பட்டணபிரவேசத்தைத் தொடர்ந்து நண்பகல் 12 மணியளவில் மாகேஸ்வரபூசை நடைபெறும்.

பிற்பகல் 2 மணிக்கு திருமுறை முற்றோதல், கந்தபுராணப் படிப்பு என்பன இடம்பெறும். மாலை 6 மணிக்கு புல்லாங்குழல் இசைக் கச்சேரி நடைபெறும். (எ)

## அபிவிருத்தி நிதி திரும்பிச் செல்லும் அபாய நிலை

சாவகச்சேரி அபிவிருத்திக்கென ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் 5கோடி ரூபா மதிப்பில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத் திட்டங்கள் இதுவரையும் முன்னெடுக்கப்படாததால் அவற்றுக்கான நிதி திரும்பிச் செல்லும் அபாயநிலை தோன்றியுள்ளது.

சாவகச்சேரி நகர அபிவிருத்திக்கான திட்டங்கள் இதுவரையிலும் தயாரிக்கப்படாததால் இப்பணம் செலவிக்கப்படாத நிலையில் திரும்பக் கூடும் என்று கூறப்படுகிறது.(ஓ-117)

## பிரதேச ரீதியாக சிறுவர்தின நிகழ்வுகள்

வலி.மேற்கு,ஓக.30

சர்வதேச சிறுவர் தினம் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி கொண்டாடப் படவுள்ளது.

இந்த ஆண்டில் சகல பிள்ளைகளுக்கும் கல்வி என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு சிறுவர்களது உரிமைகள், அவற்றைப் பாதுகாத்தல என்பவற்றை பிரதிபலிக்கும் வகையில் பிரதேச மட்டத்தில் செயற்றிட்டங்களை வகுத்துச் செயற்படுத்துமாறும்-

சமூகத்தில் சிறுவர்களைப்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நிகழ்ச்சித்திட்டங்களை தயாரிக்குமாறும் -

வடக்கு - கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தைத் திணைக்கள ஆணையாளர் என்.ஆர்.ரஞ்சினி சகல பிரதேச செயலர்களுக்கும் அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இத்தினத்தையொட்டி பாடசாலை மாணவர்களிடையே பிரதேச மட்டத்தில் கட்டுரை, கவிதைப்போட்டிகளை நடத்துமாறும் அவர் கேட்டுள்ளார்.(எ-175)

**MATHS CENTRE**

**NELLIADY**

**A/L DAY CLASS**

- ★ Log. - பிரபானந்தன்
- ★ Tam. - அகிலன்
- ★ Hi - cu. / Hindu. - இராஜேஸ்கண்ணா
- ★ Drama - பிரதீபன்
- ★ Hi-stat . - சிவா
- ★ Po.sc . - சந்துரு

ஆரம்பமாகிவிட்டது. (7690)

## தாதிகள் தேவை

வைத்தியசாலையில் கடமைபுரிவதற்கு பெண்தாதிகள் தேவை. முன் அனுபவம் இருப்பின் விரும்பத்தக்கது.

தொடர்பு:

**ஜனனி மருந்தகம்**

ஆனைக்கோட்டைச் சந்தி (7688)

## அறிவித்தல்

**புதிய விஞ்ஞான கழகம், கல்லூரி**

இக்கல்லூரிகளில் கல்விகற்று 2002 A/L பரீட்சையூடாக பல்கலைக்கழக அனுமதிபெற்ற மாணவர்களை, ஆசிரியர்களைக் கௌரவிப்பது சம்பந்தமான கலந்துரையாடலிற்கு திங்கட்கிழமை (02.09.2002) மாலை 4.00 மணியளவில் "வெக்டர்" மண்டபத்திற்கு சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

(7681) - இயக்குநர்.

## வடமராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கம்

## அறிவித்தல்

**27.08.2002 அன்று நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்டத் தீர்மானத்திற்கு அமைய, 750 இலக்கப் பாதையில் சிற்றூர்திப் பதிவுகள் மறு அறிவித்தல் வரை மேற்கொள்ளப்படமாட்டா. கடந்தகால அங்கத்துவம் உடையவர்களின் பதிவு உரிமைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அறியத்தருகின்றோம்.**

சோ.செல்வராசா, செயலாளர். (7691) சு.சில்வஸ்ரர், தலைவர்.

## ரஷ்யாவில் மருத்துவக் கல்வி

சர்வதேச அங்கீகாரம் பெற்ற லுமும்பா போன்ற ரஷ்யப் பல்கலைக் கழகங்களில் மருத்துவக் கல்விபயில அனுமதி பெற்றுத்தரப்படும்.

| ஊடகம் | காலம் | செலவு |
|---|---|---|
| ஆங்கிலம் | 6 வருடம் | 3000 ~ 4000 டொலர் /வருடம் |
| ரஷ்யமொழி | 7 வருடம் | 2000 டொலர் /வருடம் |

இது இறுதிச் சந்தர்ப்பம்;ஆகவே, உடன் சந்திக்கவும்.

**Dr.க.சிவனடியான்.**

காலை: மூத்தவிநாயகர் கோயிலடி, ஆனைக்கோட்டை. (7687) மாலை: யாழ். வீதி, மானிப்பாய்.



உ

அளவெட்டி - நாகேஸ்வரம்

## ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்



## விசேட விழாக்கள்

*கண்ணன் அடியார்களே!*

எம்பெருமானுக்கு நடைபெறும் விழாக்களில் கலந்து ஸ்ரீநாக வரத நாராயணரைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெறும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

| | |
|---|---|
| சப்பறம் - | 30-08-2002 வெள்ளி மாலை 6 மணி |
| தேர் வீதிவலம் - | 31-08-2002 சனி முற்பகல் 11 மணி |
| உறியடி உற்சவம் - | 31-08-2002 சனி மாலை 5.30 மணி |
| ஸ்ரீரங்கநாதர் பாதபூஜை | 01-09-2002 ஞாயிறு மு.ப. 8.30 மணி |
| தீர்த்த உற்சவம் - | 01-09-2002 ஞாயிறு முற்பகல் 11 மணி |
| ஆஞ்சநேயர், வைரவர் பொங்கல் அபிஷேகம் - | 02-09-2002 திங்கள் காலை 8.30மணி |
| திருக்கல்யாணம் - | 02-09-2002 திங்கள் மாலை 3 மணி |

*விழாக்கால நேர ஒழுங்குகள்*

| | | | |
|---|---|---|---|
| காலை | 7.30 | மணி | பூசை |
| காலை | 8.30 | மணி | அபிஷேகம் |
| முற்பகல் | 10.30 | மணி | தம்பபூசை |
| முற்பகல் | 11.00 | மணி | கூட்டுப்பிரார்த்தனை |
| முற்பகல் | 11.45 | மணி | வசந்தமண்டப பூசை |
| பிற்பகல் | 3.00 | மணி | கலை நிகழ்ச்சிகள் |
| பிற்பகல் | 4.45 | மணி | தம்பபூசை |
| மாலை | 5.30 | மணி | வசந்தமண்டப பூசை |
| மாலை | 6.00 | மணி | சுவாமி எழுந்தருளல் |

*ஸ்ரீ நாகேஸ்வரம், அளவெட்டி.* பொறுப்புரிமை பரிபாலன சபை.

விளம்பர அனுசரணை:

**லிங்கன் கிறீம் ஹவுஸ்**

119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (7682)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை

**ரஞ்சனி இராஜேந்திரம்** அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் இராஜேந்திரம்**

அவர்களின் மரணச் செய்திகேட்டு அதிர்ச்சி அடைந்துள்ளோம். இக்குடும்பத்தாரின் துயரில் பங்குகொண்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து இறைவனிடம் ஆத்மசாந்திக்காக வேண்டி நிற்கின்றோம்.

யா/திருக்குடும்பக் கன்னியர் மடம். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள். (7686)

## கண்ணீர் அஞ்சலி

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் மூத்த உறுப்பினரும், யாழ்.மாநகரசபையின் முன்னாள் உறுப்பினருமாகிய

**திருமதி அந்தோனியா சாமிநாதர்**

அவர்களின் மறைவையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

*யாழ்ப்பாணம்.* (7685) அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்.

# பேச்சுக்கு முன்னர் தடைநீக்கம் இதுவே திருச்சபையின் விருப்பம்!

## மன்னார் ஆயர் வலியுறுத்து

மன்னார்,ஓக.30

தாய்லாந்தில் ஆரம்பமாக உள்ள பேச்சுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்கப்பட்டு சமாதான முயற்சிகள் சிறப்பாக இடம் பெறுவதையே கத்தோலிக்க திருச்சபை விரும்புவதாக மன்னார் மறை மாவட்ட ஆயர் ராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

பேச்சின் பின்னரே விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்கம் பற்றி யோசிக்க வேண்டுமென சமீபத்தில் இடம்பெற்ற சமயத் தலைவர்கள் மாநாட்டில் தீர்மானம் எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

உண்மையில் மதத் தலைவர்கள் பேரவைக் கூட்டம் என்று கூறிக் கொண்டு குறிப்பிட்ட சிலர் எடுத்த முடிவே அதுவாகும்.

மதத்தலைவர்கள் பேரவையில் கத்தோலிக்கத் திருச்சபை அங்கம் வகித்தாலும் குறிப்பிட்ட மாநாட்டிற்கு கத்தோலிக்கத் திருச்சபை சமுகமளிக்கவில்லை. இந்த அறிவிப்பிற்கும் எமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சமயத் தலைவர்கள் பேரவையின் அறிவித்தலுக்கும் எமக்கும் எதுவித தொடர்பும் இல்லை.

விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படுவதே கத்தோலிக்கத் திருச்சபையின் விருப்பமாகும். சமாதான முயற்சிகள் சிறப்பாக முன்னெடுக்கப்படுவதையே நாம் விரும்புகின்றோம்.

சமயத் தலைவர்கள் என்று கூறிக்கொண்டு சிலர் தமது சொந்த முடிவுகளை எடுத்துவருகின்றமை வருத்தத்திற்குரிய ஒரு விடயமாகும் என்றார் ஆயர். (ஓ-12)

### பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்தன

யாழ்ப்பாணம்,ஓக.30

குருநகரில் இயங்கிவரும் இருபத்து நான்கு பொது அமைப்புக்கள் இணைந்து 'குருநகர் பொது அமைப்புக்களின் ஒன்றியம்' என்னும் அமைப்பை உருவாக்கியுள்ளன.

கடற்றொழிலாளர் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், சனசமூக நிலையங்கள், மத அமைப்புக்கள் முதலான 24 அமைப்புக்களே இவ்வாறு ஒன்றிணைந்துள்ளன.

குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தை வண.பிதா அ.பி. ஜெயசேகரம் தலைமையில் நடந்த இந்நிகழ்வில் தலைவராக அ.யேசுதாஸன், செயலாளராக அ.க.எனெஸ்ட், பொருளாளராக செ.அ.சோமு ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்த அமைப்பின் போசகராக வண.பிதா ஜெயசேகரம் அடிகளார் செயற்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-12)

### கலைபண்பாட்டுக் கழக அலுவலகம் நாளை திறப்பு

யாழ்ப்பாணம்,ஓக.30

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழக யாழ்.மாவட்ட செயலகத் திறப்பு விழா, நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு பொற்பதி வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கவுள்ளதாக கலைபண்பாட்டுக்கழகத்தினர் தெரிவித்தனர். (ஓ-9)

### மின்கம்பிகள் உராய்வு

கன்னாகம் மயிலணிப் பகுதியில் மின்சார விநியோகக் கம்பிகள் ஒன்றுடனொன்று மோதி, பெரும் பிரகாசத்துடன் வெடிப்பதாகவும் -

இதனை சீர்செய்ய மின்சாரசபையினர் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் - அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். மின்கம்பிகள் தொங்கும் நிலையில் காணப்படுவதனாலேயே இவ்வாறு ஒன்றுடனொன்று மோதுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் உயரமான புதிய தூண்களை நிறுவி மின்கம்பிகளைச் சீர்செய்ய வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஓ-27)

### 20 நாள்களாக, யாழ்.ஆஸ்பத்திரியில் உரிமைகோருவாரின்றிக் கிடக்கும் முல்லைத்தீவு வாசியின் சடலம்

யாழ்ப்பாணம்,ஓக.30

முல்லைத்தீவில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக கடந்த 6ஆம் திகதி அனுமதிக்கப்பட்ட ஒருவர் சிகிச்சை பலனளிக்காத நிலையில், நான்கு நாள்களின்பின் கடந்த 10 ஆம் திகதி இங்கு மரணமானார்.

அவர் உயிரிழந்து 20 நாள்களாகியும் சடலம் உரிமைகோரப்படாத நிலையில் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவைச் சேர்ந்த பிமணிய ராசா (மணி வயது - 25) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

20 நாள்களுக்கு மேலாக உறவினரின் வருகைக்காக, வைக்கப்பட்டிருக்கும் இச்சடலத்தை உறவினர்களை வந்து உரிமைகோரும்படி வைத்தியசாலை நிர்வாகம் கேட்டுள்ளது.(எ-15)

# கதாப்பிரசங்க மூல கர்த்தா நல்லை ஆதீன குருமுதல்வர்

**நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் ஸ்தாபகரும், முதலாவது குரு முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளின் 36ஆவது பீடாரோஹண விழா இன்று நடைபெறுகின்றது. அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் 36 ஆவது பீடாரோஹண விழா இன்று நடைபெறுகின்றது. சைவத்தின் மேன்மைக்காகவும் அதன் வளர்ச்சிக்காகவும் தன்னையே முற்றாக அர்ப்பணித்துத் தொண்டாற்றிய நல்லை அதீன ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளின் அருப்பணியை நினைவுகூருமுகமாக நல்லூரில் இந்த விழா கொண்டாடப்படுகின்றது.

***திருத்தொண்டு செய்த பெரியார்***

சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்காகத் தமது தொண்டையினையே திருத்தொண்டு செய்த ஆசாரசீலரும், ஆதீன நிறுவுநருமாகிய சுவாமிகள் வணக்கத்துக்குரிய ஒருவராகத் தம்மை மாற்றிக்கொண்டதினம் இன்றைய திருக்கார்த்திகை நாளாகும். இந்த நன்னாளில் காவி தரித்துக் காஷாயம் பூண்டு துறவியாகி மதுரை ஆதீனத்தின் கீழ் சீடனாகத், தம்மை அர்ப்பணித்து இந்த ஆதீனத்தை ஆரம்பித்தார் மறைந்த சுவாமிகள்.

***போற்றுதற்குரிய பணி***

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் நல்லூரில் அவதரித்தது போன்றே சுவாமிகளும் நல்லூரிலே தோன்றித் தாம் செய்த அருற்சேவையால் நல்லூருக்கும் நாட்டு மக்களுக்கும் அளப்பரிய பெருமையையும் புகழையும் தேடிக் கொடுத்தார். கதாப்பிரசங்கத்தின் மூலம் மக்களுக்கு நல்லறிவையூட்டி நல்வழிகாட்டி சமய உண்மைகளைப் போதித்து அயராது அரும் பாடுபட்ட அவரது பணி போற்றுதற்குரியது.

***மங்களகரமான விழா***

இன்று நிகழும் பீடாரோஹண விழா சுவாமிகளுக்கல்ல, சைவப் பணிக்கும் அறக்கொடைக்கும் எடுக்கப்படும் விழாவாகும். ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளுக்கு விழா எடுப்பது பாராட்டப்பட வேண்டியதொன்று. அறப்பணிகளுக்கே தம்மை அர்ப்பணஞ் செய்த ஆதீன ஸ்தாபகரின் அருளாணைப்படி இப்பொழுது அதீன குரு



முதல்வராகத் திகழ்ந்திடும் இரண்டாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் இன்று வணங்குதற்குரியவராகின்றார். அவருக்கு முறைப்படி பூசையாகி, தீபாராதனை நடைபெற்று குடை, கொடி, ஆலவட்டங்கள் புடைசூழ தேவார பாராயணத்துடன் மங்கள வாத்திய சகிதம் திருவீதியுலா வலம் வந்து காட்சிதரும் மங்களகரமான திருவிழா இடம்பெறும நல்லூர் ஆதீனம் இன்று கோலாகலமாகக் காட்சிதருகின்றது.

அடியார்கள் அனைவரும் அவரைத் தெய்வமாகப் பாவனைசெய்து வணங்கி வழிபாடியற்றுவர். தமிழ்ப் பணிசெய்து அரும்பாடுபட்ட சுவாமிகளை நினைத்து ஆதீனத்தைத் தாபித்துத் தெய்வமாகிவிட்டவருக்கு நன்றி செலுத்துமுகமாக இந்த விழா நடைபெறுகிறது.

***மாகேஸ்வர பூசை***

இந்தப் பீடாரோஹண விழாவின் போது விசேடமாக குருமூர்த்த ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று விசேட தீபாராதனை வழிபாடுகள் இடம் பெறும். தேவார பாராயணத்துடன் பன்னிரு திருமுறைகள் ஓதப்பெற்று கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறும். விழாவில் பங்குபற்றும் அடியார்களைச் சிவமாகவே பாவனைசெய்து மாகேஸ்வர பூசையும் நடைபெறும்.

வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சம் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை ஏத்தி ஏத்தி துதிக்கின்ற அடியவர் கூட்டத்தினர் ஆதீனத்தில் பக்திமயமாகக் காட்சி தருவர். மலர்ந்த முகத்துடன் சைவத் தோற்றத்துடன் பீடரோஹண விழாவில் பங்குபற்றிய அடியவர்கள் ஆனந்த மயமாக இறைவனைப் பாடித் துதித்த வண்ணம் தம்மை மறந்து தியானத்திலீடுபடுவர்.

***தம்மையே அர்ப்பணித்தவர்***

சைவத்துக்கே தம்மை அர்ப்பணித்த மகான் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளாவர்.

"நல்லை நகர் பரமாசார்ய சுவாமிகள் பிறந்திலரேல்
இல்லை கதாப்பிரசங்கம் இனிய தமிழும் இல்லையே"

என்று கூறுமளவுக்கு யாழ்ப்பாணத்து நல்லூரிலே சைவத்தமிழ் நின்று நிலைப்பதற்கு இந்த நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனமே மூல காரணம் என்று கூறின் மிகையாகாது. இப்போது நம்மத்தியில் ஒரு சைவ நிறுவனம் தலைநிமிர்ந்து நிற்கின்றது என்று பார்த்தால் அது நல்லை ஆதீனமாகவே இருக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

***பெருமைக்குரியவர்***

சைவத்தொண்டு செய்தலே தமது அரும்பணி என்று வாழ்ந்தவரான ஆதீன ஸ்தாபகர் அவர்கள் ஈழத்தில மட்டுமல்ல இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, லண்டன் முதலான இடங்களிலும் கதைசெய்து தமிழ் வளர்த்ததைக் குறிப்பிடாதிருக்க முடியாது. பக்தியோடு இசைபாடி தமிழ்கூறும்

**சிவநெறிக் கலாநிதி**
**இராசையா ஸ்ரீதரன்**

நல்லுலகம் எங்கும் தமிழ்மக்கள் எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ, அங்கெல்லாம் சென்று கதாப்பிரசங்கம் செய்து சைவத்தமிழ் பரப்பிய பெருமை சுவாமிகளையேசாரும்.

இன்று அவரை நினைவுகூர்ந்து விழாவெடுக்கும் அதேநேரத்தில் அவர் விட்டுச்சென்ற சமயப்பணிகளைத் தொடர்ந்து செய்து அறப்பணியாற்றுவதே நாம் அவருக்குச் செய்யும் கைமாறாகும். ★

## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

(கார்த்திகைத் திருவிழா)



### கார்த்திகேயனே காத்திடு!

எட்டுத் திக்கிலும் ஆள நின்றவா
எங்கும் வேலதால் வென்றவா - இசை
மெட்டு யாவிலும் மேவித் தோய்ந்தவா
மெய்ம்மை யறிவதை ஆய்ந்தவா - மிகு
கட்டு மேனிகொள் கார்த்தி கேயனே
கருணை கொண்டநல் லாயனே - அடி
தொட்டு நின்றனம்; தோகை மயிலினில்
துய்க்க வந்திடெம் அயலினில்

- அனலையூர்ச் சேந்தன்.

### அடியார்க்கு நல்லருள் புரிந்திடுவாய்!

கானமயில் ஆடிக் களித்திருக்கும் பதியினிலே
காவியமாய் வீற்றிருக்கும் குமரேசா!
காணவரும் அடியவர்க்கு களிப்புடனே
- காட்சிதரும் நல்லைக் கதிர்வேலா!
கார்த்திகை நன்னாளின்று கனிவுடனே - உம்மில்
காதலுறும் அடியார்க்கு நல்லருள் புரிந்திடுவாய்.

- கொழும்புத்துறை பகீரதன்.

### அல்லல் துடைத்தே அருள்

தொல்லை வினைகள் தொடராது காக்கின்ற
நல்லைக் குமராவிந் நாட்டினிலே -, எல்லவரும்
எல்லை இலாவின்பம் எய்திடவே வேண்டுகின்றேன்
அல்லல் துடைத்தே அருள்!

பொதிகை ச.திருப்பதி
வல்வெட்டித்துறை.

### மயிலேறி வரவேண்டும்!

அல்லாத வழிநின்று தடுமாறி
அநியாய மரணங்கள் அடையாதே
பொல்லாத பகைமாழப் புகழாள
புதிதான பொலிவோடு, பலநாளும்
எல்லோரும் சுகவாழ்வு பெறுமாறு
இளையாரோ டினிதாக மயிலேறி
நல்லூரில் எமையாள வரவேண்டும்
நடராசர் அருள் கந்தப் பெருமானே!

வ.சின்னப்பா
தனங்களப்பு.

### நேசமுடன் காட்டிடவா!

மின்னல்களில் உன்னடியில்
தண்டையெழில் தோன்றும்
மேகங்களில் உன்னழகு
வண்ணமயில் தோன்றும்
நான்கு திசைப் பார்வையுடன்
நட்சத்திர மாலை யிட்டு
ஏங்கும் எமைப் பார்த்திடவா
இன்னருளும் பூத்திட்டவா
கார்த்திகையர் பாற்குடத்தில்
கன்னங்களை நீ புதைத்து
நேர்த்தியுடன் பால்வடியும்
நேசமுகம் காட்டிடவா!

- கவிஞர் கந்தமுருகேசதாசன்.

### அருளது தருவாய்!

எடுப்பு
சரவண பவனே ஒரு தரம் வருவாய்
அரனது மைந்தா அருளது தருவாய்
தொடுப்பு
வரமது அருள வடிவேல் கையில் தாங்கி – ஒரு
தரம் நல்லூர் வீதி வந்தருள் செய்வாய்
(சரவண)
முடிப்பு
வீடுகள் தோறும் பூரண கும்பம் – மக்கள்
விழிகளில் எல்லாம் ஆனந்த வெள்ளம்
காடு மேடெல்லாம் காவல் செய் இளைஞர்
கண்களில் வெற்றிக் களிப்பது காண.
(சரவண)

- கரவைக் கூத்தன்.

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்

03
-
02
-
1949



மறைவு

31
-
07
-
2002

31.07.2002 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

## அமரர் நடராஜா நகுலேசபிள்ளை

அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (30.08.2002) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தாங்களது குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*கோகுல வீதி,*
*கோண்டாவில் வடக்கு,*
*கோண்டாவில்.* (7701)

திருமதி நகுலேசபிள்ளை,
நரேஸ்குமார் (ராஜன்) குடும்பத்தினர்
(வேலணை ப.நோ.கூ.சங்கம்)

# மரண அறிவித்தல்

## வெலிச்சோர்ப்பிள்ளை இராசேந்திரம்

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் ஈச்சமோட்டை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வெலிச்சோர்ப்பிள்ளை இராசேந்திரம் நேற்று முன்தினம் (28.08.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிசிலியாவின் அன்புக் கணவரும், றஞ்சினி (ஆசிரியை, யா/திருக்குடும்ப கன்னியர்மடம்), ராகினி, (ஆசிரியை, யா/வேலணை ஆத்திசூடி வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான திருமதி றோசலின், அருமைநாதர், அந்தோனிப்பிள்ளை மற்றும் வில்லியம் (ஓய்வுபெற்ற அதிபர்), அல்பிறெட் (கோலண்ட்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.08.2002) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00மணிக்கு அவரது இல்லத்திலிருந்து யா/புனித மரியன்னை பேராலயத்திற்குத் திருப்பலிக்காக எடுத்துச்செல்லப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.றஞ்சினி, இ.ராகினி
(மக்கள்)

*74,ஈச்சமோட்டை வீதி,*
*யாழ்ப்பாணம்.* (7709)

# பாவனைக்கு திறந்த வீதியிலுள்ள வீடுகளில் திருடர் கைவரிசை

சமீபத்தில் மக்கள் பாவனைக்குத் திறந்துவிடப்பட்ட யாழ்.ஆரியகுளம் சந்திக்கும், வேம்படிச் சந்திக்கும் இடைப்பட்ட வீதியின் கிழக்குப்புறத்தில் உள்ள சேதமடைந்த வீடுகளில் திருடர் கோஷ்டியொன்று கட்டடப் பொருள்களை திருடிச் செல்வதாகக் கூறப்படுகிறது.

அந்த வீடுகளில் உள்ள ஜன்னல் கம்பிகள், இரும்புச் சலாகைகள் போன்றவற்றையே இத்திருடர் கோஷ்டி பெயர்த்து எடுத்துச்செல்வதாகக் கூறப்படுகிறது. குடாநாட்டிலிருந்து இரும்பு தெற்குக்கு அனுப்பப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஒ-51-86)

## சுவர் வீழ்ந்து சிறுமி பலி !

பழைய கட்டடத்திற்கு அருகில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்மது அந்தக் கட்டடத்தின் சுவர் இடிந்து வீழ்ந்ததில் ஏழு வயது சிறுமியொருத்தி இடிபாடுகளுக்கிடையில் அகப்பட்டு பலியான சம்பவம் கடந்த சனிக்கிழமை மாலை 6 மணியளவில் கரவெட்டி சண்டிக்குளம் பகுதியில் இடம் பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த பா.சஞ்சிகா (வயது7) என்பவரே பலியானவராவார். (ஒ-117)

## 'வீடியோ' படக்காட்சி

யாழ்ப்பாணம்,ஓக.30

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக் கண்காட்சித் தொடரில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஞானசேகரன் இயக்கிய 'முகம்' என்னும் திரைப்படம் புவியியற்றுறை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (ஓ-8)

## தவறிவிட்டன

வேரக்குளம், கருங்காலி, காரைநகரைச் சேர்ந்த சுப்பிரமணியம் சௌந்தரேஸ்வரி என்பவரது தேசிய, விசேட கடற்படை அடையாள அட்டைகள் பருத்தித்துறை பஸ்ஸில் நல்லூருக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் தவறிவிட்டன.

தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் சீமாட்டி, 122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (7705)

## தவறிவிட்டது

நீர்வேலி மத்தி, நீர்வேலியைச் சேர்ந்த துஷ்யாலசிங்கம் சதீஸ் என்பவருடைய தே.அ.அட்டை (இல. 742491773 V) யாழ்நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

விநோ நகைப்பூங்கா,
185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (7713)

# மரண அறிவித்தல்கள்

## நவசி செல்லத்துரை

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த நவசி செல்லத்துரை நேற்று (29.08.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் நிமல்ராஜ் (ஜேர்மனி), மோகன்ராஜ் (லண்டன்), ஜெகன்ராஜ், றூபன்ராஜ், கமல்ராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் நி.கனகாம்பிகையின் அன்பு மாமனாரும் கணபதி பவளமணியின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2002) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொட்டைக்காடு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஸ்ரீ நாராயணன் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* (7706)

தகவல்:
திருமதி செ.பரமேஸ்வரி
(மனைவி)

## சின்னையா தியாகராசா

இணுவில் மேற்கு, வட்டுவினியைச் சேர்ந்த சின்னையா தியாகராசா நேற்று (29.08.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் இணுவிலைச் சேர்ந்த சின்னையா - சிதம்பரம் ஆகியோரின் மூத்த மகனும் சின்னத்தம்பி - இராசம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் இராசமணி அவர்களின் அன்புக் கணவரும் ஜெகதீஸ்வரன் (ஆசிரியர், அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்), கலாநிதி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் கிரிசாலினி, ராஜ்மோகன் ஆகியோரின் அன்பு மாமனும் ஜெகபாலினி, பிரணவன், சோபினி, கோவர்த்தன், விதாஜினி, ரக்சனி ஆகியோரின் அன்புப் பேரனும் திருமதி இராசலட்சுமி இராசதுரை, பஞ்சலிங்கம், கணேசலிங்கம், திருமதி கணேஸ்வரி நடராசா, சிதம்பரநாதன் ஆகியோரின் அருமைச் சகோதரரும் இராசலிங்கம், இராசரத்தினம், திருமதி கனகமணி முதலித்தம்பி, திருமதி இராசேஸ்வரி நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் திரு. திருமதி தங்கராசா, திரு.திருமதி சண்முகநாதன் ஆகியோரது சம்பந்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2002) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கண்ணகி அம்மன் கோயிலடி,*
*இணுவில் மேற்கு,*
*இணுவில்.* (7710)

தகவல்:
மனைவி, மக்கள்,
ஜெகதீஸ்வரன் (மகன்)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு 20-12-1949

உதிர்வு 01-08-2002

திதி: 31.08.2002

*ஆலடி ஒழுங்கை, வல்வெட்டித்துறை.*

## அமரர் சபாரத்தினம் தங்கவேல்

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து
அமரராகிவிட்ட அன்புத் தெய்வமே!
புன்சிரிப்புத் தவழும் முகத்தையும்
சாந்தமான தோற்றத்தையும்
இனி நாம் காண்பதெப்போது?
உங்களுடன் வாழ்ந்த நாள்களை மறக்கவே முடியாது!

*ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

2002ஆம் ஆண்டு ஆவணி மாதம் முதலாம் திகதியன்று இறைவனடி சேர்ந்த எமது தந்தையாரின் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டு எம்மை ஆறுதல்படுத்தியவர்களுக்கும் தந்தி, தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவிகள்புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (31.08.2002) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக்கிரியைகளிலும், மதியபோசன வைபவத்திலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*காலஞ்சென்றவர்களான சபாரத்தினம், பகவதி அம்மா (பெற்றோர்), காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம், சரஸ்வதி (மாமா, மாமி), காலஞ்சென்ற அழகரெத்தினம் (இராசகிளி - மனைவி), சதானந்தகிருஷ்ணன், கிருஷ்ணவேணி, சுகந்தினி, தருமசீலன், செந்தில்குமரன் (பிள்ளைகள்), விமலநாதன் (மருமகன்), பாக்கியவதி, சோபனா, சாந்தகுமார் (சகோதரர்கள்), சிங்கராசா, அருமைத்துரை, அருளானந்தம், அம்மன்கிளி, தங்ககிளி, கவிதா (மைத்துனர்), தருமலிங்கம் (தாய்மாமன்), தங்கரெத்தினம் (பெரியம்மா).*

தகவல்:
பிள்ளைகள்.

(7707)

# தமிழகப் பிரச்சினைகளைப் பூசிமெழுகவே ஜெயலலிதா புலிவேட்டையாடுகிறார்!

**அதிரடி நடவடிக்கைகளுக்குப் பெயர் பெற்றவர் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா. மாநில மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பான கவனத்தை மாற்றுவதற்கு அவர் திடீர் திடீர் என அதிரடி நடவடிக்கைகளை மேற்கொள்வது வழக்கம். அத்தகைய நடவடிக்கைகளில் ஒன்றுதான் தற்போது தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் புலிவேட்டை எனக்கருதப்படுகிறது. ஜெயலலிதாவின் நடவடிக்கைகள் குறித்து "லக்பிம" வார இதழில் வெளியான கட்டுரையில் ஆராய்கிறார் கட்டுரையாளரான எம்.எஸ்.எம்.அயுப். அதன் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

1987ஆம் ஆண்டின் நடுப்பகுதிக்கு முன்னரான காலத்தில், ஸ்ரீலங்கா அரசு விடுதலைப் புலிகளுடன் யுத்தத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளை அது. அக்காலகட்டத்தில் இந்திய அரசு பண உதவி, ஆயுத உதவி ஆகியவற்றை வழங்கியும் புலி உறுப்பினர்களுக்கு பயிற்சியளித்தும், விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு வலுவான நிலைக்கு உயர உதவியது.

அன்று இந்தியாவின் தமிழக அரசும், அம்மாநில மக்களும் விடுதலைப் புலிகளுக்கு பெரிய அளவில் ஆதரவு வழங்கினர். தமிழநாட்டு அரசியல்வாதிகள் அக்காலகட்டத்தில் நடைபெறற நாடாளுமன்றத் தேர்தல்களிலும் சட்டசபைத் தேர்தல்களிலும் மற்றக் கட்சியினரைவிட, தம்முடைய

## இங்குதான் போராட்டம்: இந்தியாவில் அல்ல!

கட்சியினரே இலங்கைத் தமிழ் இயக்கங்களுக்கு குறிப்பாக விடுதலைப் புிகள் அமைப்புக்கு - உதவி வருவதாக காட்டிக்கொள்வதில் அக்கறை காட்டினர்.

இன்று முதலமைச்சர் ஜெயலலிதாவின் தமிழ்நாடு அரசு விடுதலைப் புலிகளுக்கெதிராக கடும்நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. ஸ்ரீலங்கா அரசோ இன்று புலிகளின் கோரிக்கைகளில் பலவற்றை நிறைவேற்றி அவர்களுடன் சமாதானச் சகவாழ்வுக்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

தர்க்கரீதியாகச் சிந்திப்போமேயாயின் ஸ்ரீலங்கா அரசு புலிகள் இயக்கத்தை ஒழிக்கும் நோக்கிலேயே நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். ஏனெனில் புலிகள் இயக்கம் ஸ்ரீலங்காவை இரண்டாகப் பிரித்து வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழ் இராச்சியமொன்றினை உருவாக்க யுத்தம் புரிகிறது.

அதேபோன்று பரந்த தர்க்கரீதியில் நோக்குமிடத்து, தமிழ் இராச்சியமொன்றுக்காகப் போராடும் புலிகள் இயக்கத்துக்கு தமிழ்மக்கள் வாழும் தமிழ்நாட்டு மாநில அரசு ஆதரவு அளிக்க வேண்டும்.

ஆரம்பகால நடவடிக்கைகள் மேற்கூறிய தர்க்கரீதியிலேயே அமைந்தன.

1987இல் ஸ்ரீலங்காவுக்கு வந்த இந்திய அமைதிப் படையினரில் இராணுவ வீரர்களும் அதிகாரிகளுமாக ஆயிரத்து 700 வரையிலானவர்களை புலிகள் கொன்றொழித்தனர். பின்னர் 1991 மே மாதம் 21ஆம் திகதியன்று ராஜீவ் காந்தி புலிகளால் கொலை செய்யப்பட்டார்.

அதன் பின்னரான காலகட்டத்தில ஸ்ரீலங்காவில் யுத்தம் விரிவடைந்தது. ஒருசில இராணுவ முகாம்களைத் தவிர, வடபகுதி முழுவதையும் புலிகள் கைப்பற்றினர். ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த பூநகரி, முல்லைத்தீவு, கிளிநொச்சி இராணுவ முகாம்கள் புலிகளால் அழிக்கப்பட்டன. பத்தாயிரத்திற்கும் அதிகமான இராணுவத்தினரைக் கொண்டிருந்த ஆனையிறவு இராணுவ முகாம் 2000 ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி புலிகளால் நிர்மூலமாக்கப்பட்டது.

இன்னொருபுறம், பிரபலமான பல நாடுகள் புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத இயக்கமென பிரகடனப்படுத்தி, தமது நாடுகளில் அதனைத் தடைசெய்தன. இந்தியா, பிரிட்டன், அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் இந்தவகையில் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்தும், தமது நாடுகளில் புலிகள் இயக்கத்தின் வங்கிக் கணக்குகளை முடக்கியும் வைத்தன. மேற்குலக நாடுகள் பயங்கரவாதத்துக்கு எதிரானவை எனக்கூறித் தாம் விரும்பாத இயக்கங்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வதாகவும் காட்டிக்கொண்டன.

தமக்கு நேரடியான அச்சுறுத்தலாக அமையாத புலிகள் இயக்கத்துக்கு எதிராகத் தமிழக மாநில அரசு ஒழிக்கும் நடவடிக்கை ஆரம்பித்துள்ள வேளையில், தமக்கு நேரடி அச்சுறுத்தலாயுள்ள அந்த இயக்கத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஸ்ரீலங்கா அரசு ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்வது இந்தப் பின்னணியிலேயேயாகும்.

புலிகளின் தலைவர் பிரபாகரனும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கைச்சாத்திட்ட போர்நிறுத்த உடன்பாடு நடைமுறைக்கு வந்த நாளுக்கு இரு நாளகளின் பின்னரே தமிழக அரசு, புலிகளை ஒழிக்கும் நடவடிக்கையில் இறங்கியது. இவ்வாண்டு பெப்ரவரி மாதம் இருபத்திநான்காம் திகதி தமிழ்நாடு சட்டப்பேரவைக்கு ஆண்டிப்பட்டித்தொகுதிக்கான இடைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியின் தலைவி ஜெயலலிதா தமிழ்நாடு சட்டசபை உறுப்பினர் ஆனார்.

அப்போது சட்டப்பேரவையில் பதவியில் இருந்தது ஜெயலலிதாவின் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக மேயாகையால் அதன் அடிப்படையில் மார்ச் மாதம் 2ஆம் திகதி ஜெயலலிதா முதலமைச்சராகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். புலிகள் இயக்கம் சம்பந்தமாகக் காலத்துக்குக் காலம் தம் நிலைப்பாடுகளை மாற்றிக்கொண்டிருந்த அவர் இப்போது முதலமைச்சராகப் பதவியேற்ற கையோடு புலிகள் இயக்கம் மீது கடும் விரோதப் போக்கைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தார்.

தமிழ்நாடு மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகம் கட்சியின் தலைவர் வீ.கோபாலசாமி, பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ், தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ.நெடுமாறன் ஆகியோர் விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரித்துப் பேசிவந்தனர்.

ஜெலலிதா, ஜனதாக் .கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம்சுவாமி, ராஜீவ் காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழைப்பாடி கே.ராமமூர்த்தி ஆகியோர் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிராகக் குரல் எழுப்பினர்.

அத்தோடு டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியும் ஜெயலலிதாவும் ராஜீவ் காந்தி கொலை சம்பந்தமாகத் தண்டிப்பதற்காகப் பிரபாகரனை இந்தியாவிடம் கையளிக்கவேண்டுமெனக் கோரினர். பிரபாகரனின் பத்திரிகையாளர்கள் மாநாடு நடைபெற்று ஆறு நாள்களின் பின்னர் - அதாவது இவ்வாண்டு ஏப்ரல் 16ஆம் திகதி - முன்னர் குறிப்பிட்ட காரணங்களை முன்வைத்து தமிழ்நாடு மாநில சட்டசபையில் தீர்மானமொன்றினை நிறைவேற்றுவதில் ஜெயலலிதா வெற்றி கண்டார். பிரபாகரனைக் கைதுசெய்து இந்திய அரசிடம் ஒப்படைக்குமாறு ஸ்ரீ லங்கா அரசை இந்திய மத்திய அரசு வேண்டிக்கொள்ள வேண்டுமென்பதே அத்தீர்மானத்தின் உள்ளடக்கமாகும்.

இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதனால் தமிழ் நாட்டிலுள்ள புலிகள் ஆதரவாளர்கள் தமது ஆட்சேபங்களை வெளிப்படுத்தினர். ஸ்ரீலங்காவிலுள்ள அனைத்துத் தமிழ்க்கட்சிகளும் இத்தீர்மானத்தால் கொதித்தெழுந்தன. சில தமிழ்க்கட்சித் தலைவர்கள் ஜெயலலிதா மீது அவதூறு சுமத்திப் பேசத் தலைப்பட்டனர்.

ஆயினும் ஸ்ரீலங்காவிலும் சரி, இந்தியாவிலும் சரி, புலிகள் இயக்கத்துக்கு விரோதமானவர்கள் ஜெயலலிதா விடயத்தில் பெருமளவில் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட அத்



தீர்மானத்தை வாஜ்பாய் கண்டுகொள்ளவேயில்லை.

இருந்தபோதிலும் புலிகளுக்கெதிரான தனது போக்கினை ஜெயலலிதா தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றார். விடுதலைப் புலிகள் இயக்கம் மீது இந்தியா முழுவதிலும் விதிக்கப்பட்ட தடை இவ்வாண்டு மே மாதம் காலாவதியானது. சாதாரணமாக இத்தடை இரண்டு ஆண்டு காலம் மேலும் நீடிக்கப்படுவது வழக்கம். இத்தடையையும் முன்னைய ஆண்டுகளைப் போன்றே தடை நீடிக்கப்படுமெனவே பலர் நம்பினார்கள். ஆனால், ஜெயலலிதா அவ்வாறு சிந்தித்து வெறுமனே சும்மா இருந்துவிடவில்லை. காலாவதியாகும தடையை புதுப்பித்துக்கொள்ளுமாறு மத்திய அரசை ஜெயலலிதா கேட்டுக்கொண்டார்.

இக்கோரிக்கை பெறுமதியுடையதாயிருந்ததோ, இல்லையோ, இந்திய மத்திய அரசு மே மாதம் 14ம் திகதி புலிகள் மீதான தடையை மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடித்தது. அது அவ்வாறிருக்க, ஸ்ரீலங்கா அரசு விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் நோக்கில், புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீக்கிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கிறது.

இந்தச் சூழலில் மதுரை திருமங்கலம் என்ற ஊரில் நடத்தப்பட்ட முக்கிய கூட்டமொன்றில் புலிகள் இயக்கத்தை ஆதரித்துப் பேசியமைக்காக வாஜ்பாய் தலைமையிலான கூட்டு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ம.தி.மு.க.வின் தலைவர் வை. கோபாலசாமிக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். அதனை விசாரணைக்கு எடுத்த நீதிமன்றம்

**தமிழில்: வியெஸ்ரீ**

வை.கோபாலசாமியை கைதுசெய்யுமாறு உத்தரவு பிறப்பித்தது. இந்தியாவில் பயங்கரவாத நடவடிக்கைகளை ஒழிப்பதற்காக முன்னர் கொண்டுவரப்பட்டிருந்த சட்டத்தை ரத்துச்செய்து அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டமே பயங்கரவாத நடவடிக்கைகளிலிருந்து பாதுகாக்கும் சட்டமான 'பொடா' (POTA) சட்டமாகும்.

'பொடா' சட்டத்தின்கீழ் தொடுகக்கப்படும் வழக்குகளை விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட விசேட நீதிமன்றமே வைகோவைக் கைதுசெய்யுமாறு உத்தரவு பிறப்பித்திருந்தது. அவ்வேளையில் அமெரிக்காவில் தங்கியிருந்த வைகோ, புதுடில்லிக்குத் திரும்பிவந்தபோது ஜூலை மாதம் 12ம் திகதி பொலீசாரால் கைது செய்யப்பட்டார்.

ஸ்ரீலங்காவின் தமிழ் அரசியல் தலைவர்கள் இக்கைதுக்கு எதிராக அறிக்கைகள் வெளியிட்டனர்.

ஜூலைமாதம் 20ஆம் திகதி, தமிழநாட்டின் தலைநகர் சென்னையில் உலகத் தமிழர் பேரமைப்பு என்ற பெயரில் அமைப்பொன்றை அங்குரார்ப்பணம் செய்வதற்கான மாநாடு நடைபெற்றது. அவ்வமைப்பை ஏற்படுத்த முன்னின்று உழைத்தவர் தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவரான பழநெடுமாறனாவார். ஐம்பத்தாறு நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட இந்த மாநாட்டில் இலங்கையிலிருந்து தோட்டத்துறை, அடிப்படை வசதிகள் அமைச்சர் பீ.சந்திரசேகரனும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவரான எம்.எஸ். செல்லச்சாமியும் பங்குபற்றினர்.

இம்மாநாட்டில் உரையாற்றிய அமைச்சர் சந்திரசேகரன், வைகோ ஆயிரம் ஆண்டுகள் உயிர் வாழவேண்டுமெனப் பிரார்த்திப்பதாகக் குறிப்பிட்டார். எனினும் தமிழ்நாடு பொலீஸாரால் சந்திரசேகரனுக்கு எதுவித அச்சுறுத்தலும் ஏற்படவில்லை.

வைகோ மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்குச் சமமான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 'பொடா' சட்டத்தின்கீழ் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி நெடுமாறனும் கைது செய்யப்பட்டார். தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு உதவுவதான குற்றச்சாட்டின் மீது அவரது தமிழர் தேசிய இயக்கம் இம்மாதம் 13ஆம் திகதி வியாழக்கிழமை தடைசெய்யப்பட்டது.

இம்மாதம் 7ஆம் திகதி வைகோ உட்பட்ட அவரது ம.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த எட்டுப்பேர் 'பொடா' விசேட நீதிமன்ற நீதிபதி முன்னால் ஆஜாசெய்யப்பட்டபோது அவர்களை செப்ரெம்பர் நாலாம் திகதிவரை தடுபபுக் காவலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இப்போது வைகோவின் மறுமலர்சசி தி.மு.கழகத்தையும் தடைசெய்வதற்கு ஜெயலலிதாவின் அரசு தயாராகிவிடுவதாக சென்னையிலிருந்து வெளியாகும் பத்திரிகையொன்றினை மேற்கோள்காட்டி நம் நாட்டில் வெளியாகும் தமிழ்ப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆயினும் நெடுமாறனின் தமிழர் தேசிய இயக்கத்தை தடைசெய்தது போன்று மறுமலர்ச்சி தி.மு.கவைத் தடைசெய்வது இலேசான காரியமல்ல.

## மாற்றார் தோட்டத்திலிருந்து

ஏனெனில் அக்கட்சி, மத்தியில் பதவியில் உள்ள கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஒரு கட்சி என்பதோடு அக கட்சியைச் சேர்ந்த கண்ணப்பனும் செஞ்சி இராமச்சந்திரனும் மத்திய அமைச்சர்களாகப் பதவி வகிக்கின்றனர். சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் வைகோவை மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணான்டஸ் சென்று பார்த்திருக்கிறார். ஜோர்ஜ் பெர்னான்டஸ்கூட விடுதலைப புலிகளின் ஓர் ஆதரவாளராவார்.

இங்கு குறிப்பிடப்பட்ட அமைச்சர் கண்ணப்பன்கூட விடுதலைப் புலிகள் அமைப்பை சிறப்பித்துக் கருத்து வெளியிட்டிருப்பதாக பிரதமர் வாஜ்பாயிடம் ஜெயலலிதா முறையிட்டிருந்தார். இது தொடர்பாக உதவிப் பிரதமரும் உள்துறை அமைச்சருமான எல்.கே.அத்வானி, மறுமலர்ச்சி தி.மு.க.கட்சியைச் சேர்ந்த மற்றொரு மத்திய அமைச்சரான செஞ்சி இராமச்சந்திரனிடம் விளக்கம் கோரியுள்ளனர்.

ஜெயலலிதாவின் விடுதலைப் புலிகள் மீதான தடைக்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் வைகோவினதும் நெடுமாறனதும் கட்சியினர் மட்டுமல்ல. டாக்டர் ராமதாசின் பாட்டாளி மக்கள் கட்சியும் ஜெயலலிதாவின் நடவடிக்கைகளை எதிர்த்துக் கருத்துத் தெரிவித்துள்ளது. பாட்டாளி மக்கள் கட்சியும் விடுதலைப் புலிகளைத் தீவிரமாக ஆதரிக்கும் ஒரு கட்சியாகும்.

இக்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களில் ஒருவரான முருகவேள் ராஜன் புலிகள் இயக்கத்தை ஆதரித்துப் பேசியமைக்காக 1995இல் பொலீஸார் அவருக்கெதிராக நீதிமன்றத்தில் முறையீடு செய்தனர். நீதிமன்றம் அவரைக் கைதுசெய்யுமாறு ஆணை பிறப்பித்தது.

கருணாநிதியின் ஆட்சிக் காலத்தில் நீதிமன்றத்தின் இவ்வுத்தரவு நிறைவேற்றப்படவில்லை. ராஜன் இச்செயற்பாடு குறித்து சட்டமன்றத்தில் ஆட்சேபனை தெரிவித்தார். இப்போது ஜெயலலிதா அரசின் உத்தரவின் பிரகாரம் ராஜனைக் கைதுசெய்வதறகு சட்டமன்றச் சபாநாயகரின் அனுமதியைப் பொலீஸார் வேண்டியுள்ளனர்.

வைகோவும் நெடுமாறனும் புலிகளுக்கு ஆதரவு தெரிவிப்பது இன்று நேற்று முதலல்ல. 1980களின் நடுப்பகுதியிலிருந்தே புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கு உதவப்போவதாகக் கூறிக்கொண்டு நெடுமாறன் தனது ஆதரவாளர்களுடன் வள்ளங்களில் ஸ்ரீலங்காவை நோக்கிப் புறப்பட்டார். ஒரு மைல் தூரம்வரை பயணிக்க அனுமதித்த தமிழகப் பொலீஸார் பின்னர் அவர்களைத் தமிழ்நாட்டுக்கே திருப்பி அனுப்பிவைத்தனர்.

விடுதலைப் புலிகள் இந்திய அமைதிப் படையுடன் போரிட்ட காலப்பகுதியில் அப்போதைய தமிழக ஆளும் கட்சியாகவிருந்த கருணாநிதியின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரமுகரான வைகோ, இரகசியமாக ஸ்ரீலங்காவின் வன்னிக்குச் சென்று பிரபாகரனுடன் சில தினங்கள் தங்கியிருந்து மீண்டும் இரகசியமாகத் தமிழ்நாட்டுக்குத் திரும்பினார்.

அவ்வேளையில், புலிகள் இயக்கத்தின் உபதலைவராக இருந்தவர் மாத்தையா என அழைக்கப்பட்ட கோபாலசுவாமி மகேந்திரராஜா ஆவார். வைகோ வன்னிக் காட்டின் மத்தியில் மாத்தையாவுடனும் பிரபாகரனுடனும் கைகோத்தபடி காட்சியளிக்கும் படம் ஒன்றினை தமிழ்நாட்டில் வெளியாகும் 'ஜூனியர் விகடன்' சஞ்சிகை தனது முற்பக்கத்தில் பிரசுரித்தது. அப்படம் இந்தியா முழுவதிலும் அரசியலரங்கில் பெரியளவில் சர்ச்சைகளை உருவாக்கியது.

இந்நிலையில் தற்போது வைகோவும், நெடுமாறனும் கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஸ்ரீலங்காவின் வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் விரிவான வகையில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. தமிழர் ஐக்கிய முன்னணி, மலையக மக்கள் முன்னணி ஆகியவற்றின் தலைவர்களும் இக்கைதுகள் தொடர்பாக தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

சென்ற ஜூலை மாதம் 31ஆம் திகதி வைகோவை விடுதலை செய்யுமாறு கோரி ஏறாவூரில் தமிழ்மக்களால் எதிர்ப்பு ஊர்வலம் நடத்தப்பட்டது. அவ்வூர்வலத்தில் ஜெயலலிதாவுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் அமைந்த பதாகைகளும் தாங்கிச் செல்லப்பட்டன.

ஓகஸ்ட் 2ஆம் திகதி பருத்தித்துறையிலும் இவ்வகையான ஊர்வலம் நடத்தப்பட்டது. அதன் முடிவில் ஜெயலலிதாவின் கொடும்பாவியும் தீயிடப்பட்டது. வடமராட்சி கூட்டுறவுச சங்கங்கள், மாணவர் சங்கங்கள், கடற்றொழிலாளர் சங்கங்கள், வணிகர் சங்கங்கள் ஆகியவற்றினால் இவ்வெதிர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தமிழ்ப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன.

வைகோவையும், நெடுமாறனையும் விடுதலை செய்யுமாறு கோரி யாழ்ப்பாண வர்த்தகர் சங்கத்தினர், அமைச்சர் சந்திரசேகரன் ஆகியோர் ஜெயலலிதாவுக்குக் கடிதம் அனுப்பி வைத்துள்ளனர்.

இவ்வார்ப்பாட்டங்களை ஜெயலலிதாவின் அரசு புரிந்துகொள்ளாது. இவை செவிடன் காதில் ஊதிய சங்குபோலவே அமையும்.

விடுதலைப் புலிகளை அழிப்பதற்குத் தமிழக அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளபோதிலும் ஸ்ரீலங்காவில் தற்போது மேறகொள்ளப்பட்டுவரும் சமாதான நடவடிக்கைகளுக்கு ஊறு விளைவிக்கும் நடவடிக்கைகள் எதனையும் இந்திய மத்திய அரசோ தமிழ்நாடு அரசோ மேற்கொள்ளவில்லை.

ஆனால், இந்திய அதிகாரபீடம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யா/யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
## வருடாந்த பொதுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது

இப்பாடசாலை தெல்லிப்பழையில் தனது சொந்த இடத்தில் 10.09.2002 இல் இருந்து இயங்கவுள்ளது. இதனால் 01.09.2002 ஞாயிறு நடைபெறவிருந்த பொதுக்கூட்டமானது, பாடசாலை மண்டபத்தில் நடத்த வேண்டும் என்ற சங்கத் தீர்மானத்தின் படி 22.09.2002 ஞாயிறு காலை 10 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சி.விக்கினராசா, தலைவர், பழைய மாணவர் சங்கம், யா/யூனியன் கல்லூரி.
த.வாமதேவன், செயலாளர், பழைய மாணவர் சங்கம், யா/யூனியன் கல்லூரி.
(C-23374)

## நன்றி நவிலல்

15.07.2002 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### டாக்டர் க.ச.சிவகுரு

(ஓய்வுபெற்ற பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், கிளிநொச்சி - முல்லைத்தீவு)

அவர்களின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றியவர்களுக்கும், அனுதாபச் செய்தி, மலர்வளையங்கள் அனுப்பியவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- குடும்பத்தினர்.

(7700)


## டயலொக் கான்ட்போன்

செப்ரெம்பர் மாத முற்பகுதியில் வழங்கப்படவிருக்கும் டயலொக் கான்ட் போனைப் பெறவிரும்புபவர்கள் இன்று (30-08-2002) வெள்ளிக் கிழமை பதிவுகளை மேற்கொள்ளவும்.

தொடர்பு:-

டயலொக் விற்பனை நிலையம், ஆலடிச்சந்தி, மானிப்பாய்.
டயலொக் விற்பனை நிலையம், K.K.S. வீதி, சுன்னாகம்.

மேலதிக விவரங்களுக்கு:-

**செல்வம் ஸ்ரோர்ஸ்,**
330, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/23371)

நவீன யுகத்தின் தகவல் பரிமாற்றத்தில் உங்கள் நண்பன்


## கார்த்திகைத் திருவமுது



கார்த்திகைத் திருநாளில் கந்தன் குடிகொண்ட
நல்லைப் பதி தன்னில் விளங்கும்
ஸ்ரீதுர்க்கா மணி மண்டபத்தில் குமரன் அடியவர்க்கு
சிவத்தமிழ்ச் செல்வி வழங்கும்
அர்ப்பணிப்பான நல் அன்னதானப் பணியில்
தெல்லி இந்து இளைஞர், மாதர்சங்கம்,
மகளிர் இல்லம் மூன்றும் இணைந்த பணியானது
சிறப்பொடு விளங்க வாழ்த்துகின்றோம்.

அன்னதானப் பணி அருளுடன் வளம்பெற வாழ்த்தும் அதே வேளை, கந்தன் கழல் பணியும் அடியவர்கள் இதில் பங்குகொண்டு சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அறுசுவை அருந்த அழைப்பவர்கள்:


**புதிய நதியா நகை மாடம்**
(தங்கப்பவுண் நகை வியாபாரம்)
103, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 - 3261


(7698)

### செல்வன் யோ.கமல்ஸ்ரோன்

ஞாபகார்த்த மாபெரும் மென்பந்து சுற்றுப்போட்டியும்
ஏசியன் விளையாட்டுக் கழகத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழாவும்

இடம்: யாழ்.சிங்கள மகா வித்தியாலயம் (OLR)

போட்டிக்கான விண்ணப்பப் படிவங்கள் கிடைக்குமிடம்:

01. மணிக்குரல் விளம்பர சேவை, *யாழ்ப்பாணம்.*
02. வேளாங்கன்னி ஸ்ரோர்ஸ் (லாவண்யா), *ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

- ஏசியன் வி.கழகத்தினர், யாழ்ப்பாணம்.

முடிவு திகதி: 10.09.2002 (7693)

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் ஆங்கில தட்டெழுத்தாளராகக் கடமையாற்றும் திருமதி மி.மகேஸ்வரி அவர்களின் அன்புக்கணவர்

### பொன்னையா மிருகண்டர்

*(வருமான மேற்பார்வையாளர், நகரசபை, சாவகச்சேரி)*

அவர்கள் காலமான செய்தி எமக்கெல்லாம் மிகுந்த துக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதோடு, பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தவர், உறவினர் துயரத்தில் நாமும் பங்குகொள்வதுடன், எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பளை.*
பிரதேச செயலரும் அனைத்து அலுவலர்களும்.
(7692)

## எரிகாயத்தால் யுவதி உயிரிழப்பு

யாழ்ப்பாணம்,ஓக.30

கடந்த ஜூலை மாதம் 21ஆம் திகதி இரவு குப்பி விளக்கு தட்டுப்பட்டு தீப்பற்றி எரிந்ததில் எரிகாயங்களுக்குள்ளானதாகத் தெரிவித்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளம்பெண் ஒருவர் சுமார் 48 நாள்களின் பின்னர் நேற்றுமுன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இளவாலையைச் சேர்ந்த தேவதாஸ் கௌசலா(வயது 20) என்பவரே உயிரிழந்தவராவார். (ஓ-15)

## தப்பியோடிய சிப்பாய் கைது!

கொழும்பு,ஓக.30

பாதாள உலகக் குழுவினருக்கு இராணுவச் சீருடையை வழங்கிய குற்றச்சாட்டின்பேரில் படையிலிருந்து தப்பிச் சென்ற சிப்பாய் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொலை, கொள்ளை மற்றும் கடத்தல் சம்பவங்களுடன் தொடர்புடைய பாதாள உலகக் குழுவினருக்கே இந்தச் சீருடையை சம்பந்தப்பட்ட சிப்பாய் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர் மீதான விசாரணையைப் பொலீஸார் தொடர்ந்தும் மேற்கொண்டுவருகின்றனர்.

(ஓ-12)

## கற்றல் உபகரணம் அன்பளிப்பு

தென்மராட்சி,ஓக.30

சர்வோதய நிலையத்தினர் தென்மராட்சி பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களில் பாடசாலை மாணவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வருகின்றனர்.

(எ-117)

## தமிழக....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை எவ்வித மென்போக்கையும் கடைப்பிடிக்கத் தயாராக இல்லை. வைத்திய சிகிச்சையின் பொருட்டாவது அன்ரன் பாலசிங்கம் இந்தியாவுக்கு வருவதற்கு அவர்கள் அனுமதியளிக்கவில்லை.

அன்ரன் பாலசிங்கம் மாலைதீவுக்கு வருவதற்கிடமளிக்க வேண்டாமெனவும், 1980களில் 'புளொட்' இயக்கம் புரட்சியொன்றின்மூலம் மாலைதீவைக் கைப்பற்றுவதற்கு முயன்றபோது அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி தமது ராணுவத்தை அனுப்பி புரட்சிக்காரர்களை அழித்தொழித்ததை நினைவுபடுத்துவதாகவும், அதன் பிரகாரம் ராஜீவ் காந்தியைக் கொலை செய்த விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்கவேண்டாமெனவும் ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியசுவாமி மாலைதீவு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஒரு காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு மிகவும் வேண்டப்பட்டவராயிருந்த சுவாமி, தற்போது பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறார்.

இப்படியாக இந்தியத் தலைவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிராக யுத்தப் பிரகடனம் செய்ய முடிந்தபோதும், ஸ்ரீலங்கா அரசுக்கு இன்று அந்தவகையில் நடவடிக்கை மேற்கொள்ள அந்தப் பிரச்சினை இந்நாட்டிலுள்ளதே தவிர அந்நாட்டில் அல்ல. ★

## அவசர கலந்துரையாடல் பற்றிய அறிவித்தல்

பளைப் பிரதேச வர்த்தகர்கள், வாகன உரிமையாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் எதிர்வரும் 02.09.2002 திங்கட்கிழமை பகல் ஒரு மணிக்கு பளை வர்த்தக சங்க செயலகத்தில் நடைபெறும்.

வடமராட்சி, வலிகாமம் பிரதேசங்களில் தற்போது தங்கியுள்ள பளைப் பிரதேச வர்த்தகர்கள், வாகன உரிமையாளர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

தலைவர், கைத்தொழில் வணிகர் மன்றம், பளை.
(C-23372)

## துயர் பகிர்கின்றோம்

சாவகச்சேரி நகரசபையின் வருமான மேற்பார்வையாளரும் சங்க உறுப்பினருமாகிய

### பொன்னையா மிருகண்டர்

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*நகரசபை அலுவலகம், சாவகச்சேரி.*
சாவகச்சேரி நகரசபை ஊழியர் நலன்புரிச் சங்கம்
(C-23373)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னையின் மடியில் 22 - 09 - 1921



ஆண்டவன் அடியில் 15 - 08 - 2002

### அமரர் அம்பலவாணர் செல்லையா

(ஓய்வுபெற்ற மின்னியியலாளர்)

*எம்மை இன்புற வாழ வைத்த - எம்*
*இனிய தெய்வமே உங்களது*
*ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.*

எமது குடும்பத்தலைவரின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் கடிதங்கள்மூலம் அனுதாபத்தைத் தெரிவித்தவர்களுக்கும் எமது மனம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இன்று (30-08-2002) வெள்ளிக்கிழமை நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்தியத்திலும் நாளை (31-09-2002) சனிக்கிழமை நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். அனைவரும் இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.12, இராணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.*
பிரிவால் துயருறும்: மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(7702)


ஓராண்டு பூர்த்தி விழா!

குறுகிய காலத்தில் ஏராளமான வாடிக்கையாளர்களின் அபிமானத்தைப் பெற்றுக்கொண்ட

மகா சில்க்ஸ் புடைவை நிறுவனத்தின் கிளை நிறுவனம் பியூட்டி சில்க்ஸ்

இன்று (30-08-2002) வெள்ளிக்கிழமை தனது ஓராண்டைப் பூர்த்தி செய்வதுடன், 2 ஆவது ஆண்டில் காலடி எடுத்துவைத்து புடைவை உலகின் முன்னோடியாக வெற்றிநடைபோடும் பூரிப்பில் திகழ்கின்றது.



பியூட்டி என்றால் அழகு, அழகின் சிகரம் பியூட்டி சில்க்ஸ்.
பியூட்டியின் அந்தரங்கம் நீங்கள் அறியாததல்ல.... அதுதான்....
உலகின் எப்பாகத்தில் இருந்து வருபவர்களுக்கும் ஏற்ற அத்தனை ஆடைத் தினுசுகளினதும் பொக்கிஷம்! ******
யாழ்.நகரில்!

**பியூட்டி சில்க்ஸ்**

69, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.
* முகூர்த்தப் பட்டுப்புடைவைகளின் தெரிவுக்கு பியூட்டி சில்க்ஸ்.
* ஒருமுறை விஜயம் செய்யுங்கள் அக்கணமே நீங்களும் பியூட்டியின் அபிமானிகள் என்பதில் சந்தேகமேயில்லை!

(C/23370)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஓக.30

ஏழாலை சிவபூதவராயர் பெருமான் ஆலய அலங்காரத் திருவிழா நாளை சனிக்கிழமை ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 10ஆம்திகதி சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. உற்சவ நாளகளில் தினமும் மாலை 6.30 மணிக்கு 'வாரியார் வாரிசு' வ.குமாரசாமியின் இன்னிசைச் சமயச் சொற்பொழிவு இடம்பெறும். (ஓ-9)

★ ★ ★

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

முன்னதாக எதிர்வரும் 4ஆம் திகதி புதன்கிழமைமுதல் தினமும் பூர்வாங்க கிரியைகள் இடம்பெறும். 8ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும். (ஓ-9)

★ ★ ★

மல்லாகம் புதுமைமாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தினமும் மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையும் திருப்பலியும் இடம்பெறும். எதிர்வரும் 8ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு திருநாள் திருப்பலியும், திருச்சொரூபப் பவனியும் இடம்பெறும். (ஓ-8)

★ ★ ★

பருத்தித்துறை ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயிலில் ஸ்ரீகிருஷ்ண ஜெயந்திவிழா நாளை சனிக்கிழமை இரவு விஷேட அபிஷேக ஆராதனையுடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து மறுநாள் அதிகாலை 5மணிக்கு பூந்தண்டிகையில் சுவாமி வெளிவீதிஉலா வருவார்.

இவ்விழாவினையொட்டி இரவு 8 மணிமுதல் 9.30 மணிவரை இடம்பெறும் சமயச் சொற்பொழிவை தொடர்ந்து, இந்தியக் கலைஞர்களின் நாதஸ்வர இசையும், வில்லுப்பாட்டும் இடம்பெறும். (ஓ-15)

★ ★ ★

உரும்பிராய் காளியம்பாள் ஆலய அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து ஒன்பது தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 9ஆம்திகதி காலை நவோத்தரசஸ்கர சங்காபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து மகேஸ்வர பூசை இடம்பெறும்.

உற்சவகாலங்களில் தினமும் ஷண்முககுமரேசன் பாலசண்முகன் கம்பராமாயணம் எனும் தலைப்பில் தொடர் சொற்பொழிவு நிகழ்த்துவார். (ஓ-9)

★ ★ ★

பன்னாலை தெல்லிப்பழை கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 12தினங்கள் நடைபெறுகின்றது. (ஓ-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம் நான்காம் குறுக்கு வீதியில் அமைந்துள்ள அடைக்கல அன்னை ஆலயத்தின் வருடாந்த திருவிழா வழிபாடுகள் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றன.

தொடர்ந்து மாலைநேரங்களில் நடைபெறவுள்ள நவநாள் வழிபாடுகளைத் தொடர்ந்து எதிர்வரும் செப்ரெம்பர் 7ஆம் திகதி சனிக்கிழமை மாலை நற்கருணை வழிபாடும் மறுநாள் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்கு திருநாள் திருப்பலியும் அன்னையின் திருச்சொரூப ஆசீரும் இடம்பெறும். (ஓ-51)

# நல்லைக் கந்தன் ஆலயச்சூழலில் இன்று நடப்பவை

நல்லூர் ஆலய உற்சவத்தை ஒட்டி ஆலயச் சூழலில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும் நிகழ்வுகள் பற்றிய விவரம் வருமாறு:-

❖ துர்க்கா மணிமண்டபத்தில் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் இசை ஆராதனை நிகழ்வில் மாலை 6 மணிக்கு லட்சுமிதேவி பாலகிட்டினரின் பாட்டுக்கச்சேரி. வயலின்-ஆர்.இராதாகிருஸ்ணன், மிருதங்கம்-எம்.மகேந்திரம், கடம்-எம்.லோகேந்திரன்.

❖ நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் அதிகாலை திருமுறை வீதிப்பஜனையும், குருமூர்த்த ஆலயத்தில் விசேட வழிபாடுகளும் இடம்பெற்று காலை 9மணிக்கு சமயதீட்சை வழங்கப்படும். தொடர்ந்து பூராணபடனம் இடம்பெறும்.

❖ அகிலஇலங்கை கம்பன் கழகத்தால் கம்பன் கோட்டத்தில் 6மணிக்கு நடத்தப்படும் தெய்வீக சொற்பொழிவில் 'கம்பரும் வள்ளுவரும்' என்ற தலைப்பில் லோ.துஷிகரனின் உரை.

❖ வடபிராந்திய இந்துசமயப் பேரவையின் ஏற்பாட்டில் அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசைமடத்தில் இடம்பெறும் தெய்வீக இசைச்சொற்பொழிவில்"ஆனந்தக்கூத்து" என்ற தலைப்பில் சிவத்திரு இரா.செல்லவடிவேலின் உரை.

❖ நல்லூர் சைவமகாசபையினரால் நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தெய்வீகத் தொடர் இசைப்பேருரையில் மாலை 5.45மணிக்கு "திரௌபதி கல்யாணம்" என்ற தலைப்பில் தானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ. நித்தியானந்தசர்மாவின் கதாப்பிரசங்கம். (ம-ரி-86)

## கிரிக்கெட் ஆட்டம் குறித்த கலந்துரையாடல்

ஜனசக்தி கிரிக்கெட் ஆட்டம் குறித்து ஆராய்வதற்காக நாளை மாலை 4.30மணிக்கு யாழ்மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ள கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு தனது செயற்குழு உறுப்பினர்களை யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கம் கேட்டுள்ளது.(ம-3)

## தென்மராட்சி தெற்கில்
# காலபோக நெற்செய்கைக்கு தயாராகும் விவசாயிகள்

தென்மராட்சித் தெற்குப் பகுதிகளில் காலபோக நெற்செய்கைக்கு விவசாயிகள் தயாராகிவருகின்றனர்.

குறிப்பாக, தச்சன்தோப்பு, நாவற்குழி, நெணியன்வெளி மற்றும் மேட்டு நிலப் பயிர்ச்செய்கைக்குரிய மயிலியான் தோட்டம் ஆகிய வயல்வெளிகளில் நெற்செய்கை மேற்கொள்ள விவசாயிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்த வயல்வெளிகளில் பல இடங்களில் ஷெல்கள் வீழ்ந்து வெடிக்காத நிலையில் புதைந்து காணப்பட்டதாகவும் -

அவை பின்னர் படையினரின் உதவியுடன் மீட்கப்பட்டதாகவும் விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - ஷெல்கள் வீழ்ந்து வெடித்த இடங்களில் பாரிய குழிகள் காணப்படுவதால் அவற்றை உழவு இயந்திரத்தின் உதவியுடன் செப்பனிட்டு வருவதாகவும் - விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-31)

## மோ.சைக்கிளால் விழுந்து பெண் காயம்!

ஓடிக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளில் இருந்து தவறிவிழுந்து ஒரு பெண் காலில் படுகாயமடைந்தார்.

சங்கரத்தையில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் நல்லூர், வைமன் வீதியைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் கௌசல்யாதேவி (வயது 44) என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார். இவர் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-15)


NEW SCIENCE COLLEGE
Jaffna.
PHYSICS
By.M.KARUNANITHY
2003 A/L
இலத்திரனியல்
Sat. - Sun. : 8.00 - 9.00
ஆரம்பம்:
31.08.2002
(7708)

நிறைஞ்சனாஸ் சங்கானை
அஜித், பிரியாகில் நடித்த
ரெட் (ரீலஸ்)
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்)
(C-23126)

ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு
ரஜனிகாந் மனிஷா கவுண்டமணி நடித்த
பாபா
காட்சிகள்: 10.30, 2.30, 6.00, 9.30
பல வருடங்களுக்குப் பின்னர்
இரவு 9.30மணிக் காட்சி காண்பிக்கப்படுகின்றது.
பலவித காட்சிகளும் வெட்டப்படாமல் காண்பிக்கப்படுகின்றன
(C-23125)

நாகம்ஸ் சுன்னாகம்
இன்றுமுதல் குதூகல ஆரம்பம்
சூர்யா, லைலா, ஸ்நேகா நடித்த
உன்னை நினைத்து (ரீலஸ்)
காட்சிகள் : 11.00, 3.00
சனி, ஞாயிறு: 11.00, 3.00, 6.30 (பு.நே.)
(7695)

லஷ்சுமி இணுவில்
அர்ஜுன், சாக்ஷி, செந்தில், வினித், திவ்யா, கவுண்டமணி நடித்த
வேதம் (ரீலஸ்)
தினசரி: 10.30, 2.30, 6.30 (பு.நே.)
(7704)

பதவி வெற்றிடம்
காவலாளி (WATCHMEN)
தகைமைகள்:
I. ஐந்தாம் வகுப்பில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.
II. நல்ல கண் பார்வையும் தேக ஆரோக்கியமும் இருத்தல் வேண்டும்.
III. சமாதான நீதிவான்/ கிராம அதிகாரி/ பாடசாலை அதிபர் மற்றும் அதிகாரிகளிடம் அண்மையில் பெற்ற நற்சான்றிதழ்களுடன் நாளை (31.08.2002) சனிக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு உதயன் பணிமனையில் பிரசன்னமாயிருக்கவும்.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
மனிதவள அலுவலர்,
உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/23378)


# மூன்றாவது பிறந்தநாள் வாழ்த்து

30.08.2002

செல்வன் சுரேஸ் விதுர்சன்



ஆனைக்கோட்டை, சோமசுந்தரம் வீதியைச் சேர்ந்தவர்களான திரு.திருமதி சுரேஸ் ~ விஜயமலர் தம்பதிகளின் செல்வப் புதல்வன்

விதுர்சன்


தனது மூன்றாவது பிறந்ததினத்தை இன்று (30.08.2002) வெள்ளிக்கிழமை ஆனைக்கோட்டை, சோமசுந்தரம் வீதியிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் குதூகலத்துடன் கொண்டாடுகிறார்.

விதுர்சனை அன்பு அப்பா, அம்மா, அக்கா (ஜேர்மனி), ஆனைக்கோட்டையில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, தாளையடி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த அம்மம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமா, மாமி மற்றும் ஆனைக்கோட்டையில் வசிக்கும் மாமாமார், மாமிமார், சதீஸ், சித்தப்பா, சித்தி (நோர்வே), ருபன் சித்தப்பா (இத்தாலி), ரஞ்சன் சித்தப்பா (லண்டன்), பிரதீபன் சித்தப்பா (இத்தாலி), ரகு சித்தப்பா, சித்தி, பாபு சித்தப்பா, மச்சான்மார், மச்சாள்மார், அண்ணன்மார், அக்காமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஆனைக்கோட்டை மூத்தநயினார், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் அருள்பெற்று பல்கலையும் கற்று சீரோடும் சிறப்போடும் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்க என மனமார வாழ்த்துகின்றார்கள்.

வாழ்த்துபவர்:
தங்கவேலாயுதம் ஜெயரூபன் (ரகு)
குடும்பத்தினர்.

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை. (7714)

# 12ஆவது ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 05 - 11 - 1917 | 18 - 07 - 1990 |

## அமரர் வைத்திலிங்கம் சிங்கவேலு

(முன்னாள் உரிமையாளர், மருதனார்மடம் எரிபொருள் நிலையம்)

திதி: 2002-08-30

*அப்பா! இதயம் உள்ளவரை*
*தொடரும் உங்கள் நினைவலைகள்!*

*238, கோயில் வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.* (7716)

உங்கள் பிரிவால் துயருறும்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## அரியரத்தினம் விக்கினேஸ்வரன்

இணுவில் கிழக்கு, அங்கிலிப்பாயைச் சேர்ந்த அரியரத்தினம் விக்கினேஸ்வரன் 28.08.2002 புதன்கிழமை சுவிஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அரியரத்தினம் - செல்லம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான துரைரத்தினம் - இராஜேஸ்வரியின் அன்பு மருமகனும், வனஜாவின் அன்புக் கணவரும் நிரோஜன், நிலாவரி, நிதர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீபாலச்சந்திரன், ஸ்ரீரஞ்சினி, சூரியகலா, கெங்காதரன் (சுவிஸ்), கௌரி, காசியானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.09.2002 திங்கட்கிழமை சுவிஸில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ.செல்லம்மா (தாய்),
அ.ஸ்ரீபாலச்சந்திரன் (அண்ணா).

*இணுவில் கிழக்கு,*
*அங்கிலிப்பாய்.* (77.15)

## பசுபதிச்செட்டியார் பாலசுப்பிரமணியம்

(முன்னாள் உரிமையாளர், பாலன் அபன் வேக்ஸ், K.K.S. வீதி)

வெண்ணாப்பண்ணையைப் பிறப்பிடமாகவும் கல்லடி வீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் மானிப்பாயை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட பசுபதிச்செட்டியார் பாலசுப்பிரமணியம் நேற்று (29.08.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் செல்வரத்தினத்தின் (கிராம உத்தியோகத்தர், நுணாவில் கிழக்கு, J/306) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன் செட்டியார் பசுபதிச்செட்டியார் - பசுபதிச்செட்டியார் நாகலட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும் நித்தியகல்யாணி (அவுஸ்திரேலியா), மங்கையர்க்கரசி (கொழும்பு), கனகாம்பிகை (கனடா), கௌரிநாயகி (கொழும்பு), வெங்கடநாயகி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற திருஞானசம்பந்தர் (DLO), சிதம்பரநாதன் (கொழும்பு), இலங்கைநாதன் (கனடா), காலஞ்சென்ற சிவச்செந்தில்நாதன், தேவமனோகரி (ஆசிரியை, கைதடி நுணாவில் அ.த.க.பா.), மனோரஞ்சிதம் (பிரான்ஸ்), சாரதாதேவி (விசுவமடு), குகநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.08.2002) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது தற்காலிக வதிவிடத்தில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
*பொன்னாலை வீதி,*
*மானிப்பாய் மேற்கு,*
*மானிப்பாய்.*

நிரந்தர முகவரி:
*கல்லடி வீதி,*
*சாவகச்சேரி.*

தகவல்:
பா.பாலமுரளி
(பெறாமகன் - சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
(77.17)

## திருமதி கதிரவேலு பத்மதேவி

காரைநகர், பலுகாட்டைப் பிறப்பிடமாகவும் களவிலிப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிரவேலு பத்மதேவி அவர்கள் நேற்று (29.08.2002) வியாழக்கிழமை இந்தியாவில் காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.சற்குணதேவி
(மகள்)

*இல. 37, சிவப்பிரகாசம் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (7718)

## ஜனாதிபதி பங்குபற்றினாலும், பங்குபற்றாவிட்டாலும்
# செப். 3ஆம் திகதி கூடும் விசேட கூட்டத்தில் 18ஆவது திருத்தச்சட்டம் குறித்து இறுதிமுடிவு

கொழும்பு,ஓக.30

அரசமைப்புச் சட்டத்திற்கு கொண்டுவரப்படவிருக்கும் 18 ஆவது திருத்தம் குறித்து அடுத்தமாதம் 3 ஆம் திகதி இறுதிமுடிவு மேற்கொள்வதென அமைச்சரவை தீர்மானித்திருக்கிறது. இதற்கென அமைச்சரவை அன்று விசேடமாகக் கூட்டப்படும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் பங்குபற்றினாலும், பங்குபற்றாவிட்டாலும் அன்று இறுதித் தீர்மானம் மேற்கொள்வதென்று நேற்றுமுன்தினம் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

வெளிநாடு சென்றிருப்பதால் ஜனாதிபதி இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. ஆயினும் லண்டனிலிருந்து ஜனாதிபதி பிரதமருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்திருக்கிறார் என்றும் 18ஆவது அரசமைப்புச் சட்டத்திருத்தம் குறித்து ஆராய இரண்டு வார அவகாசம் கோரியிருக்கிறார் என்றும் அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

ஜனாதிபதியின் கோரிக்கையை ஆராய்ந்த அமைச்சர்கள், செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதிக்கு முன் நாடு திரும்பி இது தொடர்பாக தீர்மானம் மேற்கொண்டு அமைச்சரவைக் கூட்டத்தில் பங்குபற்ற வேண்டுமேயானால் ஜனாதிபதி அவ்வாறு செய்யலாம் என்று சுட்டிக்காட்டினர் எனவும் தெரிகின்றது.

26ஆம் திகதியிடப்பட்ட ஜனாதிபதியின் கடிதத்துக்கு பிரதமர் ரணில் 28ஆம் திகதி பதில் அளித்திருக்கிறார். ஜனாதிபதியின் கோரிக்கையை அமைச்சரவையில் சமர்ப்பிப்பதாகவும் அமைச்சரவை அது குறித்து தீர்மானம் மேற்கொள்ளும் எனவும் பிரதமர் அப்பதிலில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

செப்ரெம்பர் 3ஆம் திகதி அமைச்சரவையின் அவசரக் கூட்டத்தைக் கூட்டி 18ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் குறித்து இறுதித் தீர்மானம் மேற்கொள்வது எனவும் -

அதையடுத்து செப்ரெம்பர் 10ஆம் திகதி சட்டத்திருத்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது எனவும் - அமைச்சரவை தீர்மானித்திருக்கிறது.

அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் ரணில் கருத்துவெளியிடுகையில், குறிப்பிட்ட சட்டத்திருத்தம் என்ன என்பதைத் தான் அறியவில்லை என்று ஜனாதிபதி கூறியிருந்தாலும் அச்சட்டத்திருத்தத்தின் பிரதியொன்று ஜனாதிபதி மாளிகைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்று சொன்னார்.

(ம)

## 2,035 குடும்பங்கள் வன்னியிலிருந்து தென்மராட்சிக்கு!

தென்மராட்சி,ஓக.30

வன்னிப் பிரதேசத்திலிருந்து தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள சொந்த இருப்பிடங்களுக்கு இதுவரை 2 ஆயிரத்து 35 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளதாக பிரதேச செயலக திட்டமிடல் பிரிவின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இக்குடும்பங்களுக்கு ஜூன், ஜூலை, ஓகஸ்ட் மாதங்களுக்குரிய உலர் உணவுப் பொருள்கள் அந்தந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடைகள்மூலம் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ு-117)

### கைதிகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

★ கணபதிப்பிள்ளை கனகேஸ்வரன் - 12ஆம் வட்டாரம், புங்குடுதீவு.

★ கிருஷ்ணபிள்ளை லிங்கேஸ்வரன் - பூதராயர் கோயில் ஒழுங்கை, பருத்தித்துறை.

★ நவரத்தினம் சிவகுமார் - புளியங்கூடல், ஊர்காவற்றுறை.

★ குமரேசு கமலேஸ்வரன் - பண்டத்தரிப்பு.

★ வேலாயுதம் வரதராஜன் - கரணவாய் தெற்கு, கரவெட்டி.

★ செல்லத்தம்பி பாஸ்கரன் - 180, கொலனி வீதி, பொலநறுவ. (யாழ்ப்பாணத்தில் வசிப்பவர்).

★ கேதீஸ்வரி சாந்தி - பூதர்மடம், கோப்பாய் வடக்கு.

★ தணிகாசலம் தவச்செல்வி - வேலணை மேற்கு, வேலணை.

★ தண்டபாணிசர்மா பிரவீணா - நவிண்டில், கரணவாய் வடக்கு.

விடுவிக்கப்படுபவர் தொடர்பாக மேலதிக விவரங்கள் தேவைப்படும் அவர்களது உறவினர்களை இன்று காலை 10 மணிக்கு முன்னர் யாழ். மாவட்ட அரசியல்துறையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(ம-3)

### எதிர்க்கட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவர் தனியாக எடுத்த முடிவை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொன்னார்.

தொடர்ந்து பேசிய அவர், அது கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவல்ல. எதிர்க்கட்சித் தலைவர் எங்களுடன் கலந்து பேசவும் இல்லை. இன்று காலை சபாநாயகர் எம்மை அழைத்துப் பேசும்வரை இது பற்றி எமக்குத் தெரியாது.

விவாதம் பின்போடப்பட வேண்டும் என்ற எதிர்கட்சித் தலைவரின் கோரிக்கைக்கு நாம் உடன்பாடில்லை. அவரின் நடவடிக்கையினால் அவர் மீதே நம்பிக்கை இழக்கும் நிலை உருவாகி விட்டது என்றார்.

ஜே.வி.பி. உறுப்பினரின் குற்றஞ்சாட்டுகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ சூடாகப் பதில அளித்தார்.

இப்பிரேரணை விவாதத்துக்கு ஒரு நாள் போதாது. கூடுதலானவர்கள் பேச சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். இது தொடர்பான முடிவு தனிப்பட்ட முறையில் நான் எடுத்தது அல்ல. இது குறித்து நடத்தப்பட்ட கூட்டத்தில் ஜே.வி.பி. உறுப்பினர்கள் எத்தனை பேர் கலந்துகொண்டனர் என்பதைக் கூறவா?

- இவ்வாறு அவர் கூறினார். உடனே விமல் வீரவன்ச அதற்குப் பதிலளித்தார்.

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நான் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. கவிழ்ந்து போகும் கப்பலுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ எவரும் ஆதரவளிப்பது குறித்து நாம் கவலைப்படவில்லை. எங்களுடைய கோரிக்கை, விவாதம் பின்போடப்படக் கூடாது என்பதேயாகும் என்று வீரவன்ச கூறினார்.

அச்சமயம் இந்த மோதலில் குறுக்கிட்ட சபை முதல்வரும் நீதி அமைச்சருமான லொக்கு பண்டார, எதிர்க்கட்சித் தலைவரும், மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனவும் சபாநாயருக்கு எழுதிய கடிதங்களை ஆதாரம் காட்டி அரசு விவாதத்தைப் பின்போடவில்லை என்றார்.

இதனை தினேஷ் குணவர்த்தனவும் ஆதரித்தார்.

இதையடுத்து சபையை இன்று காலை பத்து மணிவரை ஒத்திவைப்பதாக சபாநாயகர் அறிவித்தார். (ம)

## மாணவிகளுடன் சேஷ்டை புரிவோர் மீது விசாரணை

தென்மராட்சி,ஓக.30

வடமராட்சிப் பகுதியில் மாணவிகள்மீது சேஷ்டை விடும் இளைஞர்கள் கலாசாரத்தைப் பாதுகாக்கும் குழுவினரால் விசாரணைக்குட்படுத்தப்படும் நிகழ்வுகள் இடம்பெற்றுவருகின்றன.

கரவெட்டி யார்க்கரு பாடசாலைக்குச் சென்ற மாணவிகளுக்கு அடிக்கடி தொல்லை கொடுத்த இளைஞர்கள் சிலர் அண்மையில் விசாரணைக்குட்படுத்தப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சியில் பாடசாலை மற்றும் ரியுசனுக்குச் செல்லும் மாணவிகள் இளைஞர் குழுக்களால் அடிக்கடி இடையூறுகளுக்குள்ளாவது குறிப்பிடத்தக்கது.

(ம-147)

### காரைநகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆ.முருகவேல் (வயது 26), ச.சிவக்கொழுந்து (வயது 55), மு.சிவராசா (வயது 36), க.சகாதேவன் (வயது 40) ஆகியோரும் கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகினர். இவர்கள் அனைவரும் காரைநகர் பிட்டியெல்லை, ஊரிப்பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். (ம-73)

### வலி.வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது. அங்கு தெரிவிக்கப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:-

✹ தெல்லிப்பழை யூனியன், மகாஜனக் கல்லூரிகளுக்கு மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள் செல்ல விசேட பஸ் சேவை ஒன்றைத் தெல்லிப்பழை பிரதான வீதி வழியாக நடத்துவது.

✹ வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்துக்கும் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் செல்ல பஸ் சேவை நடத்துவது.

✹ மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படும் பிரதேசங்களில் நடுகை செய்வதற்காக 4 ஆயிரம் தென்னங் கன்றுகளையும், பனம் விதைகளையும் வழங்குவது.

✹ சேந்தாங்குளம் ஊடாக காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை மக்கள் கீரிமலைக்குச் செல்ல அனுமதிப்பது.

✹ தென்மராட்சியில் மிருசுவில படித்த மகளிர் திட்டம், முகமாலை ஆகிய பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர ஏற்பாடு செய்வது - ஆகிய முடிவுகளே அங்கு எடுக்கப்பட்டன.

(ம-3)

### மறியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுஅமைப்புகள் முடிவு செய்துள்ளன.

காரைநகரில் செயற்படும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் நேற்றுக்கூடி இந்த முடிவுகளை எடுத்துள்ளனர்.

(ம-3-73)

### இராணுவ உதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கழகத்தின் சிரேஷ்ட உதவித் தலைவரும், தெற்காசியாவுக்கான அமெரிக்காவின் முன்னாள் உதவி அமைச்சருமான றொபின்ராபிலே இந்த உயர்மட்ட குழுவுக்கு தலைமை வகிக்கின்றார்.

இலங்கை இராணுவத்துக்குத் தேவையான போதனை, பயிற்சி நடவடிக்கைகள் குறித்து, இக்குழு மதிப்பீடு செய்வதுடன் எதிர்காலத்தில் அமெரிக்க உதவி வழங்க வேண்டிய விடயங்களையும் அடையாளம் காணும் முயற்சியில் ஈடுபடும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்கா ஜனாதிபதி புஷ்ஷுக்கும், இலங்கைப் பிரதமர் ரணிலுக்கும் இடையில் கடந்த ஜூலை மாதம் வாஷிங்டனில் நடந்த சந்திப்பின் விளைவாகவே அமெரிக்கப் பாதுகாப்புத் துறையின் உயரதிகாரிகள் கொழும்புக்கு வருகை தருவதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ் கருத்துத் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக இலங்கை அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா தரும் ஆதரவை உறுதிப்படுத்தும் வகையில் இவ்விஜயம் அமைவதாகவும் கருத்து வெளியிடப்பட்டது. (ம)

கணக்கீடு A/L 2004
தொங்கல் கணக்கு
ஆரம்பம்:
நாளை 2.00 p.m.
S.தவா
B.Com. (Hons) (Acc.Sp.)
NEW SCIENCE COLLEGE
Jaffna.
(7712)

கணக்கீடு
A/L 2003 / Day
பங்குடைமை முடிவுக் கணக்கு
✹ NEW SCIENCE COLLEGE Jaffna.
✹ NIRU TUITION CENTRE Kondavil.
ஆரம்பம்: நாளை
ஆசிரியர்: S.தவா
(7711) B.Com. (Hons) (Acc. Spl.)

D.C.M
பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம்
(அப்பலோ வைத்தியசாலைக்கு அருகே)
யாழ் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள்
G.A.Q : I[st]. IN. COM
2003
கல்வியாண்டு
✪ க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களிடமிருந்தும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களிடமிருந்தும் இப் பாடநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
✪ பதிவுகள் அனைத்தும் எமது நிறுவனத்தால் செய்து தரப்படும்
✪ மாணவர்களின் நன்மை கருதி புதிய பிரிவுகளுக்கான விரிவுரைகள்
ஆரம்பம்.7.09.2002
S.வரதராஜன்
இயக்குநர் D.C.M
யாழ்ப்பாணம்

D.C.M
A/L 2003 DAY CLASS
7.30 - 8.30 தமிழ் குழந்தை
8.30 - 9.30 இ.நாகரிகம் ஸ்ரீஸ்
9.30 - 10.30 அளவையியல் பவான்
10.30 - 11.30 நாட அரங்கியலும் சுதன்
11.30 - 12.30 புவியியல் குமரன்
8.00 - 9.30 கணக்கீடு முகுந்தன்
9.30 - 10.30 பொருளியல் வரதராஜன்
10.30 - 12.00 வணிகக்கல்வி உமாகாந்த்
ஆரம்பம்: 02.09.02 - திங்கள் -

NEW SCIENCE COLLEGE
(கன்னாதிட்டி - யாழ்நகர்)
LOGIC
S.R.J.சுதன்
A/L DAY CLASS
ஆரம்பம்: 03-09-2002
செவ்வாய்: 10.00 a.m. (ப.நே.)
(ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்.)
(7664)

MATHS CENTRE
Nelliady.
A/L DAY CLASS
வணிகப் புள்ளிவிவரவியல்
திரு.சிவா
நாடகமும் அரங்கியலும்
திரு.பிரதீபன்
ஆரம்பம்:
31.08.2002
9.00 a.m. (ப.நே.) (7689)

கிங்ஸ் பியர் கீழ்க்காணும் சில்லறை விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.
Kings LAGER
Kings EXTRA STRONG STOUT
Kings PILSNER
BISON EXTRA STRONG LAGER
கிங்ஸ் லாகர் - ரூ. 60.00
கிங்ஸ் ஸ்ரவுட் - ரூ. 80.00
மைசன் எக்ஸ்ரா ஸ்ரோங் - ரூ. 95.00
கிங்ஸ் பில்ஸ்னர் - ரூ. 75.00
கிங்ஸ் என்று கேட்டு வாங்குங்கள்
உத்தரவு பெற்ற சகல மதுபான நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்
ஏக விநியோகத்தர்கள்
வாமாஸ்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். Tel.2983

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.08.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.